தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்கள் இதழ்

இன்னலிலே, தமிழ் நாட்டி னிலேயுள்ள
என்தமிழ் மக்கள் துயின்றிருந்தார்.
அன்னதோர் காட்சி இரக்க முண்டாக்கி யென்
ஆவியில் வந்து கலந்ததுவே''

வைகாசி. தி.பி. ௧௯௯௫

பாரதிதாசன் நினைவிதழ்

50 காசு

தென்மொழி

கலைத் தமிழ்
இலக்கியத் திங்களிதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 2. | வைகாசி–தி. பி. 1995 (1964 மே) | ஓலை 4.

பாரதிதாசனார்......

இதைக் கண்ணீரால் எழுதுகின்றோம்! பாவேந்தர் பாரதிதாசனின் மறைவு தமிழரின் உரிமை முழக்கத்தில் விழுந்த இடி! அவர்தம் விடுதலை உணர்வில் ஏற்பட்ட நிலநடுக்கம்!

எரிமலையன்ன புரட்சிக் கனல் எழுப்பிக் கொண்டிருந்த பாவலர், தமிழ்க்கும் தமிழகத்திற்கும் ஆற்ற வேண்டிய பணி ஏராளமாக எஞ்சியுள்ளது. தமிழர் கடந்த ஆயிரம் ஆண்டுகளாகவே சமயத்தாலும், மொழியாலும், ஆட்சியாலும் அடக்கி ஒடுக்கப்பட்டவராகவே இருந்து வந்துள்ளார். அவர் தம்மிடையே கிளர்ந்தெழுந்து முதன் முதல் உரிமைக் குரலை எழுப்பியவர் பாவேந்தர் பாரதிதாசனே எனின் மிகையில்லை. அவர் தம் எழுச்சியால் தமிழர்தம் உள்ளுணர்வு கீண்டப் பெற்று, விடுதலை உணர்வு புடை திரண்டு வருகின்ற நேரம் இது! அவர் மூட்டிய புரட்சிக் கனல் தமிழ் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியுள்ளது. ஆட்சிக்கு ஆட்சி தமிழர்க்கேற்பட்ட விடுதலை வீழ்ச்சிக்குப்பாவேந்தர் பாரதிதாசன் ஒரு முற்றுப்புள்ளி வைத்தார்

கூன் விழுந்து கோழையாகக் கிடந்த தமிழனை, நிமிரச் செய்தன அவரின் பாடல்கள்! வல்லாண்மைபடைத்த பேரரசன் ஒருவனுக்குஇருக்கவேண்டிய சொல்லாண்மையும்,செம்மாப்பும்,

சிறப்பாசிரியர்: புலவர், பண்டித ஞா. தேவநேயப் பாவாணர்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

உறுப்பாசிரியர்: தங்கப்பா, மு. சாத்தையா, செம்பியன்.

உரிமை, வெளியீடு: தாமரை, உலக முதல்வி.

அச்சகம்: மித்திரா, கடலூர்-2.

பிறழாவுணர்வும், பீடுநடையும் இப்பாவேந்தர்க்கு மிக்கிருந்தன. தமிழர்க்குக் கிடைக்கவேண்டிய விடுதலையாட்சியில் வெற்றிப் பண் பாடவேண்டிய இப் புதுமைக் குயில்—புரட்சிக் குரல்—இவ் வளவு விரைவில் மறைந்து போகும் என்று நம்மில் எவரும் நினைக்கவில்லை. நெஞ்சுரமும் சொல்லுரமும் நிலைசாம்பிக் கிடக்கும் தமிழ்ப்புலவர் கூட்டத்திடை, எழுந்து நின்று விடுதலை முரசு கொட்டிய இவர், தமிழக உரிமை வரலாற்றின் முதல் படியில் என்றென்றும் அழியாமல் நிற்பார். இவர்தம் எழுத்தும் பாட்டும், அவற்றில் கனன்று கொண்டிருக்கும் உணர்வும், சூடும் என்றும் தமிழர்க்குத் தோன்றாத் துணையாக நிற்கும். இளைஞர் உலகம் இவரை மறத்தல் ஆகாது ''பாவலர்கள் அமைதியானவர்கள்! இருந்த இடத்தில் இருந்து கொண்டே பறந்து திரியும் வானம்பாடிகள்! மலர்க்கு மலர் தாவிப்பறந்து தேன் மாந்தி மயங்கும் வண்டினங்கள்! அவர் மக்களைப் பற்றி உணரார்; அவர்தம் வெறியுணர்வு உடனுக்குடன் எழுந்து அடங்குவதாயும், அவர்தம் மறம் ஓசையற்று வெடிக்கும் வாண மாகவும் இருக்கும்'' என்றெல்லாம் பேசப்பட்டு வந்த பாவலர் கூட்டத்தில் கொதித்தெழுந்த கோளரியாய், வரிப் புலியாய்த் தோன்றி மறம்பாடித் திரிந்த மறவன் பாரதிதாசன். இனித் தமிழர்க்கென்று உரிமைக் குரல் கொடுக்க ஒருவருமிலர்.

சோற்றுக்கும் துணிக்கும், மக்கட்கும் மனைக்கும் தங்கள் கருத்தையும், வாழ்வையும் அடகு வைக்கும் புலவர் கூட்டம் இனித் தலை தப்புதல் அரிது. அவர்தம் சொல்லாற்றலும் மொழி யுணர்வும் கேட்பாரின்றி அழிந்துபடுமோ என அஞ்ச வேண்டி யுள்ளது! காட்டிய வேலுக்கும் வாளுக்கும் அஞ்சாத இப்புரட்சிப் பாவலர் மாய்ந்தபின்றைப்,புலவரெல்லாரும் நீட்டிய விரலுக்கும் முன் நில்லாது நெடுங்கிடையாய் விழுந்து கிடக்கும் நிலை வந்தா லும் வரும்! கோணல் உள்ளம்கொண்ட பாறை அரசாட்சியைப் பாட்டு வெடியால் தகர்த்துச் சுக்கு நூறாக்கிய பாவலரின் உணர்வை இளைஞர் கூட்டம் மட்டுமே உணரும் தகைமை வாய்ந்தது; உணர்ந்து செயல்புரியும் உளவாண்மை உடையது! அவர்தம் முயற்சிக்குப் பாவலர் பாரதிதாசன் கல்லறை ஒரு கலங்கரை விளக்கம்!

நல்லவரைப் பேணத் தெரியாத நாடு நம் நாடு! உண்மை நெஞ்சினுக்குப் புன்மை செய்யும் மக்கள் நம் மக்கள்! நன்றி யழித்த நெஞ்சினராய் இவ்வறம் குன்றிய தமிழர்களைக் குடியரசு என்னும் பெயரால் விழுங்கக் காத்திருக்கும் இவ்வரசாட்சியில் தலையாட்டி மார்களே தம்பிரான்மார்கள்! கால் கை பிடித்தவர் களே கோல் கை பிடிக்கும் தகுதி பெறுவர்! அடிதடிகளே அமைச்சர்கள்! எடுபிடிகளே காவலர்கள்! இத்தகைய குழுகாயச் சூழ்நிலையில் எழுந்து நடமாடுந் திறமுள்ளவர் ஒருவரும் இல்லர்.

இந்நிலையுணர்ந்த அரசியல் தலைவர்களுக்கெல்லாம் பாவலரின் எழுத்து கூர்மை சான்ற கைவாள்! கடமை யுணர்வொடு ஒவ்வொரு தமிழனும் செயலாற்றத் தொடங்குவானாயின் பாவலர் நோக்கிய தமிழக மலர்ச்சி சேய்மையிலில்லை; மிக அண்மையில் உள்ளது என்று உணர்வான். இத்தகைய குமுகாய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட அவர் உள்ளம் என்றென்றும் தமிழர் நெஞ்சங்களில் பொருந்திக் கிடக்குமாக!

மூவேந்தர் சேர்ந்தெதிர்த்த முப்படைக்கும் மேலன்றோ
பாவேந்தர் செஞ்சொற் படை!

* * *

......பக்தவத்சலமும்!

இதைக் குருதியால் எழுதுகின்றோம்!

"தென்னகத்தில் இந்தியைக் கற்க உண்மையில் எதிர்ப்பு எதுவும் கிடையாது. இப்பொழுது அதை எதிர்த்து வருபவர்கள் எல்லாரும் முற்றிலும் அரசியல் நோக்கத்திற்காகவே எதிர்த்து வருகின்றனர்."

"இந்தியால் தமிழ் சிதைவுறும் என்று சில எதிர்க்கட்சிகள் தேவையற்ற கூச்சல் போட்டு வருகின்றன"

"தமிழ் நாட்டில் குழந்தைகள் கட்டாயப்படுத்தாமலேயே இந்தி கற்று வருகின்றன."

"தில்லியிலும் பிற இடங்களிலும் உள்ள தென்னிந்தியர்கள் இந்தியை மிக நன்றாகப் பேசுவதைக் கண்டு, நான் மகிழ்ச்சி அடைகின்றேன்."

"இங்கிருந்துகொண்டு இந்தி படிக்கமாட்டேன் என அடம் பிடிப்பவர்கள் எங்கேனும் பாகித்தானுக்கு ஓடிவிடுவதுதானே"!

இவையும், இவை போன்ற பிறவும் அவ்வப்பொழுது தமிழ் நாட்டின் முதல் அமைச்சராய் இருந்துகொண்டிருக்கும் திரு. பக்தவத்சலனாரின் உளறல்கள்; உள்ளப் புழுக்கங்கள்! வடநாட்டு மொழி வெறியரின் காசுக்குப் பேசிய கடமை மொழிகள்! இந்தியைப் பரப்புவதிலும் தமிழகக் குழந்தைகளின் வாய்களில் அதனை நுழைத்து விழுங்கச் செய்வதிலும் முதலமைச்சருக்கு ஏனோ இந்தக் கவலை . . . ?

அமைச்சரின் அடிமுடிமுற்றும் வடவர் ஆட்சிக்கு அடிமைப்பட்டுக்கிடக் கட்டும்; அவரின் உள்ளமும், உயிரும் இந்தி வெறியரின் நினைவுகளை அடிக்கடி நினைத்து மகிழட்டும்; அவர் தம் உடல் தோலை முற்றும் உரித் தெடுத்துக் கட்டிலளவு முரசங்கட்டி இந்திப் பண்ணைக் கொட்டி முழக்கட்டும்; அவை பற்றியெல்லாம் நாம் கவலைப்படவில்லை. நமக் குற்ற கவலையெல்லாம் தமிழைப் பற்றியும் தமிழர்களைப் பற்றியும் தமிழர் நாட்டைப் பற்றியும் ஒருமுகமான கருத்தறிவிக்க இவர்க்கு உரிமை கொடுத்தவர் யார் ? என்பதே! தமிழக மக்கள் தொகையில் பெருவாரி யான ஒப்போலைகளைப் பெற்று, சென்ற தேர்தலினும் மிகுதியான ஆட் களைச் சட்ட மன்றத்தில் அமர வைத்திருக்கும் ஓர் எதிர்க்கட்சியை வைத்துக்கொண்டே இவர் இப்படிப் பேசி வருவதென்னில், நடுவ ணரசு ஆட்சியாளர் தம்மால் இவரின் கைகள் எத்தகைய வலுவூட்டப் பெற்றிருக்கும் என்பதை உண்மைத் தமிழர்கள் சற்றே எண்ணிப் பார்க்க வேண்டுகின்றோம்.

இத்தகைய பொருளற்ற புன்மொழிகளை அமைச்சர்கள் அடிக்கடி பேசி வரத்தொடங்கியுள்ளனர். ஏறத்தாழ ஐநூற்றுவரை இந்தியெதிர்ப் பின் காரணமாகச் சிறைப்படுத்தி வைத்திருக்கும் திரு. பக்தவத்சலனார் 'தமிழகத்தில் இந்திக்கு எதிர்ப்பில்லை' என்று தில்லியில் போய் முழங்கு வதும், "அப்படியா, மெத்த மகிழ்ச்சி; அந்த ஆட்களை இதுநாள் வரை விட்டு வைத்திருப்பதே தப்பு" என்று திரு. இலால் பகதூர் சாத்திரியார் இவர்க்கு உளவு கூறி வருவதும் இவ்வாறே நடந்து கொண்டிருக்குமானால், "தமிழகத்தில் மொழிப்புரட்சி விரைவில் தமிழ் மக்களால் நடத்திக் காண்பிக்கப் பெறும்" என்றும் 'அத்தகைய வல் லுணர்வை நூறு வத்சலங்களும், ஆயிரம் சாத்திரிகளும் வந்தாலும் அடக்குதல் ஒண்ணாது" என்றும் துணிந்து கூறுகின்றோம். தமிழக விடுதலைப் பாவலர் பாரதிதாசன் மேல் ஆணையிட்டுச் சொல்கின்றோம்: உண்மைத் தமிழன் ஒருவன் உள்ளவரை, அவன் உயிரில், உணர்வில் தமிழுணர்வு என்றும் மாறுத புயல் முடுக்கத்தோடு கனன்று கொண் டுள்ள வரை, தமிழக மண்ணில் இந்திக்கு ஆட்சியில்லை. இந்திமொழி சிறந்ததாகவோ உயர்ந்ததாகவோ எதுவாகவோ இருந்தாலும் கூடக் கவலையில்லை! பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாய் இலக்கிய இலக்கண வழக்கு முதிர்ந்ததும், இற்றை நாகரிக நிழலாட்டங்களுக்குக் கூட முற்றும் இடங்கொடுப்பதும், இனிவரும் அறிவியல் முன்னேற்றங் கள் அத்தனைக்கும் வழி வகுத்துக்கொள்ளும் ஆற்றல் வாய்ந்ததுமான தமிழ் மொழி தமிழனுக்கென்று உள்ள வரையில் இந்தி இங்குத் தலை தப்புதல் அரிதென்று ஆட்சி மேலரும், அவர் தம் வாலரும் உணர்ந்து கொள்வாராக!

○ ○ ○

வரலாறு

புரட்சிப் பாவலர்

பாரதிதாசன்

(1891–1964)

பாரதிதாசன்.........!

நன்கு பழகிய பெயர். தமிழர் உள்ளங்களிலும், நாவிலும் என்றென்றும் நிலவி வரும் தமிழ் உரு ஒன்றின் சொல்லுருவம் அது! அச் சொல்லைக் கூறினமட்டிலேயே புதுச்சேரி நினைவுக்கு வரும். அங்கு மணக்கும் தமிழ் நம்நெஞ்சில் இனிக்கும்; அந்தத் தமிழ் வாழ்ந்த தெருக்களின் நடுவில்–தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையில்–தமிழ்த் தழும்பேறிய நாவும், தமிழ் உரம் ஏறிய நெஞ்சும் தமிழ் விளையாடிய பாவும்கொண்டு தமிழே உருவமாய் பெருமிதத் தோற்றத்தோடு பாரதிதாசன் என்னும் பெயர்க்குரிய ஓர் உருவம் நம்மிடையே வாழ்ந்து வந்தது. இன்று அத்தமி ழுருவம் நம்மிடையில் இல்லை. ஏறத்தாழ எழுபத்து நான் காண்டுகள் வாழ்ந்து, செந்தமிழ்க்கும், தமிழர்க்கும் தமிழ் நாட் டிற்கும் நல்லரிய தொண்டு செய்து, எண்ணற்ற பாமணிகளை வாரி வழங்கி, தமிழே தன் மூச்சாய் வாழ்வாய், இன்பமாய் இருந்தவர் பாரதிதாசன் என்னும் புனைபெயர் கொண்ட திரு. கனக. சுப்புரத்தினம்.

'நல்லுயிர், உடம்பு, செந்தமிழ் மூன்றும்,
நான் நான் நான்'

என்று தம் தோற்றத்தை விளக்கும் அவ்வரிய தமிழ்ப் பாவேந் தன், வெறும் பாரதிதாசனயிராமல் தமிழ்ப் புரட்சி செய்த முதல் புரட்சிப் பாவலனாய் இத்தமிழகத்திடை வாழ்ந்து வந்தார். அவர் வரலாறு தமிழின் மறுமலர்ச்சி வரலாறும்; தமிழ் நாட்டின் உணர்வெழுச்சிக் கதையாகும்; தமிழர்தம் மான உணர்வுக்குக் கலங்கரை விளக்காகும். தமிழ் உள்ள வரை நிலைத்து நிற்கும் ஆற்றல்வாய்ந்த அவரின் இனிய,எளிய, செந்தமிழ்ப்பாடல்கள் அவர்தம் நினைவுப் படிமமாக என்றென்றும் தமிழ் மக்கள் தம் நெஞ்சங்களில் ஒலிக்கும்! அவர் வாழ்க்கைக்கு வழிகாட்டிக்

கொண்டிருக்கும்! அவர் தம் நாடி நரம்புகளை முறுக்கேற்றிக் கொண்டிருக்கும்! அவர் வாழ்வு ஒரு பாட்டு இலக்கியம்.

புதுவையில் பெரிய சரக்கு மண்டியொன்று வைத்துப் பெருநிலை மளிகைவாணிகராக இருந்த திரு. கனகசபை என்பார்க்கும் மகாலட்சுமி அம்மைக்கும் 1891-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29 ஆம் நாள் திருமகனாகப் பிறந்தார் நம் பாரதிதாசன். இவரின் இயற் பெயர் சுப்புரத்தினம் என்பது. இளமையிலேயே சுறு சுறுப்பும், இயற்கைமேல் நாட்டமும், இசை விருப்பமும் கொண்டவராக இவர் இருந்தார். அக்காலத்தில் புதுச்சேரி பிரஞ்சுக் காரரின் ஆட்சிக்குரியதாக இருந்தமையால், பள்ளியில் பிரஞ்சு மொழியே சிறப்பாகச் சொல்லித் தரப்பெற்றது. சுப்புரத்தினமும் பிரஞ்சு மொழிப் பள்ளியில் சேர்க்கப்பெற்றார் எனினும் இவர்க்கு இயற்கையிலேயே இருந்த தணியாத தமிழார்வத்தாலும், இயல், இசை, நாடகப்பற்றாலும் தமிழ்க் கல்வி கற்கவே இவர் பெரிதும் விரும்பினார். எனவே இவர் தந்தையார் இவரைத் தமிழ்க் கல்வி கற்கச் செய்தார். பள்ளிப்பயிற்சியுடன் இவர் பேராசிரியர் பூ. ஆ. பெரியசாமி என்னும் தமிழ்ப் பேரறிஞரிடம் தமிழ்க்கல்வி பயின்றார். இவரே இவரின் முதலாசிரியர் எனலாம்.

சுப்புரத்தினம் நாளுக்குநாள் தமிழில் மிக ஈடுபாடு காட்டி வந்தார் இவரின் தமிழ்த் தேர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவருள் புலவர் சி. பங்காரு என்பவரும் ஒருவர். அவர்பால் இவர் தமிழ் கற்கப் புகுந்த முதல் நாள், இவருடன் வேறு மாணவர் சிலரும் வந்திருந்தனராம். அவர்களிடம் ''நப்போல் வளை'' என்ற ஔவையாரின் ஆத்திசூடி அடிக்கு விளக்கம் சொல்லும்படி கேட்கப்பட்டது அத்தனை மாணவர்களிலும், நம் சுப்புரத்தினமே அவ்வடிக்குச்சரியான பொருள் கூறினாராம். அப்பொழுது இவர்க்கு அகவை ஏழு! இதனால் புலவர் பங்காரு இவர்பால் பேரன்பு கொண்டு இவர்க்குத் தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் நிகண்டு வரிசைகளையும் ஒழுங்காகப் பாடம் சொல்லிவந்தார். இதன் காரணமாக, சுப்புரத்தினம் 1908-இல் கல்வே கல்லூரியில் நடந்த புலவர் வகுப்பில் கல்லூரியிலேயே முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். அவரின் தமிழறிவும், கல்விமேல் தணியா நாட்டமும் கண்ட அரசினர் மறு ஆண்டிலேயே அவர்க்குத் தமிழாசிரியர் வேலைகொடுத்து காரைக்காலைச் சேர்ந்த நிரவியில் பணியாற்றச் செய்தனர். அக்கால் அவர்க்கு மாதஊதியமாகக் கிடைத்துவந்த தொகை முப்பதுஉருபாக்களே!

அரசினர் கல்லூரித் தமிழாசிரியராகப் பணியாற்றி வந்தாலும், சுப்புரத்தினத்திற்குத் தமிழ்க்கல்விமேல் தணியா வேட்கையிருந்தது. சிறுசிறு அழகிய தமிழ்ப் பாடல்களை எழுதிவந்தார். அவர் உள்ளமும் அறிவும் கிளர்ச்சி பெற்று எழுந்தன பேருட

னும் புகழுடனும் உரிமையுடனும் வாழ்ந்த கழகக் காலத் தமிழ் மக்களை நினைந்து மனம் உருகினார். இற்றைக் காலத்தில் தமிழ் மக்கள் அடிமையாகவும், மொழியுணர்வும், உரிமையுணர்வும் அற்ற பேதைகளாகவும் வாழ்வதைக் கண்டு உள்ளம் கசிந்தார். பிரஞ்சுப் பகுதியில் இருந்த தமிழ் மாநிலம் பிரஞ்சுக்காரரிடமும், பிற பகுதிகள் ஆங்கிலேயரிடமும் இருந்தமை கண்டு நெஞ்சு நைந்தார். அத்தகைய அடிமை வாழ்வில் தமிழ் மக்கள் உரிமை யற்றுத் துயருறுவதைக் கண்டார். அவர்களின் உள்ளம் விடுதலையைப்பற்றிய நினைவே இன்றி ஆராத்துயிலில் அமிழ்ந்து கிடந்தது.

'பழய, நைந்த தமிழரொடு நானிருந்தேனே'

என்று பாவலர் மனம் கசிந்தார். அக்கால் ஆங்கிலேயரின் அடக்கு முறை தாளாது, பாவலர் சுப்பிரமணிய பாரதியார் புதுச்சேரியில் வாழ்ந்து வந்தார். பாரதியார் ஓர் உணர்வுப் பாவலர். இந்திய நாட்டு உரிமைக்காகப் பாடுபட்டுவந்த பேரா யக்கட்சியின் கொள்கைப்பாவலராக இருந்த பாரதியார், இந்திய நாட்டு விடுதலைக்கென மக்களைத் தம் பாட்டுத் திறங்கொண்டு விழித்தெழச் செய்தார். புதுவையில் அவர் தங்கியிருந்த நாட்களில், சுப்புரத்தினத்திற்கு அவர் வல்லுணர்வுப் பாடல்களில் ஈடுபாடிருந்தது. புலவர். திரு. பங்காரு, குயில் சிவா முதலி யோர் பாரதியாருக்கு நெருங்கியவர்களாக இருந்தமையால் சுப்புரத்தினத்திற்குப் பாரதியாரைக் காணவும் கண்டு தொடர்பு கொள்ளவும் வாய்ப்பேற்பட்டது.

ஒருகால் ஒரு திருமண விருந்தில் பாரதியாரின் நாட்டுப் பாடல் ஒன்றினைச் சுப்புரத்தினம் பாடிக் கொண்டிருந்தார். அதை இவர் அறியாதவாறு நின்று கேட்ட பாரதியார், தாமெழு திய பாடலைச், சொல்லும் வண்ணமும் சிதைவுருது பாடிய இவர் தம் பாட்டுணர்வைக் கண்டு வியந்தார். அப்பொழுதிலிருந்து இவர்பால் பாரதியாருக்குப் பற்றும் தொடர்பும் ஏற்பட்டது. பாரதியாரின் நாட்டுணர்வும், விடுதலை வேட்கையும், பாட்டுத் திறனும் சுப்புரத்தினத்தை வெகுவாக ஆட்கொண்டிருக்க வேண்டும்: பிறிதொருகால் பாரதியாரின் விருப்பத்திற்கிணங்க வும் பிற நண்பர்களின் இடையிலும் சுப்புரத்தினம் **'எங்கெங்குக் காணினும் சக்தியடா'**-எனத் தொடங்கும் பாடலைப் பாடிக் காட்டினார். இவர்பால் இயற்கையான பாவன்மையும், நாவன் மையும் இருப்பதை அறிந்து கொண்ட பாரதியார், இவரைத் தம் அன்பர்களுடன் ஒருவராகச் சேர்த்துக் கொண்டார். இவரெழு திய 'எங்கெங்குக் காணினும் சக்தியடா' என்ற பாட்டு, பாரதி யாராலேயே சுதேசமித்திரன் செய்தித்தாளுக்கு விடுக்கப்பெற்று வெளிவந்தது. பாரதியார்மேல் வைத்த அன்பாலும் அவர்தம் பாடல்களின்மேல் கொண்ட நாட்டத்தாலும் சுப்புரத்தினம் தம்

மைப் பாரதிதாசன் என்றே கூறிக்கொள்ள விரும்பினார். பாரதியாரின் உள்ளம் இந்திய நாட்டு விடுதலையை எதிர்நோக்கிப் பாடியபொழுது, பாரதிதாசன் தமிழ் நாட்டு விடுதலைக்கெனக் குரல் கொடுத்தார். தமிழ் மக்களின் ஆறுத்துயரும் அவல நிலையும் பாரதிதாசனின் உள்ளத்தில் ஒரு புத்தெழுச்சியை உண்டாக்கின!

"என்தமிழ் அன்னை துன்பம் நீங்கித்
தூய்மை எய்தித் துலங்குதல் காண்பேன்;
என்தமிழ் நாடு தன்னாட்சி பெற்றுத்
துலங்கிடுதல் காண்பேன்; தமிழர்
நலங்காண் பேன்நான் நானில மதிலே"

என்று தம் ஆராவிருப்பத்தை வெளிப்படுத்துகின்றார் பாரதிதாசன் பொதுநலத் தொண்டுக்காக அவர் உள்ளம் துடி துடித்தது. தமிழ்க்காகவும் தமிழ் மக்கட்காகவும் உழைப்பதே தம் வாழ்வாகும் என்று வரையறுத்துக் கொண்டார்.

"எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
தனையீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கு மென்றால்
செத்தொழியும் நாள்எனக்குத் திருநாளாகும்"

என்பது அவர் கூற்று. இத்தமிழ் உணர்வுக் கனல் பாரதியாரின் பாட்டுணர்வுபோல் பெருக்கெடுத்தாலும், அவர்தம் பாடல்களில் காணப்பெற்ற நாட்டுணர்வினின்று வேறுபட்டதாகும். பகுத்தறிவு சான்ற தமிழ் மக்கள் அமைப்பைப் பாரதிதாசன் மிகுதியாக விரும்பினார். பாரதியாரின் அடிச் சுவட்டிலேயே தாம் போக விரும்பவில்லை. இவரின் தனியாண்மைக்கு என ஒரு தனிவழி வகுத்துக் கொண்டார். பாரதியார்க்குத் தமிழ்ப் பற்று இருந்ததே அன்றித் தமிழ்மொழி காப்புணர்வு இருந்ததாகத் தெரியவில்லை. அவர் தமிழையும் வடமொழி போலவே கருதி வந்தார். தமிழ் அற நூல்களையும் ஆரிய மறை நூல்களுக் கொப்பாகவே கொண்டார். பாரதிதாசன், ஆரியத் தொடர் பாலேயே தமிழ் மரபு கெட்டதென்றும், தமிழும் தன் நிலையில் தாழ்ந்ததென்றும், தமிழ்மக்கள் விடுதலையில்லா அடிமைகளாகப் போயினர் என்றும் தெளிவாகக் கூறியுள்ளார். அதனால் பாரதியாரின் உள்ளத்தில் கனன்று கொண்டிருந்த விடுதலை உணர்வினின்றும் வேறுபட்டுப், பாரதிதாசன் உள்ளத்தில் பொங்கிஎழுந்த பாவுணர்வு தமிழர் விடுதலை நோக்கிப் புதுவழியில் நடமிடல் ஆயிற்று; அது புரட்சி மனப்பாங்கு வாய்ந்தது! எனவேதான் பாரதிக்கு வாய்க்காத புரட்சிப் பாவலர் என்ற பட்டம் பாரதிதாசனுக்கு மக்களால் கொடுக்கப்பெற்றது! 'புரட்சிக் கவி' என்ற

(41 ஆம் பக்கம் பார்க்க)

3-ஆம் தொடர்.



ஆந்தைப் பாட்டு.

ம. இலெ. தங்கப்பா.

ஆயும் மனத்தின் அறிவோ டுணர்வடங்க
வாய்மூடி நானின்றேன். வாழ்த்துரைக்க நாஎழுமால்!
யான்நெஞ்சிற் கொண்டகருத் திவ்வாந்தை கொண்டதுவே!
தேன்நெஞ்சிற் பாய்ந்தாற்போல் தித்தித்தேன். இத்தனை நாள்
என்னை உணராத இப்புவியில் இன்றெனக்கு
நன்னர்த் தொடங்கியதோர் நட்பென் றுளம்கிளர்ந்தேன்.
சொல்லுதற்கு வாய்எடுத்தேன்; சொல்விரும்பா அவ்வாந்தை
வல்லே சிறைவிரித்து வானத் தெழுந்ததுவே.
''நில்லாய்! உரைகேளாய்! நீ,பின் வெறுப்புற்றால்,
செல்லாய் பிற''கென்றேன்; செய்திகொளா தப்பறவை
சென்று மறைந்ததுவே! செப்பொணுமோ என்வருத்தம்?
நின்று மனம்தளர்ந்தேன்; நேரம் கழிந்ததுவால்.
தண்ணிலவு காலும்; தவழும் பனிக்காற்று;
விண்மீன்கள் வானில் விளக்கமுறும்; அண்மையிலே
ஆறு முணுமுணுக்கும்; கல்லறையும் நன்காடும்
கூறும் எழில்சிறக்கும்; கொள்ளேன் அவையொன்றும்.
எண்ணத்தில் புள்ளிருப்ப, எய்துமோ வேறுணர்வே?
நண்ணியஅப் புள்ளுமறு நாளில் திரும்புமோ?
மீண்டும் அதைக்கண்டு மேவுமென்றன் நட்புரைக்க
ஈண்டுமோ வாய்ப்பென்றே எண்ணம் பலவாறாய்த்
துன்றி மனத்தைத் துளைப்பவே இல்லடைந்தேன்.
சென்று படுத்தேன்; புரண்டேன்; முன் னின்றதெலாம்

கோட்டினிலே வீற்றிருந்த கூர்த்தவிழிப் புள்ளாகக்
காட்சியுற்றேன்; நெஞ்சக் கனவில் மயக்குற்றேன்.

வைகறையின் கீழ்வான வண்ணப்பொன் தொட்டிலிலே
செய்ய வுடலசைந்து செங்கதிரோன் கண்விழித்தான்.
புன்னகையை வீசுமவன் பொன்னொளியில் மூழ்கியே
மன்னும் புடவித்தாய் மாணுடலம் பொன்சொரிந்தாள்.
ஓங்குபகல் போமளவும் உள்ளப் பெருங்கிளர்வை
நீங்கவைத்து நெஞ்சை நிலைப்படுத்த நான்முயன்று
கீழைத் திசையில் கிளர்ஒளியை வீசிஎழும்
மாழைக் கதிர்மேல் மனத்தைத் திருப்பினேன்.
நச்சுப் பெருந்தீமை நாடியதோர் உள்ளத்தில்
பச்சென்று நல்லுணர்வு பாய்ந்து பரவுதல்போல்,
கங்குல் மகளணிந்த கன்னங் கருந்துகில்மேல்
மங்காப் புதுப்பொன்னை மாற்றுருக்கி வார்த்ததுபோல்
கோல ஒளிபரவும்; குன்றெல்லாம் பொன்சொரியும்;
நீலப் பெருவானின் நீள்வயிறு கீண்டதனுல்
சோர்கின்ற செங்குருதி சூழ்ந்து பரவுதல்போல்
ஆர்கின்ற செவ்வானில் ஆடி வருங்கதிர்தான்
மின்னல் வளையமோ? விண்ணுடும் பந்ததுவோ?
தென்னகத்து வண்தெங்கின் செவ்விளநீர் தானேயோ?
கன்னற் செழுமணியோ? காலைத் திருமகளின்
பொன்முகத்தில் மின்னொளிசெய் பொட்டோ? இயற்கைவாய்ப்
புன்னகையோ? வான்சுனையில் பூத்த முளரியோ?
பொன்னின் கடல்கடைந்து போக்கியதோர்
பொற்குமிழோ?
காலப் பெரும்புலவன் வானத் தெழுதுகின்ற
கோலமிகு நாடகத்தின் கூறுமுதற் காட்சியோ?
என்றந்தப் பேரெழிலில் ஈடுபட்டென் உள்கிளர்வைக்
கொன்றங் கமைதிபெற எண்ணினேன்; கூடவில்லை.
எங்கும் மகிழ்வுமிக, இன்பூட்டும் காலையிலே
பொங்குமென்றன் உள்ளத்தின் பூசல் அடங்கவில்லை.
புட்கள் ஒலிஎழுப்பும்; பூம்பொழிலில் தேங்கமழ
மொட்டு முருகவிழும்; மொய்க்கும் சிறுவண்டு.
தாவும் இளங்கன்று; தண்குளத்தில் செம்முளரி
ஆவல் நறைபிலிற்றி ஆர்வலனைப் பார்த்தழைக்கும்;
முல்லை மலர்க்காட்டை முத்தமிட்டு முத்தமிட்டு
மெல்ல இளங்காற்று மெய்ப்பொடிப்ப வீசிவரும்.

வீசிப் பயன்என்ன? வேட்கை நெருப்புளத்தின்
பூசல் குளிரவில்லை. போய்அச் சுடலைக்கண்

ஒட்பமிகும் ஆந்தையோ டுள்ளத் துணர்விணைந்து
நட்பைப் பெறுமளவும் நாட்டம் பிறிதறியேன்.

எவ்வாறோ மாலை எழுமட்டும் காத்திருந்தேன்.
செவ்வான் இருள்பொதியச் சேர்ந்தேன் இடுகாட்டை;

நெல்லி மரக்காட்சி நெஞ்சை இழுத்ததுவால்;
சொல்லவொணா உள்விதுப்பால் தூண்டலுற்று
நோக்கினேன்.

ஆந்தை மரக்கிளையில் அன்றைக் கிருந்ததுபோல்
போந்து துயர்ப்பாட்டைப் பாடிப் புலம்பிற்றே.

கண்ணில் புனல்ததும்பக் கட்டவிழ்ந்து நெஞ்சுருகப்
பண்ணில் உயிர்கலந்தேன்; பாரை மறந்துவிட்டேன்.

ஆவி நிலைகலங்க, ஆக்கை பதைபதைக்க,
மேவும் உணர்ப்பெருக்கில் மெய்ம்மறந்து நிற்கையிலே

பாடல் முடிந்ததுவால்; பைய உணர்வுற்றேன்.
ஓடி அருகடைந்தேன்; ஒள்விழிப்புள் கண்டதுவால்.

''நேற்றுரைத்த செய்தி நினைவிலையோ மாந்தனே?
போற்றுகிலேன் உன்செய்கை;போய்வி''டென்று சீறிற்றே!

''காட்டின் தனியரசீ! கைக்கும் உளத்துயரைப்
பாட்டிலமைத் தென்னைப் பதைபதைக்கச் செய்தாய்நீ;

தீதென் றுனையிகழுந் தீயர் குலைநடுங்க
மோதும் இடிக்குரலின் மொய்ம்புடையாய்; நீயிதுகேள்:

நேற்றுநான் உன்பால் என் நெஞ்சம் திறந்திடுமுன்
சீற்றத்தால் நீங்கிவிட்டாய்; செய்தி அறிந்திலையால்.

உன்னைப்போல் யானும் உலகின் சிறுமைகளால்
இன்னலுற்று நெஞ்சம் எரிந்து கிடப்பவன்காண்!

துன்பமுறு நெஞ்சுக்குத் துன்பமுறு நெஞ்சம்தான்
அன்பினிய தோழமைகொண்(டு) ஆர்க்குமென்று
கூறிடுவார்.

உன்றன் துயரத்தால் உள்ளம் கலக்குண்டேன்;
நின்மேல் உயர்அன்பு நேர்ந்துவிட்டேன்; ஈதுண்மை.

வையத்தே மாந்தனா வந்து பிறந்தாலும்,
பொய்யுற்ற மாந்தர்மேற் பொல்லாச் சினமுடையேன்.

மாந்தர் குடியமைப்பும், மாந்தர் நெறிமுறையும்,
மாந்தர் குழுக மடமை வழக்குகளும்

போற்றுகிலேன் சற்றேனும்; புள்ளரசீ! நேற்றுன்றன்
கூற்றெல்லாம் மெய்யென்று கொள்ளும் கருத்துடையேன்.

மேலுங்கேள் ஆந்தையே, மேவும் இருளினிலும்,
காலறுக்கும் முள்ளினிலும், காட்டினிலும் மேட்டினிலும்,

கொல்லும் அரவுறையும் கோணல் வழிகளிலும்
நல்லமைதி தேடியே நான்திரிந்து வாழ்தலெலாம்

ஏனென் றறிவாயா? யார்க்கும் வணங்காமல்
நானறிந்த கொள்கை நவின்றதொரு காரணம்தான்!

மாந்தர்பால் ஒன்றே வறுமை இருத்தலையும்,
சார்ந்துபல தீதுஞ் சழக்கும் மிகுதலையும்,

நாகரிகப் பொய்மையால் நஞ்சு பரவலையும்,
நோய்கள் மிகப்பெருகி வாழ்நாள் நொடிதலையும்,

போலிச் சமயத்தால் புன்மை வளர்தலையும்,
மேலழுத்தும் பற்றுளத்தால் துன்பம் மிகுதலையும்,

போராம் கனல்மாந்தப் பூண்டை அழித்தலையும்,
பாரீரோ?'' என்றேன்; ''பகுத்தறிவால் நாமுற்ற

மேன்மை இதுகொலோ?'' என்று வினவினேன்
பான்மையிலா மாந்தரென்மேல் பாய்ந்திடவே வந்தார்.

இயற்கை நெறிகடந்தீர், இன்பம் விழைந்து
செயற்கையால் மாய்கின்றீர் என்றேன் சினமுற்றார்

வாய்ந்த பகுத்தறிவால் வானம் புகுந்துநீர்
ஆய்ந்தீர், பயனறியீர் என்றேன், அடல்கொண்டார்!

சிக்கல் பலசெறிந்து தீமை மிகப்பெருக்கி
மக்கள் நிலையிழிக்கும் வாழ்க்கை அமைப்பியலை

வேரோ டகழ்ந்தெறிவோம்; வீழ்த்தவொணா மெய்ச்சிறப்பின்
சீரார் புதுவுலகம் செப்பமுற யாத்திடுவோம்''

என்னும் கருத்துரைத்தேன்; என்னைப் பழியுரைத்தார்.
மன்னும் பழம்பெருமை மாய்க்கவந்த வன்கொடியன்;

பித்தன்; கிறுக்கனிவன்; பேணும் ஒழுக்கமிலான்;
மெத்தக் கொழுத்துத் திரிகின்றான் என்றுரைத்தார்;

வம்பு வழக்குரைத்தார்; வாழத் தொழில்மறுத்தார்;
நம்பவொணாக் குற்றமென்மேல் நாட்டுதற்கும் முன்வந்தார்.

மூடர் எதிர்ப்பால் முறிகிலேன் ஆனாலும்
கேடுமிகும் வையத்தின் கேடகற்றும் ஆறிலையே;

தேடுமுயர் நல்லுலகம் காணத் திறமிலையே;
தேடுமுயர் நல்லுலகம் காணத் துணையிலையே!

என்று பலவாறு எண்ணி மனம்உடைந்தேன்.
கன்றியவென் நெஞ்சைக் கனிவித்தாள் நல்லியற்கை!

ஆர்ந்த இயற்கை அழகில் துயர்மறந்தேன்;
ஓர்ந்து திரிகின்றேன் உய்தி பெறும்வழியை.''

என்றுரைக்கு முன்னர் எதிரிருந்த நற்பறவை
கன்றும் குரல்நடுங்கக் கண்பனிப்பக் கூறிடுமால்.
''அன்புளத்தீர் என்றன் அறியாப் பிழைபொறுப்பீர்'
துன்புளத்தால் ஏதோ துடுக்காகப் பேசிவிட்டேன்;
நெஞ்சில் துயரிருப்பின் நேராத சொல்லுரைத்தல்
பிஞ்சு மனமுடையார் பெற்றிஎன்று தள்ளிடுவீர்;
இக்கால் உமைஅறிந்தேன்; என்னுள் உவக்கின்றேன்.
எக்காலும் மாந்தர்பால் ஏசுதல்தான் பெற்றதுண்டு.
சாப்பறவை என்பாரும், தீப்புள்என வைவாரும்,
கோப்பழித்துக் காதைக் குடைகூச்சல் என்பாரும்.
வெஞ்சினத்தால் என்னை விரட்டுவரும் தாம்கண்டேன்.
துஞ்சாக் குரல்பொதிந்த துன்பத்தை யாரறிந்தார்?
ஏட்டுப் புலவரெலாம் என்னை நினைந்திலரால்!
கேட்டைப் புரிந்தறியேன்; கீழினமாய் ஆனதென்னே!
அன்பொழுகப் பேசிஎனக்(கு) ஆறுதலே செய்யவந்தோர்
உம்போற் பிறிதொருவர் ஓரிடத்தும் கண்டதில்லை.
உண்மை உணர்விலுறும் உள்ளொளியை யான்உம்பால்
கண்டேன் மகிழ்கின்றேன்; காளையரே வாழ்த்துகின்றேன்.
என்றன் துயர்க்கதையை யார்க்கும் உரைத்ததில்லை;
இன்றுமக்குக் கூறுவேன் என்று தொடர்ந்ததுவே:

(தொடரும்)

தென்மொழி, கடலூர்-2.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய விதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு.	கொழும்பு.	வெளிநாடு.
தனி இதழ்	50 காசு.	60 காசு.	75 காசு.
ஆண்டுக்கட்டணம்.	6 உருபா.	7-25 உருபா.	9 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்:

அட்டை நான்காம் பக்கம்.	(இரு வண்ணம்)	100 உருபா.
,, ,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா.
உள்ளே முழுப் பக்கம்.		50 உருபா.
,, அரைப் பக்கம்.		25 உருபா.

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

பொது அறிவு:

கடற் பஞ்சு.

நெடுநாட்களாக எல்லாரும் கடற் பஞ்சை ஒரு வகை நிலைத்திணை (தாவர) உயிர் என்றே கருதி வந்தனர். ஆனால் கடற் பஞ்சு என்பது இயக்கமற்ற, ஆனால் தசை பொதிந்த ஒரு விலங்கே! பொதுவாக நாம் கடற் பஞ்சு என்று கூறும் பொருள், அவ்வின உயிர்கள் பல சேர்ந்து வாழ்ந்த ஒரு தொகுதியின் எலும்புக் கூடே ஆகும். இப் பஞ்சு இரு வகையாகத் தன் இனத்தை வளர்க்கின்றது. ஒருவகை நிலைத்திணை போல் குருத்துவிட்டுக் கிளைத்து மற்றொரு சதைத் திரளையைத் தோற்று விக்கின்றது. இன்னொரு வகை ஆண் நுண்ணுயிர்ப் பஞ்சும், பெண் நுண்ணுயிர்ப் பஞ்சும் சேர்ந்து கருவணுவைத் தோற்றுவிக்கின்றன. அக் கருவணு சில நாட்கள் தண்ணீரிலே நீந்தி அலைகின்றது. அதன்பின் அவ்வணு பல தசை இழைகளாக வளர்ந்து கடற் பஞ்சாக உருவா கின்றது. இப்பஞ்சுகள் பல்வேறு உருவங்களில் இருக்கும். தட்டை யாகவும், மெல்லியவையாகவும், புதர் போலவும், விசிறிகள் போலவும், கிண்ணங்கள் போலவும், குழாய்கள் போலவும் இவை காணப்படு கின்றன.

இப்பஞ்சு கருவணுவாக இருக்கையில் ஓரணு முட்டையாக இருக்கும். பின்னர் இம் முட்டை இரண்டு இரண்டாகப் பிரிந்து வளர்ந்து நீந்திக்கொண்டே போய்க் கடலடியில் உள்ள 'இலார்வா' என்னும் பாறையிலோ வேறு பொருள்களிலோ ஒட்டிக்கொண்டு முதிர் கின்றது. கடற் பஞ்சு விலங்கின உயிராக இருந்தாலும், இதற்கு நரம்பு களும் உணர்வு அணுக்களும் இல்லை. ஆனால் இருந்த இடத்தில் இருந்து கொண்டே சுருங்கி விரியக்கூடிய இயக்கத்தைப் பெற்றுள்ளது. நுண்ணிய உயிர்ப் பொருள்களும் ஓரணு உயிரிகளும் இதன் உணவுப் பொருள்களாகும்.

கடற் பஞ்சின் உடலில் நுண்ணிய தொளைகள் நிறைய உண்டு. தண்ணீர் இப்புறத் தொளைகளின் வழியே அகத்தே உள்ள பெரிய அறைக்குச் சென்று, அங்கிருந்து உச்சித் தொளைவழியே வெளிச் செல் கின்றது. தொளைகளின் சுவர்த்திசுக்கள் சுருங்கி விரியக்கூடியவா யிருப்பதால், தண்ணீரின் போக்கும் வெளிப்பாடும் ஒரே சீராகஉள்ளது. இத்தண்ணீரிலுள்ள உணவுக் கரைசலும் உயிர் வளியும் உட்சுவரின் பசைப் பொருள்களால் உறிஞ்சப் பெறுகின்றன. கடற் பஞ்சுக்குள் நீர்

வராவிட்டாலும், உயிர் வளி கலவாத தண்ணீருள் கடற் பஞ்சை விட்டாலும் அஃது இறந்து போகின்றது. சுவர்களில் உள்ள முள் தசைகள் கடற் பஞ்சின் உறுதிக்கும் அமைப்புக்கும் காரணமாக இருக்கின்றன. கடற் பஞ்சில் சிதைந்துபோன பகுதிகள் விரைவில் வளர்கின்றன. ஒரு கடற் பஞ்சை இரண்டு துண்டுகளாகச் செய்தாலும் ஒவ்வொரு துண்டும் முழு வுருவம் பெற்றுத் தனித்தனியே வாழக் கூடியது.

உயிரோடிருக்கும் கடற் பஞ்சு உயிரிகள் கறுப்பு, சிவப்பு, செம் மஞ்சள், நீலம், பச்சை முதலிய வண்ணங்களில் காணப்படும். இவை எல்லாக் கடல்களிலும் வாழ்கின்றன. ஆயினும் வெப்பப் பகுதியில் உள்ள கடல்களில் தாம் மிகுதியாக வாழ்கின்றன. இவ்வின உயிரிகள் மிகவும் பழங்காலத்தவை. இவற்றின் கல்மாறிகள் மிகப் பழைய பாறைகளிலும் கிடைத்துள்ளன. கடற் பஞ்சுகள் மெக்சிகோ வளைகுடாவிலேயே மிகுதியாகக் காணப் பெறுகின்றன. கரையிலிருந்து ஐம்பது முதல் 80 கற்கள் தொலைவில், அறுபது முதல் நூற்றிருபது அடிகள் ஆழத்தில் இறங்கி இவற்றை எடுக்கின்றார்கள். உயிரான கடற் பஞ்சுகளைக் கால்களால் மிதித்துக் கொன்று, வெயிலில் உலர வைத்து, அதனுள் பொதிந்த தசைகளை நீக்கிக், கடல் நீரில் கழுவிக் காய வைப்பார்கள். கடல் விளைவு குறைந்த இடங்களில் உயிருள்ள கடற் பஞ்சுகளைப் பல துண்டுகளாக வெட்டி நீண்ட கழிகளில் கட்டிக் கடலுக்குள் போட்டு விடுவர். அத்துண்டுகள் வளர்ந்து முழுமை எய்த இரண்டு ஆண்டுகள் பிடிக்கும். அதன்பின் அவற்றை எடுத்துப் பயன் படுத்துகின்றனர்.

நீரை உறிஞ்சும் தன்மையுள்ளதால் கடற் பஞ்சு மருத்துவத் துறையில் மிகுவாகப் பயன்படுகின்றது. கண்ணாடி, பீங்கான், களிமண் பாண்டங்கள் முதலியவற்றை மெருகிடவும் இது பயன்படுகின்றது. ஓவியர், பொற்கொல்லர்கட்கும் இது பேரளவில் பயன்படுகின்றது.

அன்பர்கட்கு...

'தென்மொழி' இதழ்கள் ஒவ்வோர் ஆங்கில மாதத்தின் 16-ஆம் நாளிலேயே உறுப்பினர்கட்கு அஞ்சல் செய்யப்பெறுகின்றன. இந்த நாளுக்குள் உறுப்பினர் கட்டணம் அனுப்பியவர்கட்கு மட்டுமே அந்த மாத இதழ் அனுப்பப்பெறும். அதற்குப் பின் உறுப்பினராகப் பதிந்து கொள்வார் அனைவர்க்கும் அடுத்தமாத இதழே கிடைக்கும். அன்பர்கள் இதுகுறித்து அடிக்கடி மடல்கள் எழுத வேண்டாவென்று வேண்டிக் கொள்கிறோம்.

—அமைச்சர், தென்மொழி.

குடியாட்சியின் குறை

புலவர். தி. நா. அறிவுஒளி.

'தேர்தல்' என்பது 'குதிரைப் போட்டியாட்டம்' போல மக்களால் கருதுதற்குரிய நிலையில் இருக்கிறது. தேர்தல் ஒரு வகைக் கள்ள வாணிகமாகவும் சிலருக்கு அமைகிறது. கைக் கூலி, கயமை, ஒழுக்கக் கேடு, பொய்ம்மை, வசை, முரண்பாடு, பூசல், காழ்ப்பு, செருக்கு, மருட்டல், மேடைப் பித்தலாட்டம் என்றினைய கருமைக் குழவிகளைப் பெற்றெடுக்கும் ஒழுக்கமில் நிரையத்தாயாகத் தேர்தல் நடைமுறையில் அமைந்துள்ளது. நடைமுறைக் குறைபாடுகளைப் 'பச்சையாக' உணரல் வேண்டும். இன்றேல், நாம் வளரவோ, செம்மையுறவோ, சீர்திருந்தவோ இயலாது. தமக்கு வேண்டியவர் வெற்றியை வேட்கையோடு விழைவதும், வேண்டாதவர் தோல்வியடைய வேண்டுமெனத் துடிதுடிப்பதும் தெளிவற்ற மக்கள்பால் அழியக் காணலாம். தோல்வியுறுவோர் துன்பத்தைப் பலர் இரக்கத்தோடு எண்ண வும் முனைவதில்லை. அந்த அளவுக்கு உள்ளம் செம்மை குன்ற 'அரசியல் சூழல்' அடிப்படையாக அமைந்துள்ளது.

தேர்தல் என்பது அறிவுடையோரால் நிகழ்த்தப்பெற வேண்டிய பணி; இன்று, கல்லா மடவரும், பொல்லா மடியரும், கற்ற கயவரும், படித்த முட்டாள்களும் தந்நல வெறியோடு போற்றியாடும் வெறிப் பேயாட்டமாக அமையும் இரங்கத்தக்க நிலையில் உள்ளது வேட்பாளர்கள் தம் இயல்பை, ஆற்றலை, அறிவுடைமையைப், பண்பை, ஆளுமையை, உண்மை உழைப்பைக் காட்டி வாக்காளரைக் கவர்ந்து தேர்தலில் வெல்வது சிறப்பொடு விழுப்பமுடையதாம். ஆயின் மிகப்பலர் (ஒரு சிலர் தவிர) கயமை வழியாலேயே 'வெற்றி வெறியை' எய்துகின்றனர். இந்த வெற்றியால் அமையும் ஆட்சி, உண்மை யில் குடியாட்சியே அன்று; அது மட ஆட்சியே! இந்நிலை முற்றிலும் மாறியே தீரல்வேண்டும். படிக்காதவர்களும், எண்ணி உணரும் திறமற்றவர்களும் உரிமையை மடமைக்குரிய தாக்கிவிடுகின்றனர். அரசியல் தெளிவு பெறாத மக்களுக்கு ஒப்போலை உரிமை நல்குவதைப் போன்ற கொடுமையோ, கய மையோ வேறு இருக்கமுடியாது என்ற உண்மையை அண்மைக் காலத் தேர்தல்களால் தெளிவாக உணரலாம் காசுக்குச் சிறப்பளித்து ஒப்போலையை விற்கும் கயமை, மானம் விற்று உயிர் வாழ்வதற்கு ஒப்பாகும். காசால் ஒப்போலைகள் பெற்று வெற்றி பெறுவாரே உண்மையில் தோற்றவர்கள்; அவர்கள் வெற்றி அன்னாரின் மானமிழந்த இழிவுக்குரிய எச்சமே! காசு கொடுத்து ஒப்போலை பெறுபவரே குடியாட்சி என்ற இளமகளை முதுகில் குத்திக் கொலை செய்பவராவர்.

குடியாட்சியில் மிகுதியானவர்கள் தொகையை வைத்துச் சில சட்டங்களை நிறைவேற்றிப் பொதுமக்களை வாட்டும் இழி தகைமையும் அமைவது மிகப் பெருங் குறையாகும். சாக்ரடீசு, இயேசு போன்ற சான்றோரை—நல்லோரைக் குடியாட்சியின் உறுப்பினர்கள் மிகுதியான ஒப்போலைகளை அளித்தே அழித்தனர். இத்தகு நெஞ்சு நினைக்க நடுங்கும் தீமைகளைக் குடியாட்சியின் 'ஆள் எண்ணிக்கை' வலிமை உண்டாக்குவதைத் தடுக்கத் தக்க கழுவாய் இன்றில்லாதது மிகப் பெருங் குறையே. இக் குடியாட்சியின் இவ்வொரு குறைக்கு ஈடான பெருங் குறை உலகில் வேறெதுவுமில்லை என்பேன். இன்றும் குடியாட்சி ஆளெண்ணிக்கை வன்மையைக் காட்டி, ஒரு சில சட்டங்களை ஆட்சி மன்றில் நிறைவேற்றி வைத்துக்கொண்டு மன்பதையை மருட்டி விரட்டுகின்ற கயமை—குற்றம்—இழிதகைமை—மன்னிக்க முடியாத கொலைச் செயலாம்.

குடியாட்சி நிலவும் நாட்டில் சிறுபான்மையோர் நலன்களை மிகமிகக் கண்ணுங் கருத்துமாகப் பேண வேண்டியது மிக இன்றியமையாததாகும். அந்நிலை இன்று மிகப்பெரிய அளவில் புறக்கணிக்கப்படுகிறது! குடியாட்சி நிலவும் நாட்டில் விளையும் எந்த நல்வினைகட்கும், வெற்றிகட்கும் அந் நாட்டு ஒவ்வொரு குடிமகனும், குடிமகளும்தாம் அடிப்படைப் பொறுப்பினராவர். இவ்வுண்மை உணராமல் தேர்தல் முழக்கங்களில் தனியொருவரின் ஆற்றலால்தான் நன்மை விளைந்ததென்றும், அவர் இல்லெனில் ஆட்சி மாண்பே இல்லாது போயிருக்குமென்றும் முழங்குதல் பொதுமக்களை ஏமாற்றுவதாகும். அஃதேபோல அவ்வாட்சியின் தீய விளைவுகளும் ஆளுங் கட்சியின்—அமைச்சவையின்—ஒரு பகுதிப் பொறுப்புக் குறையென்றும், அந்நாட்டு மக்களின் அறியாமை மற்றொரு பகுதிப் பொறுப்புக் குறையென்றும் உணர வேண்டும் எந்த நாட்டு மக்களும் ஆட்சியை அடக்கிச் செலுத்தும் ஆற்றல்மிக்க உள்ளத்தினராகவும், ஆண்மைசான்ற அறிவினராகவும் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் உலக அரசியலில் ஓர் ஒருமை நிலையும், சீரமைதியும் பண்பும் நிலவும். குடியாட்சி என்ற பெயரை மட்டும் வைத்துவிட்டு, முடியாட்சி(!)யே பெரும்பான்மை நாடுகளில் நடந்துவருகிறது. அவ்விழி நிலையில் அரசியல் கிடப்பது மக்களின் அறியாமையையே காட்டும். மக்களின் செல்வாக்கை உருவாக்க உண்மையறிவும், உண்மைத் தொண்டும், உண்மைச் செயலாற்றலும் உண்மை ஒழுக்கப் பண்பும் தாம் உதவல் வேண்டும். இவை தவிர்ந்த மற்றவை உருவாக்கும் அரசியல்நிலையே இன்றுசெல்லத்தக்கதாயுள்ளது. இந்நிலை மாற்றப்பட்டாலொழிய உண்மை மக்களாட்சி உருவாகவே இயலாது.

குடியாட்சி நாட்டில் ஆளும் பொறுப்பில் இருக்கும் தனி ஆள் ஒருவருக்கு ஈடிணையற்ற மதிப்பை உருவாக்க ஏடுகளும்,

கட்சிகளும் முயல்வது, தம் கட்சியின் குறையை மறைக்கவும், ஆட்சியின் குறையை மறைக்கவும், மக்களை ஏமாற்றவும், தம் அப்பழுக்கற்ற தீய-தந்நல வெறியைத் தணித்துக் கொள்ளவுமே தவிர, வேறு பயனுக்காக இல்லை. இவ்வாறு ‘தனியார்’ புகழ் பாடி ‘வெறி’ மூட்டுவது, குடியாட்சியின் உயிர்க் கொள்கை யமைப்புக்கே முழு முதல் முரணாகும் இந்த நாட்டினர் இவ் வுண்மையை நடுநிலையோடு நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

அரசியல் தலைவர் ஒருவரைப் பாராட்டலாம்; ஆனால் கண்மூடி வழிபடுவதோ, வெறியோடு கட்சிப் பற்றுணர்வோடு, சமய வெறிபோலப் போற்றிப் புகழ்பாடிப் பேயாடுவதோ அறி வற்ற செயல்! மக்களின் மதிப்பைவிடத் தனியரசியல் ஆட் களின் மதிப்பு உயர்வது குடியாட்சி இலக்கணத்துக்கு முற்றும் மாறுபட்ட-முரண்பட்ட நிலையாகும் என்பதை இந்நாட்டினரும்- பிறரும் தெளிவாகத் தெளிய வேண்டும். கட்சி செய்யும் தவறுகள் ஆட்சியைத் தாக்கும் நிலை இன்றுள்ளது. இதுவும் மாறவேண்டும். கட்சி என்ற விலங்கினுள் அரசாட்சி சிக்கிக் கிடப்பது இரங்கத்தக்கது. மக்கள் நலனும், அவர்கள் வாழ்வு வளமும், கருத்தும் தாம் அரசை இயக்க வேண்டுமே தவிர, வேறு எதுவும் ஆட்சியை இயக்குவது கூடாது. இந்த நிலையை எந்த நாடு அடைகிறதோ, அங்கேதான் ஓரளவு குடியாட்சி அரும்பியுள்ளது எனக் கருதலாம். ○

தென்மொழித் தொகுப்பு.

முதல் சுவடி.

முதல் சுவடியின் பன்னிரண்டு ஓலைகளுஞ் சேர்ந்த தென் மொழியின் புதிய தொகுப்பு விற்பனைக்கு அணியமாயுள்ளது. மிகவும் குறைந்த தொகுப்புகளே கையயம் உள்ளமையால் தேவையான தமிழன்பர்கள் உரிய முழுத் தொகையையும் அனுப்பி, விரைவில் பெற்றுக்கொள்ள வேண்டுகின்றோம். படிகள் எஞ்சாமற்போமாயின் பின்னர் வருந்தநேரும். இலக்கிய இலக்கண அறிவியல்பற்றிய பல்துறை ஆராய்ச்சிக் கட்டுரைகள் 63ம், ஆங்கில மொழியாக்கங்கள் 12ம், 16 நூல் நிறைகளும், 73 இன்சுவைப் பாடல்களும். முழு இலக்கியம் ஒன்றும், 27 சொல் விளக்கங்களும், 31 துணுக்குகளும், 106 கருத்துரை களும், 62 வினா விடைகளும், 8 சிறுகதைகளும், 3 நூற்சுருக் கங்களும், 6 கற்பனை ஊற்றுக்கட்டுரைகளும், 7 அறிஞர் வரலாறு களும் கூடிய அறிவுப் பெட்டகம்! உயர்ந்த அழுத்தமான கட்டடம். பதிவு அஞ்சல் செலவும் சேர்ந்து விலை 10 உருபா. உங்கள் படிகட்கு உடனடியாக எழுதுங்கள்.

— அமைச்சர், தென்மொழி.

உடலியல்

கண்கள்.

—*—

கண் ஏழு எலும்புகளால் ஆன ஒரு குழியில் மிகவும் காப்பாக வைக்கப் பெற்றிருக்கின்றது. மூக்கெலும்பும், கன்ன எலும்பும் கண்ணுக்கு நேரடியான தீங்கு நேரா வண்ணம் காக்கின்றன. கண், எலும்புடன் உராயாதவாறு அதைச் சுற்றிலும் கொழுப்பு சூழப் பெற்றிருக்கின்றது. இரண்டு கண்களையும் ஒரே வகையாக இயங்கச் செய்ய, அதைச்சுற்றி ஆறு தசைகள் இருக்கின்றன. கண்ணீர்ச் சுரப்பியினுள் இருந்து கசியும் கண்ணீர் கண்களைக் காய்ந்து போகாமல் காப்பதுடன் தூசு தும்புகள் படியாமல் தூய்மையாக வைக்க உதவுகின்றது. நீரில் வாழ்கின்ற உயிர்களுக்குக் கண்ணீர்ச் சுரப்பிகள் தேவையில்லை யாதலால், பெரும்பாலானவற்றிற்கு அச்சுரப்பிகளே இல்லை; சிலவற்றிற்கு உட்பகுதியில் உள்ளன. கண்ணீருக்கு நுண்ணுயிர் நோயணுக்களைக் கொல்லும் ஆற்றலும் உண்டு. கண்களின்மேல் மிகையான ஒளி பட்டுக்கொண்டிராதபடி இமைகள் காக்கின்றன. இமையின் உட்புறம் நெய்ப்பசை உள்ள ஒரு வகை நீர் கசிகின்றது. தூங்கும் பொழுது இமைகளை விழிகளுடன் ஒட்ட வைக்க இது பயன்படுகின்றது. இந்த நீர் சுரக்கும் நுண் தொளைகள் அடைபட்டுப் போவதாலேயே கண்கட்டி போன்ற கொப்புளங்கள் இமைகளில் வருகின்றன. இமைப் படப்பைகளில் உள்ள நுண்மயிர்கள் கண்களுக்கு நிழல் தருகின்றன.

கண்ணின் முன்பகுதியில் உள்ள கருவிழிப் படலம் குமிழ் போன்ற வடிவம் உடையது. பொருள்களின்மேல் பட்ட ஒளிக் கதிர்கள். இக் கருவிழியில்தாம் முதலில் படிகின்றன. இயற்கையாகவோ நோய் காரணமாகவோ கருவிழியின் அமைப்பில் மாறுபாடு ஏற்பட்டால், சிறிய பொருள்கள் பெரியவையாகவோ, பெரியவை சிறியவையாகவோ, ஒன்று இரண்டு போலவோ, பொருள் அசைவுகள் சரிவரப் புலனாகாமலோ, தொளையற்ற பொருள்கள் தொளைகளுடன் இருப்பன போலவோ நமக்குத் தெரியலாம். இக் கருவிழிக்குச் சென்ற ஒளி ஒளிவில்லையில் படுமுன் ஒரு சுருங்கு திரைவழியே செல்லல் வேண்டி உள்ளது ஒளியின் அளவை இச் சுருங்கு திரையும், பாவையுமே கட்டுப்பாடு செய்து ஒளிவில்லைக்குள் புகவிடுகின்றன. கண் குழியின் உள்ளே உள்ள பார்வைத் திரை கண்ணின் மிக வியப்பான பகுதி. ஒரு விரற் கடையில் நூற்றில் ஒரு பங்கு அளவுப் பருமனே பார்வைத் திரை உள்ளது. எனினும் அது பத்து அடுக்குத் திரைகளைக் கொண்டது. அவ்வடுக்குகளில் ஒன்று

கோல் போலும் கூம்பு போலும் உடைய அணுக்களால் ஆனது. ஒவ்வொரு கண்ணிலும் உள்ள ஒவ்வொரு பார்வைத்திரையிலும் பத்துக் கோடி கோல் அணுக்களும், அறுபது இலக்கம் கூம்பு அணுக்களும் உள்ளனவாகக் கணக்கிட்டிருக்கின்றனர். கோல் அணுக்கள் பொருள்களின் வெள்ளை நிறத்தையும், கூம் பணுக்கள் பிற வண்ணங்களையும் பார்க்க உதவுகின்றன. பொதுவாக இரவில் உலவும் உயிரிகளுக்குக்கோல் அணுக்களும் பகலில் உலவும் உயிரிகளுக்குக் கூம்பணுக்களும் மிகுதியாக உள்ளன. கருவிழிகளுக்குப் பின் உவர் நீர்த் தேக்கம் ஒன்று உள்ளது. கருவிழிக்கு உணவாக இந்த உவர்நீர் பயன்படு கின்றது. இந்நீருக்குள் ஒளி புகுந்தவுடன் ஒளிக்கதிர் கோட்டம் பெற்று, உருவம் தலைகீழாகப் பார்வைத் திரையில் படுகின்றது. உவர்நீர்த் தேக்கத்தின் பின்உள்ள வேறொரு குழைவை நீர்த் தேக்கம் விழிகளின் உட்புறச் சுவர்ப் போர்வைகள் காய்ந்து போகாமல் இருக்கும்படி செய்கின்றன.

கண்ணின் முன் உள்ள விழித்திரைக்கும் பார்வைத் திரைக்கும் இடையில் கண்ணின் பார்வை வில்லை (Lence) உள்ளது. இப் பார்வை வில்லை நீர்போல் நிறமும், தெளிவும், தடிப்பான குழைவும், குவிந்தவடிவும் உடையதாக இருக்கின்றது. பார்வை வில்லை முன்புறம் சிறிய அளவிலும் பின்புறம் பெரிய அளவிலும் குவிந்திருக்கின்றது. இவ்வில்லை குழைவாக இல்லா மல் உறைந்து கடினமாக இருந்தால் இதுபோல் பல ஆடிகள் நமக்குத் தேவையாக இருந்திருக்கும். அதுவுமன்றி அவை வெவ்வேறு இடைத் தொலைவு உடையனவாக அமைக்கப் பெற்றிருக்க வேண்டும். கிட்டப் பார்வைக்கும் எட்டப் பார் வைக்கும் ஏற்ப அவற்றின் இடையீடுகள் நீளவும் குறுகவும் செய்ய வேண்டும். இத்தகைய குழைவான பார்வை வில்லையால் அத்தகைய இடர்ப்பாடுகள் நமக்கு நேர்வதில்லை. இக் குழைவு வில்லை குறுக்கிலும் நெடுக்கிலும் தன்னை அகலப்படுத்திக் கொள்ளவோ, உருண்டையாக்கிக் கொள்ளவோ முடியும். வில்லையைச் சூழ்ந்துள்ள மென்மையான கோளகப்பை வில்லையை இவ்வாறு தேவையுணர்வுக்குத் தக்கபடி இயக்கு கின்றது நாம் அருகிலுள்ள பொருள்களைப் பார்க்க வேண்டி யிருந்தால் கோளகப்பை வில்லையைச் சுருங்கிக் குவிந்திருக்கும் படி செய்கின்றது. இதனால் ஒளிக்கதிர்கள் மிகவும் கோட்ட மடைந்து விரிந்து பார்வைத் திரையில் படுகின்றன. பொருள் களின் படிமங்களும் பெரிதாகவும் தெளிவாகவும் நமக்குத் தெரி கின்றன. தொலைவில் உள்ள பொருள்களைப் பார்க்கும்பொழுது பார்வை வில்லை அகன்று சிறிது தட்டைபோல் இருக்கின்றது. இதனால் தொலைவில் உள்ள பொருள்கள் சிறியவாகவிருப்பினும் தெளிவாகத் திரையில் படுகின்றன. அகவை (வயது) முதிர முதிர இப்பார்வை வில்லை உள்ள கோளகப்பைத் தன் திறனில்

குறைந்து வில்லையைச் சரிவரச் சுருக்கவும் விரிக்கவும் செய்ய முடியாமற்போகின்றது. இந்நிலையில் பார்வைவில்லை உருண்டையாக நின்று, தட்டையாக ஆகாமற் போனால் கிட்டப் பொருள்களையே தெளிவாகப் பார்க்க முடிகின்றது. பார்வை வில்லை உருண்டையாகக் குவியாமல் சிறிதே குவிந்த தட்டை நிலையாகவே நின்று, மேற்கொண்டு இயங்காமற் போமாயின் எட்டப் பொருள்களையே தெளிவாகப் பார்க்க முடிகின்றது. இந்நிலைகளையே கிட்டப் பார்வை (Short Sight), எட்டப்பார்வை (Long Sight), என்று கூறுகின்றனர்.

கூர்தலற (பரிணும) வளர்ச்சிப்படி கண்ணின் விரிவான அமைப்பை நாம் நன்கு அறிந்து கொள்ளலாம். உயிர் அணுக்களின் திரட்சியாக மட்டுமே இருந்து, உறுப்புகள் வளரப்பெருத சிற்றுயிர்களுக்கும், ஊறுயிர்களுக்கும் கூட கண்கள் உள்ளன. ஆனல் அவற்றிற்குத் தங்கள் தங்கள் உடல்களின் பல்லாயிரங் கோடி உயிரணுக்களில் ஒரு தனி உயிரணுவாகவோ, ஒரு தொடர் உயிரணுக்களாகவோ கண்கள் அமைந்திருக்கின்றன. அவற்றிற்கு அவ்வுயிரணுக் கண்கள் வெறும் நிறப்புள்ளியாக மட்டுமே அமைந்திருந்து, ஒளியை மட்டுமே அறிந்து கொள்கின்ற ஆற்றல் படைத்திருக்கின்றன. இருளிலிருந்து ஒளியைத் தேடியடைந்து, அங்குள்ள உணவுகளைக் கொண்டு வாழ்வதற்கு உதவுமாறு அவற்றின் கண்கள் ஒளிவரும் திசைகளை மட்டுமே உணரவல்லன. புரோட்டோசோவா, குழியுடலி, தட்டைப் புழு முதலியவை இத்தகைய நிறமிப் புள்ளிகளையே கண்களாகப் பெற்றவை. உயிரணுத் திரளையாக இருக்கும் உயிரிகள் முதல், கூர்தலற முறைப்படி முழு வளர்ச்சியடைந்த பாலூட்டிகள் (அல்லது பாலுண்ணிகள்) வரை உள்ள உயிர்களில், கண் தன்னளவில் பல மாறுதல்களைப் பெற்று வளர்ந்திருக்கின்றது. ஓரணு உயிரில் வெறும் நிறமிப் புள்ளியாக இருந்து, ஒளிவருகின்ற திசையை மட்டுமே உணர்கின்ற கண், பாலூட்டிகளில் பற்பல நுண்ணிய நரம்புகளாலும், பார்வை வில்லைகளாலும், அவை பொதியப் பெறும் கோளகப் பைகளாலும் சூழப்பெற்று, மிகமிக வளர்ச்சியுற்றுப் பொருள்களின் ஒளி, நிறம், உருவம், அசைவு, உணர்வு, வெப்பம், ஈரம் முதலியவற்றைக் கண்டறிகின்ற புலனுற்றல் பெறுகின்றது. இக்கண்கள் தொடக்க நிலையில் உள்ள ஓரணு உயிர்களுக்கு புள்ளிக் கண்களாகவும், அவற்றினும் வளர்ந்த சிற்றுயிர்களுக்குத் தட்டையான குழிக் கண்களாகவும் அவற்றினும் வளர்ந்த உயிர்களுக்கு கிண்ணக் கண்களாகவும், முழு வளர்ச்சியுற்ற பாலூட்டிகளுக்கு முழு உருண்டைக் கண்களாகவும் வளர்ச்சியுறுகின்றன. இக் கூர்தலற வளர்ச்சியைக் கருவில் வளர்கின்ற நம் குழந்தையிடத்தில் காணலாம். கருவின் இரண்டாவது கிழமையில் குழந்தையின் மூளைக்கு முன்புறம் இருபக்கத்திலும் இரண்டு கருமையான

புள்ளிகளாக இந்தக் கண்கள் இருக்கின்றன. மூன்றும் கிழமையில் அந்தக் கரும்புடைப்புப் புள்ளி கிண்ண வடிவாகின்றது. முதல் மாதம் முடிவுறும்பொழுது அக்கிண்ணத்துள் பார்வை வில்லை (Lence) பொருத்தப் பெறுகின்றது. அதன் பின்னரே பல்லாயிர உணர்வு நரம்புகள் வளர்ச்சியுறத் தொடங்குகின்றன. குழந்தையின் மூன்றும் கிழமைக்கு முன் உள்ள தட்டை குழிக் கண் வளர்ச்சியின் இரண்டாம் படிநிலை. இவ்வகைக் கண்கள் சொறி மீன், நுங்கு மீன் முதலியவற்றில் உள்ளவையாம்.

சில உயிர்களின் கண்கள் மிகுதியான வெளிச்சத்திலும், மிகுந்த இருளிலும் உள்ள பொருள்களை அறிய முடியாமற் போகின்றன ஆந்தை, வௌவால், விட்டில் பூச்சி ஆகியவை பொருள்களைப் பகலில் விளக்கமாகப் பார்த்தல் இயலாது. புரு, வெண்ணத்துப் பூச்சி போன்றவற்றிற்கு இருளில் கண் தெரிவதில்லை பூனை, சிலவகை மீன்கள், இருல்கள் முதலியவை இரவிலும் பகலிலும் பொருள்களை அறியும். தட்டைக் குழிக் கண் உடைய உயிர்களினும் வளர்ந்தநிலையில் உள்ள நத்தைகள் கிளிஞ்சில்கள், வளையப்புழுக்கள், முதலியவைகளுக்கு உருண்டைக் கண்களே உள்ளன. பொதுவாக முதுகெலும்பு வளரத் தொடங்கிய உயிரிகளுக்கெல்லாம் உருண்டைக் கண்களே தம்மில் பல்வகைமாறுபாடுகளுடன் அமைந்திருக்கின்றன. இவற்றினும் வளர்ந்த நிலை என்பது தேவையான பொழுது காணுகின்ற பொருளின் இடைத் தொலைவுக்கு ஏற்பத் தம்மைத் தட்டையாகவும், உருண்டையாகவும் மாற்றியமைத்துக் கொள்ளும் இருவினைக் கண்களின் அமைப்பே ஆகும் இக்கண்களே மாந்தனுக்கு உள்ளவை சுறு மீனுக்கு இத்திறம் இல்லாமையால், தன் குவியத் தொலைவிற்குள் வரும் பொருள்களையே அம் மீனால் காண முடிகின்றது:

கண்கள் உடல்களில் உள்ள இருப்பிடமும், பருமனும், பார்வை ஆற்றலும், அவ்வவ் வுயிர்களின் தேவைக்கும், இயக்கத்துக்கும், அமைப்புக்கும் தக்கவாறு அமைக்கப் பெற்றுள்ளன. எப்பொழுதும் குளத்தின் படுகையிலேயே குந்திக் கிடக்கும் செஞேப்பசு எனும் ஒருவகை ஆப்பிரிக்கத் தேரைக்குக் கண்கள் தலையுச்சியில் உள்ளன மீன்,மாடு, குதிரை இவற்றின் கண்கள் முப்புறமும் பார்க்கவியலுமாறு பக்கவாட்டில்அமைக்கப் பெற்றுள்ளன. நத்தைக்கு நாற்புறமும் இயங்குமாறு பெரிய உணர்வுக்கொம்பின் உச்சியில் கண்கள் உள்ளன.யானைகளுக்கு மட்டும் தம் உடலுக்கேற்ற அமைப்பில் கண்கள் அமையாமல் மிகவும் சிறியவையாகவே அமைந்துள்ளன. பார்வைத் தேவை அவற்றிற்குக் குறைவாக இருக்கலாம். கண்களில் உள்ள பாவைகள் பறவைகட்கும், மாந்தருக்கும் வட்ட வடிவமாகவே

உள்ளன. பூனை, ஆந்தை, பல்லி இவற்றிற்குச் செங்குத்தாக உள்ளன. ஆடு. மாடுகளில் கிடை மட்டமாக உள்ளன. இவற்றால் அவை அகலப் பார்வை உடையனவாக இருக்கும். மிக விரைவாக ஓடக்கூடியவிலங்குகளுக்கே கண்கள் அகலமாகவும் பெரியவாகவும் உள்ளன. அவற்றால் அவை மிகவும் நுண்ணிய பார்வை உடையனவாக உள்ளன. மான், குதிரை, வரிக் குதிரை, ஒட்டகச் சிவிங்கி, கங்காரு முதலியவற்றிற்கு இத் தகைய பெரிய கண்கள் உண்டு.

கண்களுக்கு வரும் நோய்களால் முழுப் பார்வையோ, அரைப் பார்வையோ அற்றுப் போகலாம். கண்கள் மூக்கை யடுத்து இருப்பதால் இரண்டு உறுப்புகளுக்கும் வருகின்ற நோய்கள் ஒன்றை ஒன்று வருத்தக் கூடியன. உடலில் உள்ள நோய்களும், மூளை நோய்களும்கூட கண்களைத் தாக்கக்கூடியன. ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் வரும் வெட்டை நோய் கண்களை யும் கேடுறச் செய்யும். வெட்டை நோயுள்ள பெண்டிர்க்குப் பிறக்கும் குழந்தை கருவாய் வழி வெளிவருகையில், அந்நோய் அதன் கண்களைப் பற்றுகின்றது. அதனால் அந் நோயுள்ள பெண்டிர்கள் மருத்துவரின் துணைக்கொண்டு அந்நோய் குழந்தை யைப் பற்றாதவாறு எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். இந் நோய் கண்களில் அழற்சியை உண்டாக்கிப் புண்ணையும், சீழையும் வருவித்துப் பார்வையை இழக்கச் செய்யும். இந் நோயன்றிக் கண்ணில் உறுத்தற் பொருள்கள் விழுதல், இமை உட்புறமாக வளைதல், கண்ணீர்ப்பை தாக்குறுதல், ஒளிக் கோட்டம் குறைவுறுதல், மூக்கு நோய், உடல் நலக் குறை ஏற்படுதல் முதலியவற்றாலும் கண் துன்புறுகின்றது. இவற் றிற்கெல்லாம் முன்னெச்சரிக்கையாக மருத்துவரைப் பார்ப்பதே நல்லதாகும். சிலவகைக் கண் நோய்களால் உயிர் போதலும் உண்டு.

மாந்த வாழ்க்கைக்கு கண்கள் மிகவும் இன்றியமையாதன வாகலின், அவற்றைக் காப்பது நம் கடமைகளில் ஒன்றாகும். கண்ணில் படும் உடல் உறுப்புகளைத் தூய்மையாக வைப்பதா லும், பிறரின் தலையணை, துண்டு முதலிய பொருள்களைப் பயன் படுத்தாமலிருப்பதாலும், ஒளி, துகள், பூச்சிகள் முதலிய உறுத் துப் பொருள்கள் கண்களில் படாதவாறு காப்பதாலும், கண் களில் நேரிடையாகக் கதிரொளி படாமல் வைப்பதாலும் கண் களில் நோய்வரா வண்ணம் காக்கலாம். பச்சைக் காய்கறிகளை மிகுதியாக உண்ணல் கண்களுக்கு நல்லது. 'A' உய்வுணா (Vitemin) உள்ள சத்துப் பொருள்கள் கண்களுக்கு ஏற்றவை.

வள்ளுவர் தொகுத்த துறவறம்.

" அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
பண்பும் பயனும் அது "

என்றபடி இல்லாளுங் கணவனும் நெஞ்சொன்றிய வழி அன்புண்டாம். அவ்வன்பே கந்தாக அறஞ்செய்தார் துறக்கம் புகுவர்.

"புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்க மென்னும்
(கம்ப. நகரப்-5)

எனவே, இவ்வன்பினை நடுவிளக்காக நாட்டி, இல்வாழ்க்கை வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு என்னும் மூன்றனை முன்னும், விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றியறிதல் என்னும் மூன்றனைப் பின்னுமாக வைத்தார். " அடங்கருந் தோற்றத் தருந்தவ முயன்றோர்தம், உடம்பொழித் துயருலகு இனிது பெற்றாங்கு " இல்லறத்தார் தாமும் அன்புற்றமர்ந்த நெறியின் பயனைத் துறக்கவின்பம் எய்துதல் இயலுமாதலின், அப்பயன் குறித்து அந்த நிலைப்படுதற் பாலராவர். இல்லறஞ்செய்

புலவர், வித்துவான். ஒண். கி. சந்திரசேகரன்,
எம். ஏ.; பி. டி.; பி, ஓ. எல்.

வார்க்கு, பகைமுதல் மூன்றிடத்தும் ஒழுகவேண்டுவதனை நடுவு நிலைமையானும், மன முதலிய மூன்றன் செம்மை நோக்கி அடக்கமுடைமையையும், குடிப்பிறப்பு முதலிய நலஞ்சால் நிலைமையொடு வழாது ஒழுகுதற் குறித்து ஒழுக்கமுடைமையையுங் கூறினர். அறஞ்செய்வார் முதற்கண் தம்மைக் கோடாது நிறீஇக்கொள்ள வேண்டும் உளவினை நடுவு நிலைமை முதலிய மூன்றனுங் காட்டி, இவற்றை நிலையழியாமை காத்துக் கோடற்குப் பிறனில் விழையாமையையும் பொறையுடைமையையுங் கூறினர். இல்லறப் பகுதியானது இல்வாழ்க்கை முதல் பொறையுடைமை காறும் ஓதிய துணையானே முடிந்து நிற்றற் பாற்றும் என்றாலும், காமஞ்சான்ற கடைக்கோட்காலைச் சிறந்தது பயிற்றலாகிய பயனுண்டன்றே! அது குறித்து இல்லறத்தினோடு இயைபுறுத்துத் துறவறத்தைக் கூற வேண்டுவதாயிற்று. இவ்விரண்டும் அறனெனவே படுதலான் என்க. இவ்விரு வகை அறநிலைக்கும் பயனொன்றேயாம். ஐம்பொறிகளையும் கரிசு (பாவம்) புகாமல் அடக்கிய வழியே மனம் தூயதாம். அம் மனம் பின்னர் புறத்துப் போகாது மடங்கி ஒருதலைப்பட்டு நிற்கும் இயல்பினைப் பற்றும். இவ்வியல்புதான் உயிரையே நோக்கி அகப்புறப் பற்றுகளைத் தீரத்துறத்தற்காம். இதனல் எல்லாப் பொருள்களையும் பற்றி நின்றேயும் அவையொன்றுட

னேயும் தோய்வுறலில்லாத இறைவனேதிய வீட்டு நெறியை மனத்துட்கொண்டு அகப்புற வழிபாடுகளால் வீடடைதலாகும். ஆகவே, இல்லறமும், துறவறமும் ஒன்றற்கொன்று தொடர்ச்சி யுடையன வாதல் அறியப்படும். இதை நுண்ணிதின் புலப் படுத்தவே,

> "அழுக்காறு, அவா, வெகுளி, யின்னுச்சொல் நான்கும்
> இழுக்கா வியன்றது அறம்"

என்று இருவகை நிலைகளுக்கும் வேண்டுவவற்றை ஒருங்குற வைத்து ஓதினுராதல் வேண்டும். மேலும், தாம்செய்யும் ஈகையின் மேல் விருப்பமிகுதியால் இல்லறத்தையே பற்றி நிற் பாரை நோக்கி "மறந்தார் கொல் மற்றையவர்கள் தவம்" என்று எடுத்துரைத்தலானும்,

> "தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
> வானம் வழங்கா தெனின்"

என்னுமிடத்து, ஈகை செய்தற்குரிய இல்லறத்தையும், தவஞ் செய்தற்குரிய துறவறத்தையும் வேறுவேறு காட்டியமையானும், இல்லறத்தின் தொடர்ச்சியே துறவறமா மென்றறியப்படும். அன் றியும், சிறப்பீனுஞ் செல்வமுமீனும் அறத்தி னூஉங்கு ஆக்கம் எவனே வுயிர்க்கு" என்றுழி, செல்வம் என்பது துறக்கம் முதலிய செல்வம் என்றும், சிறப்பென்பது எல்லாப் பேற்றினுஞ் சிறந்த வீடு பேறு என்றும் உணர்த்திப் பிறவிடத்து,

> "ஆரா வியற்கை யவாநீப்பின் அந்நிலையே
> பேரா வியற்கை தரும்"

என்றேதுவார், சிறப்பாகிய வீட்டினைப் பேராவியற்கையென்று துறவறத்துள் காட்டியும்,

> "நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
> போற்றுது புத்தேள் உலகு"

என்றேதுவார், செல்வமென்னுந் துறக்க வாழ்வுப் பேற்றினை இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப் பயனுகி இவ்வுலகின் நிகழ்ந்து, இறவாது நிற்கும் புகழின்மேல் வைத்து இல்லறத்துள் காட்டியும் போந்தமையான் இல்லறமும் துறவறமுமே அறனெனப்பட்டு அதனினூஉங்கு ஆக்கமெவனே வுயிர்க்கு என்றேதினுர். இல்லறமும், துறவறமும் தம்முளொக்கும் அற மாயின்,

> "அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை; யஃதும்
> பிறன்பழிப்ப தில்லாயின் நன்று"

என்றுழி "இருவகை அறத்திினும் நூல்களான் அறனென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே; ஏனைத்துற வறமோ வெனின், அதுவும் பிறனுற் பழிக்கப்படுவதில்லையாயின், அவ்வில் வாழ்க்கையோடு, ஒரு தன்மைத்தாக நன்று" என்பது பொருளாயின் இல்லறத்திற்கே ஏற்றந் தோன்றக் கூறினுராம். அற்றுயின் துறவறமானது இல்லொழுக்கோடு ஒப்பச் சிறந்த தென்பது அமையுங் கொல்லோவெனின்; துறவறமானது மனத் தையும் பொறிகளையும் ஒறுத்து அடக்கவல்ல அருமையுடைத் தாய வழியே அறமெனப்படும். அவற்றை ஒறுக்க வேண்டாது ஐம்புல வின்பங்கள் ஆருத்துய்க்கும் எண்மை யுடைத்தாய வழியும் இல் வா ழ் க் கை அறமெனப்படும். எண்மையுடைய தொன்றனை மிக வரிய பிறிதொன்ருேடு ஒருங்கு வைத்து ஏற்ற விழிவு காட்டாது ஒப்பச் சொல்லும் நிலைமையை உயர்வுநவிற்சி என்றும் அணிபடக் கூறினுரென்க. அல்லதூஉம், இல்லறக் கருவியில்லாதார்க்குத் துறவற நிலை கைகூடா தென்பதனை வற்புறுத்தவே கூறினுரெனலுமாம். அன் றி யு ம் இவ்வுலகிற் பிறந்தவன் பொறிவாயிலாகச்செல்லும் புலன்கள் ஐந்தன்மேலும் வேட்கை கொள்ளும். அதுபற்றி விருப்பும் வெறுப்பும் கொள்ளும்; அவை வாயிலாக வினைகளீட்டும். அவ்வினைதான் மறித்தும் பிறப்பினுட் புகுத்தும்; அப்பிறப்புக்கு அஞ்சினேன் துறவுக்கண் செல்லும். செல்லவே, தூயனுய் அருளுடை யொழுக்கமோம்பும்; பின், அகவழிபாடு முதலியவை செய்து மீட்சியில் வீட்டுல கெய்தும் என்ப.

இதனுன், தம்மை வருத்தியுமுயிர்களை ஓம்பியும், மனத் தினை வணக்கியும், ஆற்றும் தவநெறிக்குப் "பிறர் சொல்லும் இன்னுச் சொல் நோற்றலும்", "கதங் காத்துக் கற்றடங்க லாற்றலும்" இன்னு செய்தார்க்கு மினியவே செய்தலும் முற்படு முயற்சிகளாவன வாதல் சாலுமன்றே! அது பற்றியே வீடு பேற் றிற்கு வழி நிலையாகிய துறவறத்திற்குக் கருவியாகி இல்லறம் நிற்றலை நோக்கி "அறனெனப்பட்டதே யில்வாழ்க்கை"யென்று முன்னுறுத்தி மொழிந்தனராதல் வேண்டும். அன்றியும்

"மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ் செய்வாரிற் றலை"

யென்பார் எந்நிலையில் நிற்பினும் மனமொழிகளான் பொருந்திச் செய்யுமதுவே நினைந்த பயனை விளக்குமென்று வலியுறுத்தினுர். மனத்துக்கண் மாசில னுதல் அனைத்தறன்" என்றதூஉம் இது பற்றியே யாம். மனத்துக்கணுண்டாம் குற்றம் அழுக்கறுத்தலும் அதுபற்றி வெஃகுதலுமாம். மனக்குற்றம் வழித்தாகப் புறங் கூறுதலும், பயனில சொல்லுதலுமுண்டாம். இவற்றையொட்டி மெய்யின்கண் நிகழுந் தீவினைகள் பலவும் விளையும். இவை காமமும்,பொருளும்பற்றி நிகழும், பிறனில் விழைதலும்,பொறை

யின்மையும் காமம் பற்றி யுண்டாவனவாம். இவையனைத்தும் மனக்குற்றம் அடியாகப் பெருகிவரும் கரிசுகளாய் இல்லறத் தாரைப்பற்றி நிற்கும். இனித் துறவறத்தாரை நோக்குமிடத்து விட்ட காமவின்பத்தை உரனின்மையான் பின்னும் விரும்பும் கூடா வொழுக்கமும், களவும், காமமும் பொருளும்பற்றி நிகழும் பொய்மையும், வெகுளியும், இன்னா செய்தலும், கொல்லுதலும் கடியத்தகுங் குற்றங்களாம். இவற்றுள், பிறனில் விழையாமை யோடு கூடா வொழுக்கமும் வெஃகாமையோடு கள்ளாமையும், புறங்கூறாமையோடு வாய்மையும், பயனில சொல்லாமையோடு வெகுளாமையும், தீவினை யச்சத்தோடு இன்னா செய்யாமையும், ஒருங்குவைத்து நோக்குமிடத்து இல்லறத்தார்க்கோதிய பிறனில் விழையாமை முதலாயின கைகூடாவழித் துறவறத்தார்க்கோதிய கூடா வொழுக்கம் முதலாயின நிலை நில்லா தொழிதல் காணப் படும். ஆகவே, துறவறத்திற்கு இல்லறம் வாயில் நிலையாக விளங்குதலறிதும் ஆதலின், வையத்துள் வாழ்வாங்கு வாழ் பவன் துறந்தாரின் தூய்மையனுகுதல் தப்பாமை நோக்கி இல் வாழ்க்கையையே அறனெனப்பட்டதா மென்றுணர்த்தினாராதல் வேண்டும். (தொடரும்.)

பாரதிதாசனும் புலால் சோறும்!

ஒருகால் பாவேந்தர் மதுரையிலிருந்து திருச்சி வழியாகச் சென்னை செல்ல வேண்டியிருந்தது. அவர்க்குத் துணையாகச் சென்னையைச் சேர்ந்த நண்பரொருவர் உடன் இருந்தார். வண்டி திருச்சியை அடைந் தது. இரவு 10, 11 மணியிருக்கும். பாவேந்தரின் அருகில் ஒரு பெரிய பெட்டி, படுக்கை, கைப்பைகள் இரண்டு, சில புத்தகங்கள், இன்னும் சில பொருள்களும் இருந்தன. நிலைய மேடையில் ஒருவன் 'பிரியானி பிரியானி' எனப் புலால் சோற்றுப் பொட்டலங்களை எடுத்துக்கொண்டு விரைவாகக் கத்திக்கொண்டே போனான். புலால் சோற்றுமேல் பாவல ருக்குக் கொள்ளை வேட்கை! உடனே "தம்பி, ஓடிப்போய் ஒரு பொட்டலம் வாங்கி வா. இந்தப் பொருள்களைப் பார்த்துக் கொண்டு நான் இங்கேயே இருக்கிறேன்" என்று உடனிருந்தவரை ஏவினார். அவர் இறங்கிப்போவதற்குள் புலால் சோறு வண்டியின் வேறுமூலைக்குப் போய்விட்டது. இவர் அங்கு ஓடினார். இதற்குள் இவர்கள் ஏறியிருந்த வண்டிக்கு ஊதல் கொடுக்கப்பட்டது. பாவேந்தர் தவியாய்த் தவித்தார். சோற்றுப் பொட்டலம் வேறு! ஆள் வேறு!... அவர்க்கு இருப்புக்கொள்ள வில்லை; கதவருகில் வந்து நின்று பார்த்தார். ஆளைக் காணவில்லை; வண்டி நகர்ந்தது: பாவலர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை; 'சடக்' கென்று கீழே குதித்தார். அவரின் பெட்டி, படுக்கை, பைகள் முதலிய எல்லாப் பொருள்களும் சென்னையை நோக்கிப் போயின! வண்டி மேடையைத் தாண்டிக்கொண்டிருந்த நேரத்தில் சோற்றுப் பொட்டலத் துடன் ஆள் வெறிக்க வெறிக்க ஓடிவந்தார். "ஏன் ஐயா இறங்கி விட்டீங்க? நான் ஓடிவந்து ஏறியிருப்பேனே பெட்டி படுக்கையெல்லாம் எங்கே?" என்றார் வந்தவர். நல்ல ஆளப்பா நீ; நான் என்ன பண்ணுவது! உன்னை விட்டுவிட்டு எப்படிப் போவது...? ஒண்ணுந் தெரியலே இறங் கிட்டேன்" என்றார். நல்லவேளை பொருள்கள் ஒழுங்காகச் சென்னை நிலையத்தில் எடுத்துவைக்கப்பெற்றுப் பிறகு இவர்களிடம் தரப்பெற்றன.

ஆங்கில மொழியாக்கம்

WORLD IS ASLEEP.

The midnight is calm; and people lie immersed
In silent slumber sweet; and without a care
The vast world is fast asleep
I alone am wide awake.

KURUNTHOKAI-6.

உலகமும் துஞ்சும்!

நள்ளென் றன்றே யாமம் சொல்அவிந்து
இனிதடங் கினரே மாக்கள்; முனிவின்று
நனந்தலை உலகமும் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே.

குறுந்தொகை 6.

○ ○ ○

FROM WHOM DID YOU HEAR?

Did you see, or did you hear
From some one who has seen?
I crave to know it; tell me please?
For which you'll get the golden Patali
With the tuskers in The Sonai bathing!
From whom did you hear of my lover's coming?

KURUNTHOKAI-75.

யார் வாய்க் கேட்டனை?

நீகண்டனையோ? கண்டார்க்கேட் டனையோ?
ஒன்று தெளிய நசையினம்; மொழிமோ.
வெண் கோட்டு யானை சோணை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்!
யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே?

-குறுந்தொகை 75.

SWORD-LIKE DAWN

"Kukoo......!" the cock crowed;
And a chill went through my guileless heart.
For the dawn has come–like a sword–
Me from his arms to tear apart.

KURUNTHOKAI–157.

வாள்போல் வைகறை

'குக்கூ' என்றது கோழி; அதனெதிர்
துட்கென் றன்றென் தூஉ நெஞ்சம்
தோள்தோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே!

–குறுந்தொகை 157

○ ○ ○

AND NOW YOU CRY!

O, Spotless-feathered little crow,
For you to feast with all your loving kin
Fresh fat–food with raw meat in it
In a plate of gold I'll serve.
And now you cry,
So that with her brave, adroit young man
My fine–haired girl may come back home.

EINGURUNURU–391.

வரக்கரைந் தீமே!

மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை,
அன்புடை மரபின் நின் கிளையோ டாரப்
பச்சூன் பெய்த பைந்நிண வல்சி
பொலம்புனை கலத்தில் தருகுவன் மாதோ
வெஞ்சின விறல்வேற் காளையொடு
அஞ்சில் ஓதியை வரக் கரைந்தீமே!

-ஐங்குறுநூறு 391.

ஆங்கில ஆக்கம்: **மா. இலெ. தங்கப்பா** எம். ஏ; பி. டி.

அரசியல் அறிவு.

குடியரசுத் தலைவர்.

—*—

(இந்தி தெரிந்தவர்தாம் குடியரசுத் தலைவராக வருதல் முடியும் என அண்மையில் சட்டம் வர இருக்கின்றது. குடியரசுத் தலைவரின் பிற தகுதிகள்பற்றி நாம் தெரிந்துகொள்ளல் வேண்டாமா? கட்டுரை அவர் ஆணைமுறைகள் பற்றிக் கூறுகின்றது)

இந்தியக் குடியரசுத் தலைவரே இந்திய நாட்டில் உள்ள குடிமக்களின் தலைவர் ஆவார். இந்திய அரசியல் ஆட்சி முழுவதும் அவரின் ஆணைக்குட்பட்டது. அரசியல் சட்டங்களில் கூறியுள்ள முறைகள்படி, அவர் நேரிடையாகவோ பிற அலுவலர்களைக் கொண்டோ இந்திய நாட்டை ஆண்டு வருகின்றார். இந்திய நாட்டு மக்களுக்குக் காப்பாக உள்ள எல்லாவகையான பட்டாளப் படைகளும் அவர் ஆணைக்குட்பட்டனவே.

குடியரசுத் தலைவர் ஓர் இந்தியக் குடிமகனாகவும், முப்பத்தைந்தாண்டு நிரம்பியவராகவும், மக்களவை உறுப்பினரின் தகுதிகள் பொருந்தியவராகவும் இருத்தல் வேண்டும். அவர் நடுவணரசிலோ, மாநில அரசிலோ ஊதியம் பெறும் வேலை எதிலும் ஈடுபடல் கூடாது. இதுவன்றிப் பாராளுமன்றத்திலோ மாநிலச் சட்ட மன்றங்களிலோ உறுப்பினராக இருத்தலும் கூடாது இவர் குடியரசுத் தலைவர் பொறுப்பை ஏற்கும்பொழுது, தம் பணியை முறை பிறழாமல் நடுநிலையோடு பார்ப்பதாகவும், அரசியல் சட்டங்களையும் அவற்றில் கூறப்பட்ட முறைகளையும் காப்பதாகவும், அதன்வழி இந்நாட்டைக் காப்பதாகவும், இந்திய நாட்டு மக்களின் தொண்டுக்கும் நன்மைக்கும் தாம் பாடுபடுவதாகவும் உறுதிமொழி கொடுத்தல் வேண்டும். இவருக்கு மாதம் பத்தாயிரம்உருபா ஊதியம் என்பது சட்டத்தில் கூறப்பட்டுளது இவ்வூதியமன்றிக் குடிக்கூலியில்லா வளமனையும், பிற உதவித் தொகைகளும் வேறு வாழ்க்கை உரிமைகளும் உண்டு. அவர் சம்பளத்தையும் உதவித் தொகைகளையும் உரிமைகளையும் மாற்றவோ குறைக்கவோ பாராளுமன்றத்தினாலும் இயலாது.

குடியரசுத் தலைவர் தேர்தல் வழியாகவே தேர்ந்தெடுக்கப் பெறல் வேண்டும். பாராளுமன்றத்தின் இரண்டு அவைகளும், மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களும் சேர்ந்தே குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர். உறுப்பினர்தம் ஒவ்வோர் ஒப்போலையும்(Vote) அவ்வுறுப்பினர் வரும் சேர்ந்த தொகுதி மக்களின்

நிரலளவை (சராசரி) எண்ணிக்கைக்கு இணையாகக் கணக்குக் கொள்ளப்பெறும். அக் கணக்கின்படி எவருக்கு மிகுதியான ஓலைகள் கிடைக்கின்றனவோ, அவரே குடியரசுத் தலைவராக வரல் இயலும். குடியரசுத் தலைவரின் வேலைக் காலம் ஐந்தாண்டுகள். அதற்கிடையில் அவரே வேலைப் பொறுப்பை விட்டுவிடலாம்; அல்லது அவர் அரசியல் அமைப்புச்சட்டத்தை மீறி நடந்ததாக பாராளுமன்றினால் விலக்கப்படலாம். அவ்வாறு பாராளுமன்றம் அவரை விலக்கக் கருதினால், பாராளுமன்றின் இரண்டு அவைகளில் ஏதாவது ஒன்றில், மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் ஒரு தீர்மானம் கொண்டுவந்து வெற்றி பெறல் வேண்டும். பின் அத்தீர்மானம் மற்றோர் அவையால் ஆராயப்பெற்று அவ் வவையின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களால் ஏற்கப் பெறல்வேண்டும். அதன் பின்னரே தலைவர் தம் வேலையினின்று நீக்கப் பெறுவார். ஒருவரே எத்தனை முறையும் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெறலாம்.

குடியரசுத்தலைவர் பாராளுமன்றின் இரண்டு அவைகளுடன் மூன்றாவது உறுப்பாளராக இருக்கின்றார். பாராளுமன்றத்தைக் கூட்டுவதும், அம்மன்றம் நடைபெறாமல் தடுப்பதும், கலைப்பதும் அவர் விருப்பத்திற்குட்பட்டனவாகும். பாராளுமன்றின் இரண்டு அவைகளிலோ ஒன்றிலோ அவர் எப்பொழுதுவேண்டுமானாலும் பேசலாம்; செய்திகள் விடுக்கலாம். தேர்தலுக்குப் பின் கூட்டப்பெறுகின்ற முதல் கூட்டத்தில் அவர் தொடக்கச் சொற்பொழிவு நடத்தல் வேண்டும். அதில் பாராளு மன்றம் வருகின்ற ஆண்டுகளில் எவ்வகையில் ஈடுபட்டுழைத்தல் வேண்டும் என்பதும் கூறப்பெறும். வரும் ஆண்டின் வரவு செலவுத் திட்டங்களைக் கொணருமாறு ஆணையிடுவதும், கொண்டுவந்ததிட்டங்களுக்கான தொகைகளைச் செலவுசெய்யப் பரிந்துரைப்பதும் அவரே. பாராளுமன்றத்தின் எந்த வகையான தீர்மானத்தையும் ஏற்றுக்கொண்டு சட்டமாக்கவோ, தள்ளவோ, திருத்தவோ, அதனை மீண்டும் ஆராயச் செய்யவோ, அவர்க்கு ஆணை தரப் பெற்றிருக்கின்றது. திருத்தவேண்டித் திருப்பப் பெற்ற தீர்மானம், பாராளுமன்றத் திருத்தங்களுடன் மீண்டும் அவரிடம் வருமானால், அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுவது அவர் கடமை. அவர் ஒப்புதலின்றி எந்த ஒரு தீர்மானமும் சட்டமாகாது. மாநிலச் சட்டமன்றத்தின் தீர்மானங்களில்கூட அண்டை அயல்மாநிலங்களோடு தொடர்புடையனவும், சொந்த மாநிலத்தில் உள்ள மக்கள் உரிமைக்கு மாறானது என்று கருதப் பெறுவனவும் ஆன தீர்மானங்கள் குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெற்றே சட்டமாக்கப் பெறல் வேண்டும். எடுத்துக் காட்டாக மாநில அரசு மக்கள் உடைமைகளை எல்லாம் அரசுடைமையாக்குதற்கு ஒரு தீர்மானம் கொண்டுவரின் அதற்குக் குடியரசு தலைவர் இசைவு வேண்டும். இவையன்றி ஒரு மாநிலத்தின்

பெயர், பரப்பு, எல்லை இவற்றை மாற்றவோ, இவற்றைப்பற்றிய திருத்தம் கொண்டு வரவோ மாநில அரசு போட்ட தீர்மானத்திற்குக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் வேண்டும்.

பாவேந்தர் மனம்...!

பாவேந்தரை எவர் வந்து எவரிடம் பரிந்துரை (சிபார்சு) செய்யக் கூப்பிட்டாலும் உடனே வந்துவிடுவார். எத்தனையோ பெயருக்கு வேலை வாங்கிக் கொடுத்துள்ளார். இந்த வகையில் வீட்டாருக்குப் பெரிய மனக்குறை. "இப்படி ஒரு காசு ஊதியமில்லாமல் காலத்தையும் நேரத்தையும் மானத்தையும் பாராமல் சிறு பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதற்குக்கூட ஓடுகிறாரே! ஏழைகள்தாம் போகட்டும் ... பணம் படைத்தவர்களிடமாவது, தம் போக்குவரத்துச் செலவுக்காகிலும் பணம் கேட்கக் கூடாதா?" என்று அவர் வீட்டாரில் சிலர் வெளிப்படையாகவே பேசிக் கொண்டனர். இதுபற்றி ஒரு நாள் அவரிடம் கேட்கப் பெற்றது. "நம்மிடம் பரிந்துரைக்கென்று வருபவர்கள் எல்லாரும் ஏழைப்பிள்ளைகளே! அவர்கள் காசுக்கு எங்கே போவார்கள்? ஒருவரிடமும் ஒரு காசும் வாங்கவே கூடாது....நாம் என்ன செய்துவிடுகின்றோம்.... பாவம் நம்ம தமிழப் பிள்ளைகள் நிறைய பணத்தைக் கொட்டிப் படிக்கிறார்கள். பிறகு வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். இந்த உதவிகூட நாம் செய்யக் கூடாதா?" என்று அதற்கு விடை கூறினர். ஆனால் அவர் பாடல்களைப் பாடப் புத்தகங்களில் சேர்த்துக்கொள்ள வெளியீட்டாளர்கள் இசைவு கேட்ட பொழுதெல்லாம் ஓர் அடிக்கு இரண்டு உருபாமேனி கணக்குப் போட்டு வாங்கிவிடும்படி அவர் வீட்டாருக்குக் கண்டிப்பான கட்டளை போட்டிருந்தார்.

குடியரசுத் தலைவர் தாமே ஒரு சட்டத்தை வெளியிடலாம். ஆனால் அச்சட்டம் அடுத்து நடக்கின்ற பாராளுமன்றத்தின் முன் வைக்கப் படல் வேண்டும். அச்சட்டத்தைப் பாராளுமன்றின் இரண்டுஅவைகளும் மறுத்துவிடுமானாலும், இரண்டாம் அவை கூடி, அச்சட்டத்தை ஏற்குமுன் ஆறு கிழமைகள் (42 நாட்கள்) கழிந்து விட்டாலும்அச்சட்டம்செல்லாது. அரசியலமைப்புப்படி குடியரசுத் தலைவரே அந்தமான், நிகோபார் முதலிய இந்தியத் திட்டுகளுக்கான சட்டங்களையும் வகுக்க ஆணை பெற்றுள்ளார். பாராளுமன்ற அமைப்புகளைப் பொறுத்த மட்டில் அமைச்சர்களுக்கு ஆணை வரம்புகளைப் பிரித்துக்கொடுப்பதற்கும், அரசினர் அலுவலகங்களின் நடைமுறைகளைத் தீர்மானம் செய்வதற்கும், பாராளுமன்றின் இரண்டு அவைகளில் பேசப் பெறும் செய்திகள் தொடர்பாகக் கருத்தறிவிப்பதற்கும் குடியரசுத் தலைவரே ஆணை பெற்றவராவார்.

முன்னாள் அரசர்களுக்கு உதவித் தொகைகளுக்காக மாநில அரசிடமிருந்துபெறும் பங்குத் தொகைகளையும், காலத்தையும் குடியரசுத்தலைவரே வரையறுக்கின்றார். நடுவணரசின் மொத்த வரி வருமானங்களை மாநில அரசவை

கட்குப் பகிர்ந்து கொடுப்பதைப் பொருட் குழுவின் பரிந்துரை மேல் தலைவரே செய்கின்றார். நாட்டிலுள்ள பேராணையர்கள் எல்லாரையும் இவரே தேர்ந்தெடுக்கின்றார். இவரால் தேர்ந்தெடுக்கப் பெறுவாருள், மாநில ஆளுநர் (State Governor), தலைமை அமைச்சர் (Prime Minister), அவர் பரிந்துரைப்படி பிற அமைச்சர்கள், தணிக்கை முதல்வர் (Auditor General), சட்ட முதல்வர் (Attorney General), மேன்முறை மன்ற நடுவர்கள் (Supreme Court Judges), உயர்முறைமன்ற நடுவர்கள் (High Court Judges), பொதுப்பணி தேர்வுக்குழு (Public Service Commission), தேர்தல் குழு, பொருட் குழு, ஆட்சி மொழிக் குழு, அரசப் பன்னர்கள் (Ambassadors), படைத் தலைவர்கள் முதலியவர்கள் தலைமையானவர்கள்.

குடியரசுத் தலைவர் சட்டத்திற்கு மாறான எத்தகைய குற்றவாளியையும் மன்னிக்கலாம் சட்டப்படி அளிக்கப்பெறும் வழக்கு மன்றக் கட்டளைகளையும், படைமன்றக் கட்டளைகளையும் அவர் மாற்றவோ, குறைக்கவோ, நிறுத்தி வைக்கவோ, தள்ளி விடவோ செய்யலாம். எல்லா வகையான சாத்தண்டத்தை (மரண தண்டனையை)யும் நீக்கி விடலாம் அரசியல் பட்டங்களையும் மதிப்புகளையும் தரக்கூடியவர் அவரே! குலங்களையும் இனங்களையும் வகைப்படுத்தும் வரம்பு இவருடையதே. பிற நாடுகளின் படையெடுப்பின் பொழுது நாட்டின் காப்புக்காக உடனடிச் சட்டத்தை குடியரசுத் தலைவர் ஏற்படுத்தலாம். ஒரு மாநில அரசின் ஆட்சிமுறைபற்றி ஆளுநர்தம் நிறைவின்மையை எழுத்து வழி தெரிவித்துக் கொண்டால், குடியரசுத் தலைவர் அம் மாநில ஆட்சியின் அப்பொழுதைய அமைப்பு முறிந்துபோய் விட்டதாக மக்களுக்கு அறிவிக்கலாம். நாட்டின் எந்த நடவடிக்கை பற்றியும் தமக்குக் கருத்துத் தெரிவிக்க மேன்முறை மன்றத்திற்குக் கட்டளையிடலாம்.

சட்டப்படி எல்லா வகையான ஆணை முறைகளையும் குடியரசுத் தலைவர் பெற்றிருந்தாலும் எல்லாவிடங்களிலும் தம் விருப்பப்படியே நடந்து கொள்ளல் முடியாது. அவர்தம் அலுவல்களைச் செய்யவும் கருத்தறிவிக்கவும் அமைச்சரவை இருக்கின்றது. அதன் துணையாகவே குடியரசுத் தலைவர் இயங்கல் வேண்டும். ஆனால், அமைச்சரவையைக் கேட்டுத்தான் எல்லா வகையான ஆணைகளையும் செயல்களையும் பிறப்பிக்க வேண்டும் என்று இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் எங்கும் குறிப்பிடப் பெறவில்லை மக்கள் அவைத் தலைவராக உள்ள தலைமை அமைச்சரும், மக்கள் தலைவராக உள்ள குடியரசுத் தலைவரும் தம்முள் ஒத்துப்போகாமல் வேறுபட்டு நிற்பார்களானால் நாட்டில் குழப்பமே நேரும். எனினும் குடியரசுத் தலைவர் ஆணைக்குத் தலைமை அமைச்சர் கட்டுப்பட்டே நடத்தல் வேண்டும்.

இந்திய நாட்டின் மக்கள் தலைவர் என்ற முறையில் அவர் கலந்துகொள்ளும் எல்லா நிகழ்ச்சிகளிலும் அவருக்கே முதலிடமும் முதல் மதிப்பும் தரப்படல் வேண்டும். அவர்தம் வேலையில் உள்ள வரை, அதனைச் சார்ந்து அவர் செய்யும் நடவடிக்கைகளின்மேல் எந்த வழக்கு மன்றத்திலும் எவரும் வழக்குத் தொடர முடியாது. அவரின் தனிப்பட்ட நடைமுறைக்காக, உரிமை வழக்கு மன்றத்தில் (Civil Court) நடவடிக்கை எடுப்பதானாலும், அவர்க்கு இருதிங்களுக்குமுன்பே அறிவிப்புக் கொடுத்தல் வேண்டும். சட்டமன்ற நடவடிக்கைகளின்பொழுது அவரைப்பற்றிக் கூறவேண்டிய எந்த நிலையிலும் எந்தச் சட்டமன்ற உறுப்பினரும் அவர்தம் இயற்பெயரைக் கூறுதல் கூடாது என்பதும் சட்ட மன்ற நடவடிக்கைகளில் ஒன்றாகும். *

பாவேந்தர் குறும்பு!

பாரதிதாசன் சிறியவராக இருக்கையில் குயில் - சிவா என்பவரும் இவரும் பல குறும்புத்தனங்களைச் செய்துள்ளனர். அவற்றில் ஒன்று இது. ஒருநாள் ஒரு வீட்டில் வாழைமரம் கட்டப்பட்டிருந்தது. அந்த வீட்டில் மறுநாள் காலையில் மஞ்சள் நீராட்டு விழா நடைபெறப் போவதாக இவர்கள் அறிந்து கொண்டனர். அன்றை இரவு இவர்கள் இருவரும் சேர்ந்து அவ்வீட்டில் கட்டியிருந்த வாழைமரங்களை வேறோர் வீட்டில் கொண்டுபோய்க் கட்டிவிட்டனர். அத்துடன் விடவில்லை. அந்த ஊர்ச் சாவடியில் தங்கியிருந்த ஏழை இரவலர்களிடத்தில் போய் அந்த வீட்டில் அதிகாலையில் சிறந்த விருந்து கிடைக்குமென்றும் கூறிவிட்டனர். அவ்வளவுதான்! விடியற்காலையிலேயே ஏராளமான இரவலர்களும், ஏழைகளும், துறவிகளும் புதிதாக வாழைமரம் கட்டப்பட்டிருந்த வீட்டு வாயிலில் நிரம்பிக் கிடந்தனர். பிறகு தெருவே பெரிய ஆரவாரப் பட்டுக் கிடந்தது. இறுதிவரை அந்த வேலையைச் செய்தவர்கள் இவர்கள் இருவரே என்று ஒருவரும் கண்டு கொள்ளவில்லை.

தென்மொழி அன்பர்தம் நலங்கருதி விலையைக் குறைத்துள்ளோம்.

துரை. மாணிக்கம் எழுதிய
இனிய, எளிய செந்தமிழ்க் காப்பியம்

கொய்யாக்கனி

பாவாணர் தம் அணிந்துரையும் புரட்சிப் பாவலர் தம் மதிப்புரையும் நூலின் பெருமையை உணர்த்தும்.

பிறர்க்கு: 2-25 தென்மொழி உறுப்பினர்க்கு: 1-50

அஞ்சல் செலவு 50 காசு தனி.

இன்றே எழுதிப் பெறுங்கள்.

தென்மொழி,
திருப்பாதிரிப்புலியூர்.

பாரதிதாசன்

பாட்டரங்கம்.

பாவேந்தும் நெஞ்சம் !

நாவேந்து பைந்தமிழுக்கு நண்ணவரும் தீமைகண்டு
பாவேந்தும் நெஞ்சப் பதைபதைப்பைச் - சாவேந்திக்
கொண்டதெனச் சாற்றினர்; கூற்றுவன் செய்கைக்கு
விண்டலரும் சொல்லற்றேன் வீழ்ந்து.

— முதுகண்ணன், புதுவை.

என்று காண்போம் !

பழுத்த தமிழ் நூலறிவால், உணர்ச்சி யோடு
பழுதாகாச் சொற்களினால் செய்யுள் நெய்த
முழுப்புலவா! தமிழினத்தார் அந்த நாளில்
மூங்கையராய்ச் செவிடர்களாய் வாழ்ந்த போது
விழிப்புணர்ச்சி தந்தவனே! பாக்கோ மானே!
விதைநெல்லைப் போன்றவனே! சாக்கா டுன்னை
அழித்தாலும், நீ எழுதிக் குவித்த பாடல்
அழியாது! மறையாது! நிலைத்தே வாழும்!

பாரதிர, விண்ணதிர, ஆளும் வெள்ளைப்
பரங்கியரின் மனமதிரப் புரட்சி செய்த
பாரதிதாசப் புலவா! பண்சு மந்த
பாட்டுதந்த மணிக்குயிலே! ஆரி யத்தின்
வேரதிரப் புதுக்கவிதை பாடித் தந்தாய்!
வெடிமருந்து போல்வாழ்ந்தாய்! பகைமை யாலே
ஆரெதிர்த்து நின்றாலும், உன்க ருத்தை
அடகுவைத்து வாழாமல், தனித்தே நின்றாய்!

நிலவுலகின் பரப்பளவு என்ன என்று
நின்றுகொண்டே அளப்பதுபோல் தோன்று கின்ற
மலைபோன்ற நெடுமேனி; எதையும் தாங்கும்
மலைக்காத தடந்தோள்கள்; தமிழுக் கென்றால்

தலையினையும் கொடுக்கவரும் நெஞ்சம்; உன்றன்
தமிழ்உருவை இனியென்று கண்ணால் காண்போம்!
நிலைகலங்கி நிற்கின்றோம்; நீயோ, மீளா
நெடுந்துயிலில் ஆழ்ந்துவிட்டாய்! நினைவா ருயே!

காலன்எனும் கண்ணிலியே! கொடிய கூற்றே!
காடடர்ந்த முதுகாடே! பாடை வீடே!
வேலையினை நீ முடித்துக் கொண்டாய் எம்மை
வெந்துயரில் தள்ளிவிட்டாய்; தமிழர் நெஞ்சம்
பாலைநிலம் ஆயிற்றே; உனது யானைப்
பசிக்கிரையாய் பாவலனோ கிடைத்தான்? எங்கள்
ஓலத்தை எவ்வாறே அறிவாய்? மாட்டாய்!
உன்வேலை என்றென்றும் அழித்தல் தானே?

அழகான சொற்களையே எண்ணி எண்ணி
ஆராய்ந்து தேர்ந்தெடுக்கும் புலவீர்! நீங்கள்
பழகுதமிழ் நடையினிலே, அழியா, இந்தப்
பாவேந்தன் புகழ்தம்மைப் பாட வாரீர்!
இழந்தபின்னர் போற்றுகின்ற தமிழ்நாட் டாரே!
இனியேனும் இவன்சொன்ன நெறியில் நின்று,
முழுவாழ்வு வாழுங்கள்; தமிழ்க்கு ழைத்து
மூச்சவிழ்ந்த இப்புலவன் புகழ்பா டுங்கள்!

– எழில் முதல்வன் எம். ஏ.

ஏட்டிலும் விழிநீர்!

பாட்டெழுத மனமில்லை, கையுமில்லை;
பண்ணருவி இயற்கையிலும் இன்பமிலை!
ஏட்டினிலே விழிநீரே நிறைந்ததம்மா!
எழுதுகோலும் எனைவிட்டுப் பிரிந்ததம்மா!

– ந. பாசீர், உரத்தநாடு.

பாண்டிச் சேரி பாவலன்!

உள்ளம் என்ற பூவிலே,
உறிஞ்சி எடுத்துப் பாவிலே
அள்ளி வைத்துத் தேனினை
அடைந்து விட்டான் வானினை!

பாட்டில் சமைத்தான் தேன்குளம்!
பேச்சில் அமைத்தான் போர்க்களம்
நாட்டின் கண்கள் நீர்க்குளம்
ஆக்கி நகர்ந்தான் மேற்களம்!

பைந்த மிழ்க்குக் காவலன்;
பாண்டிச் சேரி பாவலன்!
செந்த மிழ்க்குச் சேவகன்
செத்தான் என்னல் கீழ்வுளம்!

பாட்டுத் தீட்டி வாழ்பவன்;
பரந்த புகழில் வாழ்பவன்;
ஏட்டில் என்றும் வாழ்பவன்
எங்கள் நெஞ்சில் வாழ்கிறான்!

—மு. மகிழரசன்.

புலவா போற்றி!

"வாளெடுத்து வீசெ"ன்றாய் வரிந்து கட்டி,
வருகின்ற தமிழ்ப்பகையைச் சீய்ப்போம்! என்றாய்.
"தோளெடுத்த தமிழனென்றால் தொடங்கு போரை;
தூங்காதே தமிழுனது வுயிரா" மென்றாய்!
ஆளடுத்துக் கூட்டியோர் அணிவ குத்தே,
ஆர்ப்பரிக்குந் தமிழ்ப்பகையா மிந்தி தன்னை,
மாளவைத்துப் பார்ப்பதற்குள் மாண்டு விட்டாய்!
வாகைதனைப் பெற்றிடுவோம்! தலைவா போற்றி!

வாடிவிட்ட கொடியாகக் கிடந்த நாட்டில்
வளர்வேனில் பாரதியும் பிறந்தான். ஆனால்
ஓடிவிட்டா னிளமையிலே யென்பதாலே,
உடனெழுந்தாய்! 'ஓ'வென்று வீசு கின்ற
'ஆடி'யதன் புயலாகப் பாக்கள் தந்தாய்!
அங்கேதான் புரட்சிதனை முளைக்க விட்டாய்!
கூடியவர் அதன்விளைவை யடையு முன்னே
கூடாகி நின்றாயே? கோவே போற்றி!

இருளடைந்த வீட்டுக்கோர் விளக்கம் தந்தாய்;
இலங்குகிற தமிழுக்கோர் முரசந் தந்தாய்!
மருளடைந்த தமிழர்க்கே மான மூட்டி,
வற்றாத மொழிப்பற்றை வழங்கினாயே!
உருவிழந்த தமிழ்க்கூட்டம் ஒன்று சேர
ஓங்காரச் தமிழ்ச் சங்கம் ஊதினாயே!
செருக்கடைந்து தலைநிமிரும் நேரம்; அந்தோ!
சென்றாயே! தமிழ்மறவா! புலவா! போற்றி!

ஓடப்ப ராயிருக்கு மேழை யப்பர்,
உதையப்ப ராகிவிட்டார் உயர்வா" ரென்றே
பாடப்பா பாடென்று பாடி னாயே!
பாரப்பன் அதுகேட்டு விழித்தா னப்பா!
மேடப்பர் நிலைமாற, மேல்கீ ழப்பர்
மெதுவாக ஓடுமப்ப ராகு முன்னே,
ஏடப்பா! தமிழப்பா! எழுத்தின் அப்பா!
ஏனப்பா! போனாய்?என் னப்பா போற்றி!

ஊரதிரப் பாவதிரு முனது நாவி(ல்)
உண்மையுடன் நேர்மையறம் ஓங்கி நிற்கும்!
போரெதிரப் பேச்சுதிரும்; புன்மை போக்கும்;
புதுப்புதிய வகையினிலே கருத்துச் சேர்க்கும்!
பாரதியின் தாசனெனப் பெயருங் கொண்டாய்;
பைந்தமிழின் தாசனென வாழ்ந்து நின்றாய்!
பேரதிருந் தென்னாட்டின் பெரும! நீயும்
பெற்றாயே! பெரும்புகழும்; கோவே! போற்றி!!

— கவி. முத்தம்.

நின்மேல் ஆணை...!

செந்தமிழ்க் குயிலே! எந்தமிழ்க் கிளியே!
பைந்தமிழ் குற்ற பாவல!
இறந்தனை நீயும்! எப்படித் தான்தமிழ்
மறந்தனை; மண்ணில் மறைந்தனை; எம்மைத்
துறந்தனை! ஐயகோ, துடிக்கவைத் தெங்கே
பறந்தனை? கண்கள் பனிக்குளந் தேக்கும்;
கைகள் விழுந்தன; கால்கள் தளர்ந்தன;
மெய்கள் சோர்ந்தன; வெயர்த்தன!
நடையே நின்றது! நடுங்கிய துளமே!
படையே றெனமுன் பாய்ந்தனை; படைமுகம்
நின்றனை, தமிழரின் நினைவெலாம் ஒளிர்ந்தனை!
குன்றெனும் புகழைக் குன்றாது செய்தனை!
நின்னுடை நினைவெலாம் தமிழனுக் குழைப்பதே!
நின்னுடை வினையெலாம் தமிழகம் மீட்பதே!
நின்னுடைப் பெருவழிச் செல்வோம்; நின்றனின்
நன்னருங் கருத்தெலாம் நண்ணி நடப்போம்!
நின்மேல் ஆணை நிகழ்த்தினோம்!
பொன்போல் நின்பா பொருள் விளைப்போமே!

— இளஞ்சித்திரன்.

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டொன்றை எழுதியமையால் பாரதிதாசனுக்கு அப்பெயர் கிடைத்தது என்று கூறுவார்கூற்று பொருளற்றது. புரட்சி என்று சொல் பாரதிதாசனைப் பாரதியாரின் இந்தியநாட்டுணர்வினின்று வேறு பிரித்துக் காட்ட மக்களால் தரப்பெற்ற ஓர் உணர்வு விளக்கச் சொல். இவரின் சொல்லில், செயலில், பாட்டில், வாழ்வில் எல்லாவற்றினும் புரட்சிக் கருத்துகள் நிரம்பித் தமிழர் குமுகாயத்தையே விடுதலை நாட்டம் உடையதாகச் செய்தன. தம்முடைய அரிய தமிழ் நாட்டுத் தொண்டுக்குத் தமிழ் மொழியையே கருவியாக்கிக் கொண்டார் பாரதிதாசன்.

'செந்தமிழ்ச் சொல்லால் செயலால்
தடம்பெருந் தோளால் தொடங்குக பணியை'

என்ற வரிகள் பாரதிதாசன் தமிழ்நாட்டுப் பணிக்குத் தம்மையும் தமிழையும் ஈடுபடுத்திக் கொண்டதைக் காட்டுவனவாம்.

பாரதிதாசன் தம் பேரன்பாலும், நன்றியுணர்வாலும் பாரதியைப் பாராட்டும் இடங்களிலெல்லாம் தம்முடைய உள்ளுணர்வையும், தமிழ்க்குத்தாம் எந்த வகையில் தொடர்பு கொண்டுள்ளார் என்பதையுமே உணர்த்துகின்றார்.

தமிழகம், தமிழுக்குத் தகும்உயர் வளிக்கும்
தலைவனை எண்ணித் தவங்கிடக் கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினான்

என்று பாரதிதாசன் குறிப்பிடும் வரிகள், தாம் கொண்ட தமிழக விடுதலை வேட்கையைக் கருத்திற் கொண்டே பாடப் பெற்றதாக நமக்குப் புலப்படுகின்றது. மேலும் அவர் பாரதியாரைக் குறிப்பிடும் பொழுது

பைந்தமிழ்த் தேர்ப் பாகன்; அவனொரு
செந்தமிழ்த் தேனீ; சிந்துக்குத் தந்தை!
குவிக்கும் கவிதைக் குயில்! இந் நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு!
நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா!
காடு கமழும் கற்பகச் சொற்கோ!
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்!
திறம்பாட வந்த மறவன்; புதிய
அறம்பாட வந்த அறிஞன்; நாட்டிற்
படரும் சாதிப் படை மருந்து!

மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்!
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்

என்று கூறும் வரிகளில் தம்மையே பாரதிதாசன் வெளிப்படுத்திக் காட்டுகின்றார் என்று கொள்ளலாம். அவரின் உள்ளமே இவ்வடிகளில் நன்கு படம் பிடிக்கப்பட்டிருக்கின்றது. பாரதிதாசன் தமிழ்த் தொடர்பும், விடுதலை வேட்கையும், புரட்சி வேட்கையும் நாளுக்கு நாள் பெருகத் தொடங்கின. அவரின் இளமைக் கால நிகழ்ச்சிகள் முற்றும் இவற்றை நினைவு படுத்துவனவாகும். நிரவியிலிருந்த அவர் புதுவைக்கு விரைந்து மாற்றப்பட்டார்.

இந்நிலையில்தான் பாவலர் பாரதிதாசனுக்குத் திருமணம் நிகழ்வதாயிற்று. 1921-ல் இவர் பட்டாம்பாக்கத்தில் உள்ள பரதேசி-காமாட்சி என்பார் தம் திருமகள்: பழநியம்மாளை மணந்து கொண்டார். திருமணம் தந்தையாரின் விருப்பப்படியே நடந்தது. இவர்தம் துணைவியார் திருவாட்டி: பழநியம்மாள் குடும்ப ஈடுபாடும் பண்பும் அன்பும் வாய்ந்து சிறந்து விளங்கினார். பாவலர்தம் குழந்தை உள்ளத்துக் கேற்றபடி அவர் மனம் கோணுதவாறு இனிதே இல்லறம் நடத்திவந்தார். இவரும் தம்மனைவிமேல் அன்பும் பரிவும் கொண்டு விளங்கினார். சிற்சிலகால் இவர்தம் விடாப்பிடி காரணமாகக் குடும்பத்தாரின் விருப்பங்களும் செயல்களும் தோல்வியடைவதுண்டு. இவற்றிற் கெல்லாம் அம்மையார் மனம் நோகாது, கணவற்குற்ற தொண்டுகளிலேயே தாம் இன்பம் கண்டுவந்தார். 1922-இல் இவர்களின் இல்லறப் பயனாக ஒரு பெண்மகவு பிறந்தது. அதற்குச் சரசுவதி என்று பெயர் சூட்டினர்.

பாரதிதாசன் தமிழ்ப்பற்று நிரம்பியவராகவும் தமிழ் மொழி வளர்ச்சியில் மிகுந்தநாட்டம் கொண்டவராகவும் விளங்கினாலும் தனித் தமிழ் இயக்கம் அக்கால் மிகுதியாகப் பரவாத காரணத்தால் தம் பிள்ளைகள் நால்வருக்கும் வட மொழிப் பெயராகவே வைத்திருப்பது குறிக்கத் தக்கது. பின்னர் தாம் எழுதிய பாவியங்களிலும், நாடகங்களிலும் வரும் தலைவர் தலைவியர்கட் கெல்லாம், மாவரசு, நாவரசு, வேடப்பர், அழகர், புலித்திறல், வையத்திறல், நல்லமுத்து, மலர்க்குழல், நகைமுத்து, கரும்பு, மின்னொளி, முத்துநகை, பொன்னி, முள்ளி, அழகம்மை, பச்சைக்கிளி முதலிய அழகிய, தூய தனித்தமிழ்ப் பெயர்களாகச் சூட்டி மகிழ்ந்த பாவலர் தம் பிள்ளைகளுக்கு மட்டும் சரசுவதி, வசந்தா, கோபதி (இக்கால் மன்னர் மன்னன் என்றும் கூறப் பெறுவர்), ரமணி என்னும் வடமொழிப் பெயர்களையே சூட்டியமையாலும், இளமைக் காலத்தே தாம் எழுதிய பாடல்களில் வரைதுறையன்றி ஏராளமான வடசொற்களைப் புணர்ந்து எழுதியுள்ளமையாலும், பாவலர் பாரதிதாசன் அவர்கள் தொடக்கக்

காலத்தே தனித்தமிழ்ப் பற்று நிரம்பியவராக இருந்திலர் என்று கருத வேண்டியுள்ளது. இதற்குக் காரணம் முப்பது நாற்ப தாண்டுகட்கு முன் தமிழர்க்கிருந்த வடமொழி மயக்கும் மொழியுணர்வுக் குறைவுமே ஆகும்.

அற்றை நாளில் பெரியார் திரு. ஈ. வே. இராமசாமியால் தோற்றுவிக்கப் பெற்ற தன்மதிப்பு(சுயமரியதை)க் கழகம் பாரதிதாசனை மிகுதியும் மாற்றியது எனின் மிகையில்லை. தொடக்கத்தில் இவர்க்கிருந்த சமயப்பற்றையும், கடவுட் பற்றையும் அக்கழகக் கொள்கைகள் மாற்றியமைத்து, இவர் பாக்களுக்கு ஒரு தனி உணர்வும் உருவமும் கொடுத்தன. இவ்வுணர்வு இவர்பால் தலையெடுத்திராமற் போமாயின் பாரதிதாசனும், பாரதியாரைப் போலவே இறைப் பாடல்களையும் பாட நேர்ந்திருக்கும். அவ்வாறு சிறு தெய்வ வணக்கப் பாடல்களையும் இந்திய தேசியப் பாடல்களையும் இவர் பாடியிருப்பாராஞல், அவை பாரதியாரின் தெய்வப் பாடல்களினும் தேசியப் பாடல்களினும் சிறந்து விளங்கும் என்பதை மறுக்கமுடியாது. அதற்குப் பாரதிதாசன் தொடக்கக் காலத்தெழுதிய சுப்பிரமணியர் துதியமுது போன்ற வணக்கப் பாடல்களும், கதர்ப்பாட்டு, சமத்துவப் பாட்டுப் போன்றதேசியக் குமுகாயப்பாடல்களுமே தக்கசான்றுகளாகும். ஆனுல் பாரதிதாசன் அவ்வாறு ஈடுபடாமைக்கு அவர் சார்ந்த பகுத்தறிவியக்கமும், அவர்கொண்ட தன்மானக் கொள்கையும், புரட்சியுள்ளமுமே காரணங்களாக விருந்தன. பாரதியாரிடம் இருந்த பாத்திறத்தையும் அரிய ஆற்றலையும் கூடப் பாரதிதாசன் போன்றவர்களே தமிழுலகுக்கு எடுத்துக் காட்டினுர்கள். 'கல்கி' அக்கால் 'பாரதியார் உலகக் கவி அல்லர்' என்று எழுதிய கட்டுரைக்குப் 'பாரதியார் உலகக் கவி' என்று பாரதிதாசன் எழுதிய மறுப்புப் பாடலே இக்கூற்றுக்குச் சான்ருகும்.

செந்தமிழ்ப்பற்றும் வெந்திறலாண்மையும் பாரதிதாசனுக்கு மிக்கிருந்தமையால், இவர் கொண்ட கொள்கைகளை எவர்க்கும் அஞ்சாது வெளியிடுவாராயினர். இவர்க்கிருந்த தமிழ்ப் பற்று அளவில் அடங்குவதன்று.

"கனியிடை ஏறிய சுளையும்-முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும்-காய்ச்சுப்
பாகிடை ஏறிய ருசியும்,
நனிபசு பொழியும் பாலும்-தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும்-தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்" — என்றும்,

"செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக்களித் தேனே!
நைந்தாய் எனில்நைந்து போகுமென் வாழ்வு" -என்றும்

"தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனைஎன்
தாய்தடுத் தாலும் விடேன்" –என்றும்

தமக்குள்ள ஆராத் தமிழ்க் காதலை வெளியிடும் இடங்கள் பலவாகும். அவ்வரிகளெல்லாம் நெஞ்சில் இனிக்கின்றன. தமிழையும் தமிழ் நாட்டையும் மீட்க இவர் வெளியிடும் புரட்சிக் கருத்துகள் இளைஞர் நெஞ்சங்களில் எரிமலையின் கொந்தளிப்பையே வருவிப்பனவாம்! பாரதிதாசனின் உண்மை வரலாறு அவர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கையில் இல்லை. அவரின் புரட்சியுள்ளத்தில்தான் ஒளிர்ந்து கிடக்கின்றது. இருபதாம் நூற்றாண்டின் மக்களுக்கே தமிழ்ப் புரட்சி என்ற சொல்லுக்கு விடை தெரியும். முற்காலப் புலவர்கள் இத்தகைய புரட்சியை இவ்வளவு வெளிப்படையாக எங்கும் கூறிவிடவில்லை.

-இன்பத்
தமிழ் குன்றுமேல் தமிழ் நாடெங்கும் இருளாம்!"

என்று தமிழர்க்கு எச்சரிக்கை செய்கின்றார் பாவலர். அவர்தம் புரட்சித் துடிப்புக்குக் காரணமாக இருப்பதும் தமிழே!

'தமிழ் எங்கள் இளமைக்குப் பால்–இன்பத்
தமிழ நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!

என்று கூறித் தமிழைக்காக்கத் தமிழையே படையாக ஏந்தி இப் புரட்சிப்பாவலர் போரிடும் மறக்காட்சி, தமிழர் தம் உள்ளங்களில் என்றும் நிலைக்கும் அரிய ஆற்றலைப் பெற்றிருக்கின்றது இப்புரட்சி மனப்பான்மையால் இவர்பெற்ற துயரங்கள் பலப்பல; இவர் பெறாத நன்மைகள் கோடி. இருப்பினும் 'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை' என்று தம்மைத் தாமே தேற்றிக் கொள்கின்றார். தமிழன் உய்வுக்கும் வாழ்வுக்கும் அடிப்படையாக நிற்பது தமிழே என்று கூறித் தமிழ் இளைஞர் தமக்கு இவர் ஊக்கம் கொடுத்ததைப்போல் வேறு எந்தப் புலவரும் இதுவரை செய்ததில்லை.

"உரம்பெய்த செந்தமிழுக் கொன்றிங்கு நேர்ந்ததென
உரைக்கக் கேட்டால்,
நரம்பெல்லாம் இரும்பாகி நனவெல்லாம் உணர்வாகி
நண்ணி டாரோ"

என்ற வரிகள் தமிழர்தம் மானமற்ற நெஞ்சை மறநெஞ்சமாக்கிக் கூன்பெற்ற உடலை இரும்பாக்குகின்றன. இவ்வுணர்வால் அவர் பெற்ற துயர்களையும் தொல்லைகளையும் அவரின் அஞ்சாநெஞ்சம் பொருட்படுத்தியதில்லை

"ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ
அல்லல்கள் வரின் ஏற்பேன்!
ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்
குவப்புடன் நான் சேர்ப்பேன்!"

என்று தம் ஈக நெஞ்சத்தை இளைஞர்தம் முனைப்பிற்கு எடுத்துக் காட்டாக முன்வைக்கின்றார் பாவேந்தர். 'பெறுவதற்கோர் ஏணி பெற்றும், ஏறாத தமிழர் உயிர் வாழ்வதினும் இறத்தல் நன்றே' என்று சூடு சுரணையற்ற மரக்கட்டைத் தமிழர் தம்மைத் தட்டி எழுப்புந் திறம் இவர் பாடல்களில் உயிர் நாடியாகத் திகழ்கின்றது. இவருடைய வாழ்வே தமிழ் மறுமலர்ச்சி நிறைந்ததாகக் காட்சியளிக்கின்றது "வண்டமிழ் நைந்திடில் எது நம்மைக் காக்கும்?" என்று இவர் கேட்கும் கேள்விக்கு இக்காலத் தமிழிளைஞர் தாம் என்ன விடை பகரப் போகின்றார்?

சாவிலும் தமிழ் வாழ்வு!

பாவேந்தர் பாரதிதாசன் சென்னை மருத்துவ மனையில் நினைவற்ற நிலையில் படுத்திருந்தார். இறப்பதற்கு இரு நாட்கள் முன்னை, புலவர். திரு. மு. வரத ராசனார் பாவேந்தரைப் பார்க்க வந்திருந்தார். மு. வ. வின் வரவு பாவலருக்கு உணர்த்தப் பெற்றது. பாவலர் மு. வ. வைப் பார்த்துப் புன்னகைசெய்தார். உடனே கையசைத்து அருகில் வரச் செய்து "அடுத்து நடக்கும் புலவர் குழுவின் கூட்டம் பெங்களூரில் நடக்கப் போவதாக அறிந்தேன்; நம் தமிழ் நாட்டின் இசைப் பாடகியான திருவாட்டி. சுப்பு லட்சுமியை அங்குள்ள தமிழ்ப் பகைவர்கள் பாடவிடாமல் தடுத்தனரே! அச்செயலுக்குக் கூட நான் கண்டனக் கூட்டங்கள் போட்டேனே! அவ்வூரில் போய் ஏன் புலவர் குழுக் கூட்டத்தை நடத்தவேண்டும்? அங்கு நடத்த வேண்டா என்று போய்ச் சொல்லுங்கள்" என்று கண்களில் ஒளியேறுமாறு உரைத்தார். செத்துக் கொண்டிருக்கையிலும் சாகாத மான உணர்வு பாவேந்தரின் தனி உடைமை!

தமிழர்தம் மொழிப் புரட்சிக்கும் விடுதலைப்புரட்சிக்கும் நாட்டு வாழ்த்துப் பாடிய முதல் விடுதலைப் புலவன் பாரதிதாசன். கழகக் காலத்திற்குப்பின் தமிழ்ப் புலவர் உரிமையுமின்றி எழுச்சியுமின்றி மன்னர் தம் மதுமயக்கங்களிலும், மங்கையர் தம் கொங்கை குறிகளிலும், பட்டாடை முத்து மாலை முதலிய மணியாரவாரங்களிலும் ஈடுபட்டு நாட்டையும், நாகரிகத்தையும் பிறர் ஏச்சுக்கும், பேச்சுக்கும், கைவாள் வீச்சுக்கும் ஆளாக்கி வந்தனர். அதனால் ஈடும் எடுப்புமற்று, உயர்ந்த நாகரிகம் படைத்து முழுவளர்ச்சியுற்ற ஒருமொழியாகத் தமிழ் இருந்தும், போலிப் புலவர்தம் கையடைவால் நலிவும் மெலிவும்பெற்று தன் உயர்ந்த நிலையினின்றும் இழியலானது. பாரதியார் ஊட்டிய உணர்வுப் பாலைப் பருகி, அவரினும் மேலாக மொழி காக்க வீறு கொண்டெழுந்தார் பாவலர் பாரதிதாசன்.

"தமிழ்என்னும் பேருணர்ச்சி இந்நாள் போலே
தமிழ்நாட்டில் எந்நாளும் இருந்ததில்லை;
தமிழர்க்குத் தொண்டுசெய்யும் தமிழனுக்குத்
தடைசெய்யும் நெடுங்குன்றும் தூளாய்ப் போகும்!"

என்ற வரிகளில் அவர்நெஞ்சில் நெருப்புப் பொறிபோலக் கிளம்பிய உணர்வு, கீழ்வரும் பாட்டில் கொழுந்துவிட்டு எரியும் தணலாகி, இவ்வையத்தையே நடுங்க வைப்பதைப் பாருங்கள்.

"செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க
நந்தமிழர் உள்ளத்தில் வையம் நடுநடுங்கும்
வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்ததென்று
குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே!

பாவலரின் புரட்சிக் கனல் பற்றி எரிகின்றது. அதன்மேல் ஆணையிடுகின்றார் பாவலர்.

"எரிகின்ற எங்களின் நெஞ்சமேல் ஆணை!
இனியெங்கள் ஆட்சிஇந் நாட்டிலே!"

இதைவிடத் துணிவாக எழுதிய பாவலர் இதுவரையில் தமிழ்நாட்டில் தோன்றவில்லை. இத்தகைய புரட்சிக் குரலுக்கும் செவிமடுக்காத தமிழரும் இனி உய்யப் போவதில்லை. ஏனெனில் இதற்குக் காரணமாக இருக்கின்ற எழுத்தாளர்கள் எல்லாரும் கோழைகள். வெறும் இலக்கியக் காதலில் தம் நெஞ்சங்களைக் கரையவிடும் மானமற்றவர்கள். வரிக்குவரி நயங்களை வாரியிறைத்துக் காசு பறிக்கின்ற தன்மானமற்றவர்கள். அவர்கள் தம் கைகளில் பிடித்திருக்கும் எழுது கோல்கள் குள்ளநரிகளின் தொடை எலும்புகளால் ஆனவை. அவற்றில் ஊற்றப்பட்ட மை பெண்ணடிமைகளின் குருதிநாளங்களினின்று வடித்தவை. அவர் எழுதும் எழுத்துகள் முனை முறிந்த வாள்கள்! அவர்தம் கருத்துகள் காதறுந்த ஊசிகள்! அவை ஒருவர் உள்ளத்தையும் தீண்டுவதில்லை. போலி மழுப்பலும், கூலிக் காசின் களிம்பும் ஏறப்பெற்ற அவர்தம் நூற்கள் எந்த மக்களமைப்பையும் முன்னேற்றிவிடப் போவதில்லை. பாவேந்தர் கூறுவது இது:

"இருக்கும் நிலை மாற்ற ஒரு புரட்சிமனப் பான்மை
ஏற்படுத்தல், பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடனாம்"

" .... அந்தமிழர் மேன்மை
அழிப்பாரைப் போற்றுதற்கும் ஏடுபல வாழ்ந்தால்
எதிர்ப்பதன்றோ தமிழர்களின் எழுதுகோல் வேலை!
ஏற்றசெயல் செய்தற்கும் ஏன்அஞ்ச வேண்டும்?"

அவர் கேள்வி இது

புரட்சிப் பாவலரின் எழுச்சிக் கருத்துகள் தன்மதிப்புக் கழகத்தின் கண்ணுடிகள். தன்மதிப்புக் கழகத்தைத் தோற்று வித்த பெரியார் திரு. ஈ. வே. இரா. கூடத் தமிழ் மொழிபற்றியும் தமிழ்நாடு பற்றியும் கூறமுடியாமல் திணறிய கருத்துகளைப் பாவலர் எவர்க்கும்அஞ்சாது வெளிப்படுத்துகின்ருர். பெரியாரின் தமிழ்க் கொள்கை தமிழ் மொழிக்கு நலந்தராத தன்மையில் இருப்பதால்தான், அவர் கூறும் உயர்ந்த சீர்திருத்தங்கள் தமிழ் நாட்டில் ஆழப்பதியவில்லை. அவரின் தமிழ்ப் பற்றில்லாக் கொள்கையால்தான் தமிழர்எழுச்சிக்கு அவர் புரட்சிக்கருத்துகள் அடிகோலவில்லை. அப்படியின்றிப் பாவலரின் பாவுள்ளம் தமிழரை இன்றில்லாவிடினும் என்ருவது ஒருநாள் தட்டி எழுப் பக்கூடியது. அவர்தம் பாவடிகள் பட்டு உருவாகாத தமிழர் இனி இரார். அவர் முழக்கம் கேட்டு விழிக்காத தமிழன் இனி இரான். அவர் விட்டுச்சென்ற பணியினைத் தொடர்ந்து நடத்தக் கூடிய மறவர்களை அவர் ஏராளமாக உருவாக்கிச்சென்றுள்ளார். அவரின் வலிந்த ஆழமான இடியேறு போன்ற நெடிய முழக்கம் தமிழகக் குன்றங்களிலும் காவிலும் என்றும் எதிரொலித்துக் கொண்டிருக்கும்.

"வையம் ஆண்ட வண்டமிழ் மரபே!
கையிருப்பைக் காட்ட எழுந்திரு!
குறிக்கும் உன் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக்கொணுக் கடல்போல் மாப்பகை மேல்விடு!
நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திரு!
பொன்மொழிக்கு நீ புதுமை ஏற்றுவாய்!
மக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக!"

". . . . . சிறுத்தையே வெளியில் வா!
எலிஎன உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலிஎனச் செயல் செய்யப் புறப்படு வெளியில்!
சிங்க இளைஞனே! திருப்பு முகம்! திறவிழி!
இங்குன் நாட்டுக் கிழிகழுதை ஆட்சியா?
கைவிரித்து வந்த கயவர், நம்மிடைப்
பொய்விரித்து நம் புலன்கள் மறைத்துத்
தமிழுக்கு விலங்கிட்டுத் தாயகம் பற்றி
நமக்குள உரிமை தமக்கென்பார் எனில்
வழிவழி வந்தஉன் மறத்தனம் எங்கே?
மொழிப்பற் றெங்கே? விழிப்புற் றெழுக!"

பாவேந்தரின் பதை பதைக்கும் உயிர்த் துடிப்பு! அவர் இனி மேல் தமிழர்களுக்குச் சொல்ல வேண்டுவது ஒன்றுமில்லை.

அவர் தம்மையே தமிழர்க்காகக் கொன்று கொண்டுள்ளார் எனின் மிகையில்லை.

"தென்னாட்டின் நிலைநினைத்தால் வெடிக்கும் உள்ளம்!
செந்தமிழர் நிலை நினைத்தால் துடிக்கும் நெஞ்சம்"

எத்தகைய தற்கொலை! தமிழனின் உயிர் எழுச்சிக்கு இத்தகைய வரிகளும் பயன்படவில்லையானால் அவன் உடலில் உள்ள எல்லா உயிரணுக்களும் பிறனுக்குச் சொந்தமான அணுக்களாக ஆகியிருத்தல் வேண்டும்! அவனை மீளாத் தூக்கத்தினின்றும் விழிப்படையச் செய்யப் பாவேந்தரின் வரிகள் கட்டாயம் போர் முரசமாக எதிர் காலத்தில் பயன்படும். அவர்தம் அழியாத பாவாற்றல் செத்துக் கொண்டிருக்கின்ற தமிழ் உள்ளங்களைச் சாகாமல் காக்கும். அவர்தம் வாழ்வு இப் பாடல் வரிகளிலேயே உயிர் பெறுகின்றது. அவர்க்கென்று தனி வரலாறு இல்லை. அவர்க்கென்று தனி அமைப்பு இல்லை. தம்மையும் தமிழையும் தமிழ் நாட்டையும் ஒன்றாகவே ஆக்கிவிட்டிருந்தார். "சான்றாண்மை இவ்வுலகில் தோன்றத் துளிர்த்த தமிழை" அவர் காதலித்ததுபோல் கம்பனும் காதலிக்கவில்லை. தமிழே அவர் உயிர்! மூச்சு! அவர் தமிழின் உருவம்!

"என் செய்வேன்! நாட்டைக் காக்க
எவருளார்? தமிழ்ச்சான் றோரும்
மன்னவன் கொடுமைக் கஞ்சி
வடக்கிருந் துயிர்நீத் தாரோ?
புன்செயல் தீர்ந்த தில்லை.
புலவர்கள் விழிக்க வில்லை.
நன்செயில் நடவு மில்லை
நாய்வாலும் நிமிர்வ தில்லை.
என்கடன் என்ன நெஞ்சே ?
பணி செய்து கிடப்ப தொன்றே!

மேல்நாட்டு விடுதலைப் புலவர்களுக்கு இவ்வளவு வேலையில்லை. அவ்வந் நாட்டு மக்கள் இத் தமிழ் நாட்டு மக்களைப்போல் அறிவுக்கான அத்தனை வழிகளிலும் குருடர்களாக இல்லை. அரசியல் தெரியாராய், குமுகாய அமைப்பு விளங்காராய், பொருளியல் நினையாராய், அறிவியல் முனையாராய், மூடநம்பிக்கை நிரம்பிய பேதைப் புழுக்களாக இத் தமிழர்கள் நெளிவதைப்போல், பழைய உரோம, கிரேக்க, ஆப்பிரிக்க மக்கள்கூட நெளியவில்லை இத்தகைய தெளிவு நலஞ் சாராக் கழிகடைகளுக்கு— மொழிப்பற்றையும், நாட்டுப் பற்றையும், குமுகாய அரசியலறிவுகளையும் சாற்றி விழிப்புறச் செய்வதற்கு நூறு பிளேட்டோக்

களும், ஆயிரம் ரூசோக்களும், பத்தாயிரம் மார்க்சுகளும், நூறு யிரம் வால்டேர்களும் கூடப் பயன் படார். இந் நாட்டிற்குத் தேவையானதெல்லாம் ஓர் அணுக் குண்டே! அல்லது ஓர் எரி மலையே! 'இடித்திடித்துக் கட்டுரை கூறின் செவிகொளார்; கண் விழியார்; நெட்டுயிர்ப் போடுற்ற பிணங்களாக' உள்ள தமிழ் நாட்டு மக்களைப் பாரதிதாசனின் இத்தகைய பாடல்கள் விழிப் படையச் செய்ய இன்னும் நூ ரு ண் டு க ள் போகவேண்டும். அதன் பின்னர் தான் இவர் ஊன்றிய புரட்சி வித்தின் உருவம் தெரியும்.

"தமிழர் நாம் என்றால் நம்பால்
தமிழ் உண்டா? தமிழ் ஒழுக்கம்
அமைவுறச் சிறிது முண்டா?
அன்றைய மறத்தனந்தான்
கமழ்ந்திடல் உண்டா? கல்வி
கலைநலம் உண்டா? நெல்லின்
உமிமுனை அளவி லேனும்
ஒற்றுமை உண்டா?"

என்று பாவேந்தர் வினவிய வினாக்களுக்கு விடை எழுதப் பல்லாண்டுகள் செல்லும். அதுவரை இப்பாடல்கள் த மி ழ ர் உள்ளங்களைக் கொக்கிப் புழுக்கள் போலக் குடைந்து கொண் டிருக்கும்.

"நம்நாடு தமிழ்நாடு; நாமெல்லாம் தமிழ்மக்கள்;
இன்பம் கோரி
இங்கிலத்தில் வாழ்வதெனில் மூச்சாலே! அம்மூச்சுந்
தமிழே! அந்தப்
பொன்னான தமிழாலே தமிழ்ச்சான்றோர் புகன்றதமிழ்ச்
சட்டம் ஒன்றே!
இந்நாட்டை ஆண்டிடுதல் வேண்டுமதை இகழ்வாரை
ஒடுக்க வேண்டும்"

இத்தகைய மொழிக்காப்பு, மொழியுணர்வு தமிழக ம ண் ணி ல் பாரதிதாசனால் ஊன்றப்பெற்றன. இது போன்ற நூற்றுக் கணக் கான தமிழுணர்வுப் பாடல்களையும் ஆயிரக் கணக்கான சிறு சிறு குறிப்புகளையும் ஆங்காங்கே தம் பாடல் நூல்களில் பரவ விட்டிருந்தும், தாமே தமிழாக மாறியிருந்தும், தாம் எ ழு தி ய ஏறத்தாழ மு ந் நூ று தலைப்பிட்ட பாடல்களில் ஆறே ஆறு பாடல்களைத் தமிழ்க்காக எழுதிய பாவலர் சுப்பிரமணிய பாரதி யார், பாரதிதாசனினும் மேலாகத் தமிழர்களாலேயே கொண் டாடப் படுகின்றமைக்கும், புகழ் பெற்றமைக்கும், பல மொழி

களிலும் அவர் தம் பாடல்கள் மொழிபெயர்க்கப்படுகின்றமைக்கும் காரணம் என்ன? அவரின் பாடல்கள் இவரின் பாடல்கள் போல் ஒரு மொழி பேசும் நாட்டிற்கே உரியவாக இராமல், எல்லா இனத்தினர்க்கும், மொழியினர்க்கும் தேவையானவாக இருப்பதாலா? இல்லை இல்லை. பாரதிதாசன் பாடல்களிலும் அத்தகைய பொதுமைப் பாடல்கள் வாழ்வு இலக்கியங்கள் பல உண்டு. ஆகையால் அது காரணமாகாது. பின்னை எதுவெனின், பாரதியார் பார்ப்பனர் என்பதால், பார்ப்பனர்கள் அவற்றை வெளிக் கொணர்வதினும், பரப்புவதினும் தமிழரினும் பரபரப்பும் நாட்டமும் உடையவராக இருந்தனர் என்பதும், அவ்வாறு வினைபுரிவார்க்குத் தமிழடிமைகள் துணைநின்றமையும், பாரதியார் பாடல்களில் பாரதநாடு மிகவுயர்த்தப்பட்டுப் பேசப் பெறுகின்றமையும், பாரதிதாசன் பாடல்களில் அடிமையுற்றுக் கிடக்கும் தமிழர்க்கு வேண்டிய ஆக்கமும் ஊக்கமும் பேரளவில் ஊட்டப்பெற்று நாட்டு விடுதலைக்கும் மொழிவிடுதலைக்கும் போராடுமாறு அவர்க்கு அழைப்பு விடப் பெற்றிருப்பதுமே, அவ்வாறு பாரதிதாசன் பாரதியார்போல் போற்றப் பெருமைக்குக் காரணங்கள் ஆகும் என்று அறிந்து கொள்க. இத்தகைய காரணங்களை ஒருவாறு நம் பாரதிதாசனும் பிறழ உய்த்துணர்ந்தே தம் இறுதி நாட்களில் தமிழ் உணர்வோடும், தமிழ் நாட்டு உணர்வோடும், பாரத நாட்டுப் பற்றையும் ஏற்றி ஒரு சில பாடல்களை யாக்க நேர்ந்தது. ஆனால் அத்தகைய பாடல்

பாவேந்தரின் நெஞ்சுரம்!

புதுவையில், முத்தமிழ் மன்றத்தின் சார்பில், திருக்குறளுக்கு இசையமைத்து இசைப் பாடல்களாகவே பாடிக்கொண்டு வரும் புலவர் ஒருவர்க்குப் பாராட்டு நடைபெற்றது. அவ்விழாவிற்குப் பாவேந்தர் தலைமையேற்றார். கூட்டத்தின் தொடக்கத்தில் தலைவர் திருக்குறள் இசைப் புலவரை வரவேற்று அவர் தொண்டை மிகவும் புகழ்ந்தார். "திருக்குறளைப் படித்தறியாத மக்கட்கெல்லாம் பண்ணோடு பாடப்பெறுகின்ற திருக்குறளடிகள் நல்ல பயனைத் தரும்." என்றெல்லாம் பாராட்டினார். கூட்டம் தொடங்கிப் புலவர் ஒவ்வொரு குறளையும் ஒவ்வொரு பண்ணில் பாடிக் கூட்டத்தாரை மகிழ்வித்தார். கூட்டம் இசையால் மெய்ம்மறந்திருந்தது. முதலதிகாரம் முடியும் தறுவாயில் பாவலர் திடுமென எழுந்து புலவரை நோக்கி 'நிறுத்து; நீ இனிமேல் பாட வேண்டா. குறளில் உள்ள சொற்களை இசைக்காகச் சிதைத்தும் பிரித்தும் திரித்தும் பாடுவாய் என்று எனக்கு முன்பே தெரியாமற் போய்விட்டது. இனி இந்த வேலையை விட்டு விடு." என்று கண்டனக் குரல் எழுப்பத் தொடங்கிவிட்டார். கூட்டம் திகைத்தது. இசைப் புலவர் மேடையை விட்டுக் கீழிறங்கினார். தம் இசைக் கருவிகளை எடுத்து அக்குளில் வைத்தார். விடுவிடென்று கூட்டத்தைப் பிளந்து கொண்டு ஓடினார். பாவேந்தர் ஒலிபெருக்கியில் "போகட்டும்; போகட்டும்; தமிழைக் கெடுக்கும் இத்தகையார் முயற்சிக்குத் துணை செய்யவே கூடாது." என்று முழங்கினார்.

களில் உயிர் இல்லை. காரணம் ஏற்கனவே அவர் உள்ளத்தில் தமிழ் மணம் சூழ்ந்திருந்ததுதான்.

இவ்வாறு செந்தமிழ் உணர்வால் தம்மை முழுமையும் உருவாக்கிக் கொண்டிருந்த நம் புரட்சிப் பாவலரின் முதல் பாட்டுத் தொகுதி 1938–இல் திருவாளர் குத்தூசி குருசாமி, திருவாட்டி குஞ்சிதம் குருசாமி அவர்தம் பேருழைப்பால் வெளியிடப் பெற்றது. அத்தொகுதியில் வந்த பாடல்கள் தமிழ்க்கும் தமிழர்க்கும் புதிய உணர்வேற்றின. நெடுநாட்களாக அவர் தூங்கிக் கொண்டிருப்பது அவர்கட்கே தெரியலாயிற்று. அதன் பின்னர் அவர் தம் மூத்த மகளின் திருமணம் 1944–இல் நடைபெற்றது. அந்த ஆண்டில்தான் பாரதிதாசன் தம் உயர்ந்த இலக்கிய வாழ்வு நூலான 'குடும்ப விளக்கை' வெளியிட்டார். அக் குடும்ப விளக்கு வெளிவருதற்கு அவரின் மூத்த மகள் சரசுவதிதான் காரணம் என்று அவரே வெளிப்படையாகப் பலரிடமும் கூறியுள்ளார். திருவாட்டி சரசுவதி உயர்ந்த ஒழுக்கமும், சிறந்த பண்பாடும் வாய்ந்த குடும்ப விளக்கு! அதன் பின்னர் 1945–ல் 'தமிழியக்கம்' என்ற அவரின் மற்றொரு சிறந்த நூல் வெளிவரலாயிற்று.

ஓயாத எழுத்து வேலைகளாலும், தமிழ்ப் புரட்சியாலும் பாவலர் தாம் ஆற்றிக்கொண்டிருந்த பணியை 1946–இல் விட வேண்டுவதாயிற்று. அதன் காரணமாக அவருடைய குடும்பம் புதுவையில் உள்ள சுற்றுப்புற ஊர்களான நெட்டப்பாக்கம், கூனிச்சம்பட்டு, ஆலங்குப்பம், முத்திரைப்பாளையம் முதலிய ஊர்களுக்கும், திருமலைராயன்பட்டினம், திருநள்ளாறு முதலிய வெளியூர்களுக்கும் அடிக்கடி இடம் பெயர்ந்து செல்ல வேண்டியிருந்தது. பாவலர் ஆசிரியப் பணியிலிருந்து விலகியதும் 1948-இல் குயில் என்ற பாட்டு இதழைத் தொடங்கி அவ்வப் பொழுது தமிழர்க்கு உணர்வேற்றி வந்தார். குயில் மாதம் ஒரு முறை வெளிவந்து கொண்டிருந்தது. பாட்டாலேயே தொடங்கப் பெற்ற முதல் இதழ் பாரதிதாசனின் 'குயில்'தான். இப்புதுவைக் குயில் செய்த புரட்சி கொஞ்ச நஞ்சமன்று. அரசியலிலும் ஈடுபட்டுக் குரல் கொடுக்கத் தொடங்கியது. ஆளுநர்களைக் கண்டித்தது. அரசினர் தமிழர்க்கிழைத்த கொடுமைகளை அஞ்சா நெஞ்சுடன் சுடச் சுட அவ்வப் பொழுது எடுத்துக் கூறித் தமிழர்க்குத் தோன்றாத் துணையாக நின்றது. பாவலர் அக்கால் ஓய்வுக்கால ஊதியமாகப் பெற்றுவந்த உருபா முப்பத்தைந்திலேயே குடும்பம் நடந்து வரலாயிற்று. அவர் தந்தையின் சொத்துகளும் வாணிகத்தில் கரைந்தன. பாவலர் குடும்பம் வறுமைத் தொல்லைக் காட்பட்டுப் புயலிற் சிக்கிய கலம் போலத் திகைத்தது.

தம் வாழ்வுப் போராட்டத்திற் கிடையேயும் பாரதிதாசன் தமிழ் உணர்வால் தொழிலாளர்களிடையேயும் புரட்சிக் கனல் எழுப்பினர். தொழிலாளர்கள் எல்லா வகையானும் மிடிமைப் பட்டுக் கொண்டிருந்த நேரம் அது. உரிமையற்றுக் கிடந்த அந்த நெஞ்சங்களைத் தட்டி யெழுப்பி உரிமை கேட்கத் தூண்டினர். அவரின் எளிய தமிழ் நடை தொழிலாளர்களின் உள்ளங்களை மிகுவாகத் தீண்டியது.

"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும், ஆறு
தேக்கியநல் வாய்க்காலும், வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலை பிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெல்லாம் செய்துதந்த கைதான் யார் கை ?"
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்குலத்தைப்
போய்எடுக்க அடக்கிய மூச் செவரின் மூச்சு ?"

என்று அவர் கேட்ட கேள்விக் கணைகள் தொழிலாள மக்களின் உள்ளங்களை ஊடுருவின. அவர் தாம் மாந்த இனத்தை உருவாக்கும் பெருந் தொழிலைப் புரிந்து வந்தாலும், வாழ்வின் அடிப்படியில் உரிமையற்ற அடிமைகளாய் உருள்வதைப் பாவலர் வாயிலாக உணர்ந்து கொதிப்படையலானர்.

"எல்லார்க்கும் தேசம்; எல்லார்க்கும் உடைமை எலாம்
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே"

என்ற பொதுவுடைமைக் கொள்கையில் அவர் விடுத்த உரிமைப் பட்டயம் தொழிலாளர் கைகளுக்கு வலுவேற்றியது.

"இல்லாமை என்னும் பிணி
இல்லாமல் கல்வி நலம்
எல்லார்க்கும் என்று சொல்லிக்
கொட்டு முரசே!" — என்று அவர்

கொட்டிய முரசொலி ஏழைஎளியவர்தம் முதுகுகளை நிமிர்த்தின. குலவேறுபாட்டானும் சமயப் பூசல்களானும் அடிமைப்படுத்தி வைத்திருந்த, அத்தொழிலாளர் கூட்டத்திற்குத் தன்மதிப்பும், தன்னுணர்வும் ஊட்டினர். நாள் முழுதும் வெயிலிலும் மழையிலும் உழைத்தும் முன்னேறாமல் கிடக்கும் அவ்வேழைகள் முன்னேறாமைக்குக் காரணமாகக் கூறப்படும் 'விதி' 'கடவுள்' என்ற போலி அமைப்புகளைக் கருத்து வெடிகளால் தகர்த்துச் சுக்குநூறாக்கினர். உழைப்பது, உழவு செய்வது, உடை வெளுப்பது முதலியவை,

"கடவுளாணை யாயின், அந்த
உடைவெளுக்கும் தோழரைக்
கடவுள்தான் முன்னேற்றுமோ? தன்
கழுதைதான் முன்னேற்றுமோ? — என்று

சமயத் தலைவர்களைப் பார்த்துச் சுடச் சுடக் கேட்டார்.

"மதத்தின் தலைவீர்! - இந்த
மண்ணை வளைத்துள்ள அண்ணாத்தை மாரே!
....
இப் பொழுதே நீர் — பொது
இன்பம் விளைத்திட உங்களின் சொத்தை
ஒப் படைப்பீரே! - எங்கள்
உடலில் இரத்தம் கொதிப்பேறுமுன்பே!"

— என்று கைகளை முறுக்கிக் கொண்டு கேட்டார். நாட்டுப் பொதுமை ஊர்ப்பொதுமை கூறிய அவர் புத்துணர்வுப் பாடல்கள், உலகில் தொழிலாளர் கூட்டம் என்று ஒன்றுள்ள வரை நிலைத்து நிற்கத் தகுதி பெற்றவையாகும். தேசிய முழக்க மிட்ட பாரதியும் பாட்டாளி மக்களின் உரிமைக்குரலை இவ்வாறு எதிரொலித்ததில்லை.

"குடிக்கவும் நீரற் றிருக்கும் - ஏழைக்
கூட்டத்தை எண்ணாமல் கொடுந்தடியர்க்கு
மடங்கட்டி வைத்ததினாலே - தம்பி
வசங்கெட்டுப் போனது நமதுநன்னாடு"

"மனிதரில் நீயும் ஓர் மனிதன்; மண்ணன்று;
இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!
தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு!
மீசையை முறுக்கி மேலே ஏற்று!
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!
நகைப்பை முழக்கு! நடத்து உலகத்தை!
இது உன் வீடு ......"

— என்று உறங்கும் தொழிலாளர் உலகுக்கென அவர் வாயினின்று தெறிக்கும் புரட்சிக் கனல்போல் எந்தத் தமிழ் பாவலன் வாயினின்றும் இவ்வளவு தெளிவாக வரவில்லை. உண்மையும் உரிமையும் பெற்ற பாட்டு நெஞ்சினின்று பிறக்கும் கூரிய சொற்களின் வலிவு எத்தகையது என்பதற்குப் பாரதிதாசனின் இத் தகைய வரிகள் சான்று! தொழிலாளர் முன்னேறாமைக்கு அவர் பால் ஒற்றுமை உணர்வின்மையே காரணம் என்றும் அவர்க்குப் புலப்படுத்தினர். ஒற்றுமையில்லாமையால், தொழி

விலும் முன்னேற்றமில்லை; தொழிலாளரும் முன்னேறுவதில்லை; என்று தெளிவாக அவர்க்கு எடுத்துரைத்தார்.

'கூடித் தொழில்செய்யாக் குற்றத்தால் இன்றுவரை
மூடிய தொழிற்சாலை முக்கோடி'

என்று அவர்க்கும் அரசினர்க்கும் நினைப்பூட்டினர். அவர்களுக்குள் இருக்கும் குலப்பிரிவுகளே அவர்களின் ஒற்றுமையின்மைக்குக் காரணம் என்று தெளிவு படுத்தினர். அந்த இடைச் சுவர்களை இடித்துத் தள்ளி அவர்களை முன்னேற்ற வழிக்கு வாருங்கள் என்று முழங்கினர்.

பாவேந்தரும் பருப்புத் துவையலும்!

பாவேந்தருக்குப் பாச்சுவை போலவே நாச்சுவையும் மிக்கிருந்தது. சிறிதளவே உண்டாலும் மிகவும் சுவையான பொருள்களையே உண்ணுவார். வீட்டாருக்கு இவர் உணவைப் பற்றி மிகுந்த அக்கறை இருக்கவேண்டும். இல்லெனின் தொல்லை தான். பாவலர் விரும்பிய தின்பண்டங்களையெல்லாம் உடனுக்குடன் செய்து கொடுத்து, அவரையும் மகிழ்வித்துத் தாமும் மகிழ்வதில் அவர் துணைவியார் தனி இன்பம் கண்டார். அவர் பாவுணர்வைப் போலவே நாவுணர்வையும் நேரம் காலமின்றி வெளியிடுவார்.

ஒரு நாள் நள்ளிரவு இரண்டுமணி. பாவேந்தர் என்னவோ நினைத்துக்கொண்டார். உடனே பக்கத்தறையில் படுத்திருந்த மனைவியைப் "பழநியம்மா!" என்று கூப்பிட்டார். அம்மையார் ஏதோ என்னமோ என்று நினைத்துக்கொண்டு விரைந்து வந்து, "என்னங்க, என்ன வேண்டும் ?" என்றார் பரிவுடன். பாவேந்தர் சிரித்துக்கொண்டே, "ஒன்றுமில்லை, நம்ம வீட்டில் கடலைமா இருக்குமா?" என்றார். அம்மையாருக்கு அவர் கருத்து புரிந்து விட்டது. இரவு இரண்டு மணி என்று அறிந்து, "இப்பொழுதில்லை! எல்லாம் காலையில் பார்த்துக் கொள்ளலாம் படுங்கள்" என்றார். பாவேந்தர் நினைத்தது இல்லாமற் போகவே, "சரி, துவரம்பருப்பாவது இருக்குமா ?" என்று மறித்துக் கேட்டார். "இல்லை" என்று வெடுக்கென்று விடை வந்தது. "என்னடி, இவ்வளவு பெரிய வீட்டில் துவரம்பருப்பு கூட இல்லையா ? என்றார். அம்மையார் தூக்கக் கலக்கத்தில், "இருக்கிறது; உங்களுக்கு என்னவேண்டும்? " என்று கேட்டார். "அதை நன்றாக வறுத்துத் துவையல் அரைத்துக்கொண்டுவா. நன்றாக இருக்கும்" என்று சிரித்துக்கொண்டே சொன்னர். அம்மையாருக்கு அவர் குழந்தைபோல் கேட்பதைக் கண்டதும் இரக்கம் ஏற்பட்டுவிட்டது. சிறிது நேரத்தில் நல்ல மணமுள்ள பருப்புத் துவையல் வந்தது. பாவேந்தர் நாக்குத் தினவு அடங்க அதைத் தின்றுவிட்டுத்தான் படுத்தார்.

"இடையில் வைத்த சுவரை இடித்து,
வீதிகள் இடையில் திரையினை விலக்கி,
நாட்டொடு நாட்டை இணைத்து மேலே
ஏறு! வானை இடிக்கும் மலைமேல்
ஏறு விடாமல்! ஏறு மேன்மேல்!
ஏறி நின்று பாரடா எங்கும்;
பாரடா உனது மனிதப் பட்டாளம்!"

என்று நம் நாட்டுத் தொழிலாளர்களை மட்டுமன்று, உலகத் தொழலாளர் அவ்வளவுபெயர்களையும் ஒன்றுபட இவர்விடுக்கும் அழைப்பு எதிர்காலத்தில் உலகின் பல்வேறு மூலைகளிலும் எதிரொலிக்கும் என்பதில் துளியும் ஐயமில்லை. இவ்வுலகம் முதலாளிகளுடையதன்று. உழைப்பவருடையதே! ஆகையால் அவர்கள் தயங்குதல் வேண்டா என்று அச்சம் தீர்த்தார்.

'உடலைக் கசக்கி உதிர்த்த வெயர்வையின்
ஒவ்வொரு துளியிலும் கண்டேன்
இவ்வுலகு உழைப்பவர்க் குரிய தென்பதையே!'

என்று இவ்வுலகத்தையே அவர்க்கு உரிமையாக்கும் இப் புதுவைப் பாவலரைப் போல் தொழிலாளர் உலகத்தைத் தட்டி எழுப்பிய வேறு புரட்சியாளர் தமிழ் நாட்டில் உண்டோ? திரும்பிய பக்கமெல்லாம் தொழிலாளர் முழக்கம் எழுமாறு அவர் எழுதிய பாடல்கள் மக்கள் உரிமையுணர்வைக் கீறின.

"சித்திரச் சோலைகளே! உமை நன்கு
திருத்த இப் பாரினிலே - முன்னர்
எத்தனைத் தோழர்கள் ரத்தம் சொரிந்தன
ரோ? உங்கள் வேரினிலே!
... ...
ஆர்த்திடும் எந்திரக் கூட்டங்களே! உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ? நீங்கள்
ஊர்த்தொழி லாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய் அல்லவோ?"

– எனப் பாவலர் தொடுக்கும் வினாக்களில் எத்தகைய உரிமைக் குரல்கள் குமுகாயத்தின் கட்டுக் கோப்புகளைத் தகர்த்துக் கொண்டு வெளிப்படுகின்றன! உழைப்பவர்களின் உரிமைகளை நசுக்கிக்கொண்டு ஊர்ப்பணத்தைக் கொள்ளையடிக்கும் முதலாளிமார்கள் புரட்சிப் பாவலரின் அரிமா முழக்கத்திற்கு அஞ்சி நடுநடுங்கினர். சமயத் தலைவர்கள் தங்கள் கோயில்களின் கருவறைகளில் போய்க் கற்படிமத்தோடு கற்படிமமாகக் கட்டிக்கொண்டு கிடந்தனர்.

"கூடித் தவிக்கும் குழந்தை, மனைவியர்
கூழை நினைத்திடும் போதிலே - கோயில்
வேடிக்கை யாம் தெரு மீதிலே - செல்வர்
வாடிக்கை ஏற்பீரோ காதிலே!"

– என்ற வரிகளில் தெறிக்கும் உண்மையை மக்கள் உலகம் உணருமாறில்லை. அவர்தாம் வந்த வழி அத்தகைய மீளா அடிமைத்தளையை அவர்கள்பாங்கில் விரித்துவிட்டிருக்கின்றது. அவர்களின் உடல்களில் மட்டுமன்றி உயிரிலும் உணர்விலும் அடிமை அணு ஊடுருவிக்கொண்டுள்ளது. இத்தனைக்குறைபாடு களையும் வைத்துக்கொண்டு பாரத நாடென்றும், உரிமை என்றும் தேசியத் திருவிளையாடல்கள் நிகழ்த்திவரும் அரசியலார் தமக்கு மண்டையில் ஆணியை அறைகின்றார் நம் புரட்சிப் பாவலர்:

"பஞ்சமர் பார்ப்பனர் என்பதெல்லாம்
பாரத நாட்டுப் பழிச்சின்னத்தின் பெயர்"

என்று பாரத நாட்டுப் பெயர்ப் போற்றிகளின் வாய்களில் கழி கடைப் புனலை ஊற்றி 'நாற்றமடிக்கின்றது பார்' என்று தம்மின் யுரிய நெஞ்சுரத்தோடு கூறுகின்றார். தொழிலாளர்தம் இத்துணை அறியாமைக்கும், முன்னேற்றத் தடைக்கும் அரசினரே துணை நிற்கின்றார் என வெளிப்படையாக உணர்த்துகின்றார்

"கூழுக்குப் பற்பலர் வாடவும் சிற்சிலர்
கொள்ளையடிப் பதும் நீதியோ ? - புவி
வாழ்வதுதான் எந்தத் தேதியோ ?

....

கோரும் துரைத்தனத்தாரும் பெரும்பொருள்
கொண்டவர்க்கே நலம் கூட்டுவார் - உழைப்
போரிடமே கத்தி தீட்டுவார்."

"கட்டத் துணியளித்தார்; கல்லுழுது நெல்லளித்தார்;
வெட்டிக்கா டெல்லாமே வீடாக்கித் தந்தார்!
எருக்கு முளைக்கும் இடர்ப் பாம்பின் பல்போல்
பருக்கைக்கல் வாய்த்தும் படுபள்ளம் வாய்த்தும் முள்
முட்டு நிலம் நேராக்கி, முல்லை பரப்பியதோர்
பட்டு மெத்தை போன்ற நிழற் பாதை யளித்தார்!
தரைமீது பட்டணங்கள் தந்தார்; கடலின்
திரைமீது பட்டணங்கள் செல்லும் படியமைத்தார்!
. . . . அவர்களை நீ
மாந்தர் எனவும் மதிக்கவில்லை; உன்னையவர்
வேந்தர் எனவும் மதிப்பாரோ ?"

இத்தனைக் கொடுமைகளுக்கும் வேராக இருக்கின்ற அரசு, வட நாட்டார் கையில் சிக்கித் தொலைப் படுவதைப் பாவலர் துணி வுடன் முழங்குகின்றார். தமிழ் மக்களுக்கு உண்மையையும் உணர்த்துகின்றார்.

'வடநாடு தென்னாட்டை வீழ்த்தச்-செய்த
வஞ்சங்கள் சிறிதல்ல தம்பி!'

இவ்வாறு அவர் தமிழ்க்கும் தமிழர்க்கும் போராடிய போராட்டம் மிகப்பெரிது. நாட்டின் உரிமையைப் பாட்டாலே காத்த பாவலர் அவர். செத்தழியும் தீந்தமிழ்க்கு, எத்திசையும் காப்ப ளிக்கவேண்டி அவர் முழங்கிய முழக்கங்களால் தமிழர் கூட்டம் கனன்றெழுந்தது. பாவலர் தம் பாத்திறத்தைப் பாராட்டி ஏராளமான பரிசுகளைத் தமிழர் அவர்க்களித்தனர். 1946–இல் சென்னையில் நாவலர். திரு. சோமசுந்தர பாரதியார் தலைமையில் நடந்த கூட்டம் ஒன்றில், திருவாளர். அண்ணாத்துரை அவர்கள் தம் பெருமுயற்சியால், திரட்டிய உருபா இருபத்தைந்தாயிரம் கொண்ட பணமுடிப்பு ஒன்றினைப் பாவேந்தர்க்கு அளித்தார். அவர் கடமையுணர்வைத் தமிழர் என்றும் மறவார்.

பாவலர் குடும்பம் பெருகிற்று. திருவாட்டி சரசுவதிக்குப் பிறகு மன்னர்மன்னனும் இரண்டு பெண்களும் பிறந்தனர். புதுவை அரசினர் தொல்லையால் அவர் நடத்திய குயிலும் இடை நின்றுபோய் அண்மைக் காலத்தேதான் மீண்டும் வெளிவந்தது. குடும்பத்தில் பல கோளாறுகள். பாவலர், பழநியம்மா அச்சகம் என்ற பெயரால் நிறுவிய அச்சுக்கூடமும் ஒரு வீடும் மட்டுமே அவர்க்குடைமைகளாக இருந்தன. பிள்ளைகள் நால்வருக்கும் திருமணங்கள் நடத்தப் பெற்றன. இதற்குள் அவர் ஏராளமான நூல்களை எழுதி வெளியிட்டார். குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், இருண்ட வீடு, இசையமுது, ஏற்றப் பாட்டு, காதல் நினைவுகள், காதலா கடமையா, தமிழச்சியின் கத்தி முதலிய பாட்டு நூல் களும், இரணியன், படித்த பெண்கள், சேரதாண்டவம், நல்ல தீர்ப்பு, கழைக் கூத்தியின் காதல், கற்கண்டு, சௌமியன், அமைதி என்ற நாடகநூற்களும் வெளிவந்திருந்தன. இறுதியாக இளைஞர் இலக்கியம், தேனருவி, மணிமேகலை வெண்பா, கண்ணகி புரட்சிக்காப்பியம் என்ற நூல்களையும் வெளியிட்டார்.

இந்திய நாடும், புதுச்சேரியும் விடுதலையடைந்தபின் நாட்டு நிலை மாறியது. வெள்ளையர்களின் கைகளில் இருந்த அரசாட்சி வடநாட்டு இந்திபேசும் மக்களின் கைகளுக்குப் போயிற்று. அதனால் இந்தியை ஆட்சி மொழியாகக் கொண்டு வர ஆட்சி திட்டமிட்டது. பாரதிதாசனும் அரசியலில் வெகுவாக ஈடுபட லானார். தேர்தலில் கூட்டுக் கட்சிகளின் சார்பில் நின்று

1954-இல் புதுவையில் சட்டமன்ற உறுப்பினராஞர். அதன் பின்னர் 1960-இல் நடந்த தேர்தலிலும் போட்டியிட்டுத் தோற்ருர். அரசியல் ஈடுபாடு இவர்க்கிருந்த மக்கள் ஈடுபாட்டைக் கெடுத்தது. கட்சிகள் விளைத்த பூசல்களால் இவர் பெரிதும் துன்புற்ருர். தம் உடல் நலம் குன்றிய நிலையிலும் நடுவணரசால் தமிழ் நாட்டில் வலிந்து திணிக்கப்பெறும் இந்தியை எதிர்த்து முழக்கமிட்டார். தாம் ஓய்வுக்கால ஊதியமாகப் பிற்கால் பெற்று வந்த நூறு உருபாக்களையும் பொருட்படுத்தாது அரசினரைத் துணிவுடன் கடிந்தார். தமிழ் மொழிக்கு ஒரு பொழுதும் தீங்கு வர விடமாட்டேன் என்று களிறெனப் பிளிறிஞர்.

"தீங்கனியைச் செந்தமிழைத் தென்னுட்டின்
பொன்னேட்டை உயிராய்க் கொள்வீர்!
ஏங்கவைக்கும் வடமொழியை இந்தியினை
எதிர்த்திடுவீர்! அஞ்ச வேண்டாம்!
தீங்குடைய பார்ப்பனரின் ஆயுதங்கள்
இந்தி, வடசொல் இரண்டும்."

என்று முழக்கமிட்டார்.

"பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மையாமோ?
பிறர் சூழ்ச்சி செந்தமிழை அழிப்பதுண்டோ?" —என்றும்,

"இந்த அரசினர் செந்தமிழ் ஒழித்துத்
தீய இந்தியைத் திணிக்கின் ருர்கள்.
தமிழ் அழிந்திட்டால் தமிழர் அழிவார்
நம்தமிழ் காப்பது நம் கடன் அன்ருே?" —என்றும்

" . . . . -தமிழை வடநாட்டார்
மாற்றித் தமிழர் கலையொழுக்கம் பண்பெல்லாம்
மாற்றவே இந்திதனை வைத்தார்கட் டாயமென;
வேற்றுவரின் எண்ணத்தை வேரறுத்தல் உம்கடனே!

என்றும்,

உறுப்பினர்கள் கவனிக்க...

'தென்மொழி' இதழ் அனுப்பப்பெறும் சுற்றுத்தாளில் குறிப்பிடப்பட்டுள்ள எண்களே அவரவர் உறுப்பினர் எண்கள். அவற்றுள் பு. உ. எண் 351 முதல் 361 வரை உள்ள அன்பர் அனைவர்க்கும் சுவடி 2-ஓலை 4 (வைகாசி இதழ்) முடிய உறுப்பினர் கட்டணம் முடிவடைகின்றது. தொடர்ந்து தென்மொழிப் பயன் துய்க்க விரும்புவார் இம்மாதத்திற்குள் கட்டணத்தை அனுப்பிப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுகின்ருேம்.

— **அமைச்சர், தென்மொழி.**

"வெறுப்புடைய இந்தி விளைக்கின்றார், இங்கே!
அறப்போர் தொடுத்திடுவோம்! வெல்வோம் நாம்; அன்றி
இறப்போம்; உறுதி இதுவாகும் என்பீர்!
உறக்கம் தவிர்த்துணர்வே உற்றெழுதல் உங்கடனே!

என்றும்,

"மட்டக் கருத்துக்கள் மாளா மடமை எலாம்
கொட்டி அளக்குமோர் இந்தியினை நம்தலையில்
கட்டுவார் தம்மை ஒரு கைபார்த்தல் உங்கடனே!

என்றும்,

"வந்தார்க்கோ நாமடிமை ? வந்தார் பொருள் விற்கும்
சந்தையா நம்நாடு ? தாயாம் தமிழிருக்க
இந்தியோ கட்டாயம் ? என்ன பெருங்கூத்தோ ?
கொந்துமொரு கொத்தடிமை நீக்கிடுதல் உங்கடனே!

என்றும் தமிழ் மக்களுக்குக் கடமை சாற்றினார். தமிழர்கள் யாண்டும் விழிப்புணர்வோடிருத்தல் வேண்டும் என்று அவர் விடுத்த எச்சரிக்கையைத் தமிழர் மறத்தலாகாது. இந்தியைக் கட்டாயமாகத் தமிழர் கற்க வேண்டும் என்பதால் எந்தப் புது நலமும் விளையப்போவது இல்லைஎன அரசினர்க்குத் திட்டவட்டமாக அறிவித்தார்.

"செந்தமிழ் தன்னில் இல்லாத பல
சீமைக் கருத்துகள் இந்தியில் உண்டோ ?
எந்த நலம் செய்யும் இந்தி ? எமக்
கின்பம் பயப்பது செந்தமிழன்றோ!"

அரசினர் இக்கூற்றுக்குச் செவி கொடாவிடில் தமிழ்மக்கள் வாளாவிரார் என்றும், பெரும் மொழிப் புரட்சி எழும் என்றும் அவர் முழக்கும் முரசார்ப்பு, தமிழர்க்குப் போர்ச்சங்கம்; அரசினர்க்குச் சாச்சங்கம்! அவர் புலிப்பாய்ச்சல் இது:

"இன்னலை ஏற்றிட மாட்டோம்; - கொல்லும்
இந்தியப் பொதுமொழி இந்தி என்றாலோ
கன்னங் கிழித்திட நேரும் - வந்த
கட்டாய இந்தியை வெட்டிப் புதைப்போம்."

"அல்லற் கஞ்சோம்; கடுமொழி
சொல்லற் கஞ்சோம்; ஒரு சிறை
செல்லற் கஞ்சோம்; அஞ்சோம்!
தூக்குக் கஞ்சோம் . . . .

"எப்பக்கம் வந்து புகுந்துவிடும் இந்தி ?
எத்தனைப் பட்டாளம் கூட்டி வரும் ?

அற்ப மென்போம் அந்த இந்திதனை – அதன்
ஆதிக்கம் தன்னைப் புதைத்திடுவோம்;
. . . .
பங்கம் விளைத்திடில் தாய்மொழிக்கே – உடல்
பச்சை ரத்தம் பரிமாறிடுவோம்!."

சொல்லுக்குச் சொல் நெருப்புப் பொறி! வரிக்கு வரி கத்திவீச்சு! எரிமலை குமுறியதுபோல, நான்கு புறமும் சிதர்ந்தோடும் கனப் புக் குழம்பு பாட்டாக உருவெடுத்துப் பாவேந்தரின் மற நெஞ் சத்தை மாற்றார்க்கு உணர்த்துகின்றது. இம் மற நெஞ்சத்தின் காவலில் தமிழ் இளைஞர்கள் அச்சமற்று நின்றிருந்தனர். அரிமா வின் வேல்விழி நோக்கின் பாங்கில் குருளைகள் பகையச்சம் நீங்கி இருப்பதைப்போல் இருந்தது தமிழர் குமுகாயம். தமிழ்ப் புலவர்கள் எனப்படுவோரெல்லாம் அரசினரின் அச்சுத் தாள் களுக்கு அஞ்சி நடுங்கிய பொழுதெல்லாம், பாவேந்தரின் கடல் முழக்கமே தமிழைக் காத்து வந்தது. பாவேந்தர் எழுச்சியூட்டி வளர்த்த மொழிப்போர் இளைஞர்களின் குருதி நாளங்களில் என்றும் திசைமாறாது ஓடிக் கொண்டிருக்கும்.

'கடல் போலும் எழுக! கடல்
முழக்கம்போல் கழறிடுக தமிழ் வாழ் கென்று!
கெடல் எங்கே தமிழின் நலம்?
அங்கெல்லாம் தலையிட்டுக் கிளர்ச்சி செய்க!
செழிப்போரே, இளைஞர்களே
தென்னாட்டுச் சிங்கங்காள்! எழுக, நம் தாய்
மொழிப்போரே வேண்டுவது!
தொடக்கஞ் செய்வீர்! வெல்வீர், மொழிப்போர் வெல்க!

என்று வெற்றிச் சங்கம் ஊதினார் பாரதிதாசன். அவர்தம் முழக்கம் எல்லாத் தமிழர் நெஞ்சக் கதவுகளையும் திறந்துள்ளன. மான உணர்ச்சியைக் கீறி இனவுணர்வை வெளிப்படுத்தின. அவர்க்கிருந்த அச்சமெல்லாம் எரிமுன் சருகாயிற்று.

"அரசிருந்த தமிழன்னை
ஆட்சியிலே சூழ்ச்சிசெயும் ஆட்கள் யாரும்
எரிசருகு! தமிழரிடை
எழுச்சியுறும் தமிழார்வம் கொழுத்த தீ தீ!!"

– என்று தீ மூட்டினார் புதுவை தந்த புரட்சிப் பாவலர். தமிழும் தமிழுணர்வும் உள்ளவரை அவரின் மாணிக்க மொழிகள் மறை யப் போவதில்லை. குதித்துக் கூத்தாடுகின்ற அவரின் பேருள்ளம் தமிழர்க்கு எழுச்சி ஊட்டிக் கொண்டே இருக்கும். நூறு பாவலர்கள் சேர்ந்த புரட்சிக் கழகம் அவர்! எதிர்காலத்தில்

உருவாக விருக்கும் பல்லாயிரக்கணக்கான தமிழ்ப் பாவலர்களுக்கு வற்றாத பேருணர்வு வெள்ளமாக அவர் பாடல்கள் நின்று உயிர்ப்பூட்டும். தமிழர்க்கேற்பட்ட இத்தகைய மொழி, இன, நாட்டுக் கொடுமைகளுக்கெல்லாம் தமிழ் நாட்டின் தகுதியற்ற தலைமையே பெருங் காரணமாக உள்ளது என்று துணிவாகக் கூறினார்.

'தமிழ்நாட்டில் தமிழுக் கன்றோ
தலைமைதந் திடுதல் வேண்டும்?
தமிழ்நாட்டில் தமிழ னன்றோ
தலைமைதாங் கிடுதல் வேண்டும்?
தமிழ்நாட்டில் பிறமொ ழிக்கே,
தலைமைதந் துயிர்வாழ் கின்றார்!
தமிழ்நாட்டில் தலைமை யாவும்
தமிழரின் பகைவர் கையில்' **— என்றும்,**

'தமிழறியார் தமிழ்ச்செயலில் தலையிடுதல் சரியா?
தாம்திருந்தார் பிறர்திருந்தச் சாற்றவரல் தகுமா?' **— என்றும்,**

'தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டில்
முதலமைச்சாய் வருதல் வேண்டும்!
தமிழ்ப்பகைவன் முதலமைச்சாய்த் தமிழ்நாட்டில்
வாராது தடுத்தல் வேண்டும்!

என்றும் தமிழ் நாட்டின் தலைமையின் தலையில் சம்மட்டிகொண்டு தாக்குகின்றார். மானமுள்ள தமிழராயின் தமிழ்ப் பற்றில்லாத் தலைமையை வரவிடார்; அல்லது மானமுள்ள தலைமையாயின் தமிழ்நாட்டில் எழுப்பப்பெறும் எதிர்ப்புக் குரலுக்குச் சற்றேனும் செவி குவிப்பார்; இத்தகைய இரண்டுங் கெட்டான் நிலையைத் தமிழகப் புலவரும் துணிவுடன் எடுத்தியம்புமாறில்லை என்பதையும் தப்பாமல் குறிக்கின்றார் பாவலர்.

'சோற்றுக்கென் றொருபுலவர் தமிழ்எதிர்ப்பார்
அடிவீழ்வார்! தொகையாம் செல்வப்
பேற்றுக்கென் றொரு புலவர் சாத்திரமும்
தமிழ்என்றே பேசி நிற்பார்!'

"பாட்டினிலே பெரும்பிழையைப் பல்குவிப்பா
னுக்கு மணிப் பண்டிதர்கள்
சாட்டை கொடுத் தறிக்கை விடத்
தாள் ஒன்றும் அற்றதுவோ?"

என்று அவர் கொடுக்கின்ற சாட்டையடி, புலவர்களின் முதுகில் உறைத்தும் காதுகளில் உறைக்குமாறில்லையே!

1960-இல் திருச்சி திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களால் அமைக்கப் பெற்ற தமிழகப் புலவர் குழுவில் பாரதிதாசனும் ஒருவர். எனினும் புலவர் குழுவும் அவர்தம் மொழிக் கருத்துகளுக்கு ஆக்கம் தருவதாக இல்லை பாவலருக்கு ஆக்கம் தராமற் போனாலும், புலவர் குழுவாவது தமிழாக்கப் பணிகளில் ஈடுபட்டோ, அரசினரைத் தட்டிக் கேட்டோ, பொதுமக்களைக் கிளர்ந்தெழச் செய்தோ, தமிழ்க்கும் தமிழர்க்கும் தமிழ் நாட்டிற்கும் இழைக்கப் பெறும் கொடுமைகளைத் தவிர்க்கவில்லை; கடுமையையாவது குறைக்க எண்ணவில்லை. அக் குழுவிலும் பாவேந்தரின் குரலே தனித்து ஒலித்தது. அப்புலவர்கட்கு முதுகு நரம்புகள் அறுந்து போகும் பொழுதெல்லாம் பாவேந்தர் அவர் தமக்கு முட்டுக்கொடுத்து அரசினர்க்குக் குரல்கொடுத்தார்.

"தமிழ், தமிழினம், தமிழிலக்கியம் இவற்றில்
ஒன்றுபோம் எனில் மற்றவும் ஒழியும்!
நாட்டின் உரிமை காத்தல் வேண்டும்."

– என்று தமிழர்க்கும் தமிழ்ப் புலவர்க்கும் இருக்க வேண்டிய பலகையச்சத்தையும் கடமையையும் எடுத்துக் கூறினார்.

பாவேந்தர் தம் இறுதி நாட்களில் உடல், மனம், செல்வம் முதலிய நலங்கள் குன்றி மிகவும் சாம்பிப் போனார். தமிழர்

பாவேந்தரும் விளக்கெண்ணெயும்!

பாவேந்தருக்கு மாதம் ஒருமுறை வயிற்றுத் துப்புரவுக்குக் கழிச்சல் மருந்து தரப்பெறும். அவரின் துணைவியார் இவ்வகையில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பார். அடிம்பு (பேதி) கொடுக்கும் நாளைக்கு முன்னிரவே வாதநாராயண இலைகளைக் கொண்டுவந்து இரா அடுப்பில் காய்ச்சி, விளக்கெண்ணெயை நிறைய ஊற்றித் தாளித்துச் சாறு வைத்துக் கொடுப்பார். பாவலர்க்கு அந்த நாளைக்கு முன்பே பெரிய கவலை!

ஒரு நாள் விடியற்காலையில் எல்லாம் முறைப்படி செய்து எடுத்துக்கொண்டு அவர் துணைவியார் பாவேந்தரின் அறைக்கு வந்தார். பாவேந்தர் வயிற்றைப் பிசைந்து கொண்டிருந்தார் . . . ! அம்மையார் அறையில் நுழைந்தவுடனேயே விளக்கெண்ணெய் நாற்றம் பாவலரின் மூக்கைத் தொளைத்தது!. எப்படியாவது தப்பித்துக்கொள்ள எண்ணி, "பழநியம்மா, இன்றைக்கு வயிறு சரியில்லை . . . இன்றைக்கு மட்டும் வேண்டா . . ." என்று அழாக்குறையாகக் கெஞ்சினார். அம்மையார் இவற்றிலெல்லாம் மிகவும் கண்டிப்பு; கட்டாயப்படுத்தி விளக்கெண்ணெயைக் குடிக்க வேண்டினார். பாவலர் கெஞ்சிக் கூத்தாடினார். "பின்னே, காய்ச்சிய சாற்றை என்னசெய்வது?" என்று அம்மையார் கேட்டார். அவ்வளவுதான்! பாவலர் உடனே, "டேய்! பிள்ளைகளா! எல்லாரும் இங்'க வா'ங்க" என்று பிள்ளைகளைக் கூப்பிட்டார். அதன் பின் இவர் குடிக்கவேண்டிய விளக்கெண்ணெய் அன்று முழுவதும் பிள்ளைகள் வயிற்றைக் கலக்கியது . . . !

உடலில் தமிழ்க் குருதி ஓடாமை கண்டு உயிர் வெதும்பினர். தமிழர்க்குள் ஏற்பட்ட கட்சி, குல, கருத்துப் பூசல்களை எண்ணி எண்ணிச் சோர்வடைந்தார். இலக்கக் கணக்காகத் தொகுத்த படி கட்சித் தலைமை தாங்குபவர்களும் பாவேந்தரின் செல்வங் குன்றிய நிலையைத் திரும்பிப் பார்க்கவும் இல்லை. அரசினரும் இப்பெரும் குமுகாயப் புலவர்க்கு ஒன்றும் உதவுமாறில்லை. தமிழ்க்கழகங்களும், அரசினர் சார்பில் அமைந்த தமிழ், இலக்கிய வளர்ச்சி மன்றங்களும், நடுவணரசுக் கழகங்களும் இவரைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. இலக்கிய வளர்ச்சிக்கென உதவுகின்ற நூல்களாக வெறும் புனை கதைகளையும், குருட்டுச் சொல்லாடல்களையும், புனை சுருட்டுப் புளுகுகளையும் தேர்ந்தெடுத்து ஆயிரம் இரண்டாயிரம் எனப் பரிசுகளை அள்ளிக் கொடுத்தனரேயல்லால், இவரெழுதிய நூற்களில் சாகா இலக்கியங்களான குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு, தமிழியக்கம், இசையமுது முதலியவற்றில் ஒன்றுக்கேனும் ஒரு சிறு பரிசும் தரவில்லை. இவரின் குடும்ப விளக்கு உலகப் பொதுமை வாய்ந்த சிறப்பு நூல்! மக்கள் அமைப்புக்கெல்லாம் பொதுவான நடையுடை வினைமுறைகளைத் தெளிவாக, இலக்கிய நயஞ் சொட்ட அருமையாக எடுத்துரைக்கின்றது. அவரெழுதிய நூற்களின் நயங்களை எடுத்துக் கூறுவதெனின், அஃது ஒரு தனிப் பெரும் கட்டுரையாகவே விரியும்!

எழுதி எழுதிச் சோர்வடைந்தது அவர் கை. நினைத்து நினைத்துத் துயரடைந்தது அவர் உள்ளம். தமிழ் நாட்டின் நலனுக்கே வாழ்நாள் முழுதும் வீறு முழக்கிய அவர் வாய் அமைதி பூண்டது. அவ்வடங்கிய நிலையில் அவரைப் பயன் படுத்திப் பணம் பறிக்க முற்பட்டனர் திரைப்படப் பித்துடையார் ஒரு சிலர். பொன்முட்டை இடும் இத்தமிழ்த்திறமுடைய வாத்தின் வயிற்றுள் உள்ள அத்தனை முட்டைகளையும் ஒரேபடியாக எடுத்துவிடத் துணிந்தனர் புல்வியர் சிலர். ஆகையால் புதுச்சேரியினின்று பாவேந்தர் சென்னைக்கு இழிந்தார். அவர் அறிவு குழப்பப் பெற்றது. இழுத்த இழுப்புக்கெல்லாம் அவர் இணங்கினர். வேந்தர்க்கும் விழிதாழா இப் பாவேந்தரின் தலை, வீணரின் சிறு குரலுக்கும் விரலசைவுக்கும் தாழ்ந்து தமிழ் மறம் குன்றியது. பாரதியாரைப் போலவே குடிப் பழக்கம் உடைய இவர் தம் உடலையும் உள்ளத்தையும் ஒருங்குறத் தாழ்த்திக் கொண்டார். அத்துடன் முன்பெல்லாம் ஒரு நாளைக்குப் பத்துப் பதினைந்து வெண்சுருட்டுகளைப் புகைத்து வந்த இவரின் வாய் ஒரு நாளைக்கு நூறு இருநூறெனப் புகைத்து இவரை நினைவிழக்கச்செய்தது. இவரின் குடும்பம் வேறு கட்டுக் குலைந்தது. உறவினர் எனப்படுவோரெல்லாம் பாவலரின் சொத்துகளுக்குப் பட்டியல் எடுத்தனர். கடன் ஏராளமாகக் குவிந்தது. மன அழற்சியாலும் போதிய கவனிப்பின்மையாலும் சென்னையில்தம்

இறுதி நாட்களைத் துன்புடன் கழித்தார். இவரை வைத்துப் பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றைப் படமெடுப்பதாகப் பறை சாற்றினர் சில பேதைகள். இதுவே அவர் இறுதிக் கொள்கை என்று ஏமாற்றம் பேசினர் சிலர் தமிழ், தமிழர், தமிழ் நாடு என்று உடல், உணர்வு உயிர் முங்குமாறு பேசியும் பாடியும் வந்த இப் புதுவைக் குயிலின்—விடுதலை எழுச்சிப் பாவேந்தரின் பெருமையுணராது பட முதலாளிகள் இவரின் உடலையும் உணர்வையும் சிறைப்படுத்தினர். தடுத்தாட்கொள்ள ஒருவரும் இல்லாக்காரணத்தால் பாவேந்தர் நெஞ்சு நோயால் மருத்துவ மனையில் படுக்கையாகப் பல நாட்கள் கிடந்தார். உயிர் வளியும், ஊட்டச் சத்தும் அவர்க்கு உடல்வழி ஊட்டப் பெற்றன தமிழக அமைச்சர் சிலர் வந்து பார்த்தும், அரசினர் பேணிக் காக்கவேண்டிய அப்பெரும் பாவலரின் உடல் மருத்துவ மனையின் சிறப்புப் பகுதியில் பேணப் பெறாது, பொதுப் பகுதியில் கவனிப்பாரற்றுக் கிடந்தது.

இறுதியாக இந்நாட்டு மக்கட்கும் மொழிக்கும் ஒவ்வொரு நொடியும், அணுவும் தளராது உயிருழைப்புத்தந்த இப்பெரும் பாவலர், கோடி கோடியாப் பொருள் தொகுத்துப் போலி நாகரிகப் புன்மை ஆரவாரங்களில் பாழடிக்கும் ஆயிரக் கணக்கானோர் கண்ணும் சிறக்கணியாது வாளா விருக்க, 21—4—1964 செவ்வாய்க் கிழமை காலையில் இத் தமிழகத்தையும் தமிழர்களையும் விட்டுப் பிரிந்து இயற்கை எய்தினர் தமிழைப் பேணிய இவர் தம்மைப் பேணிக் கொள்ள மறந்தார். இவர்தம் பாக்கள் தமிழர்க்குக் கேடயம்; தமிழர் எழுச்சித் தீயினுக்கு உணர்வு நெய்! இவராற்றிய தமிழ்த் தொண்டு அளவிடற்கரியது. இவர்தம் வரலாறு

பாவேந்தரின் பீடு.

உயர் அலுவல்களில் இருப்பாரிடம் யாதானும் ஒரு நலம் நாடிக் கூனிக் குறுகிக் குழைந்து பல்லிளித்து வாழ்வார் ஒருபுறம் கிடப்ப, ஓரளவுக்குத் தன்மதிப்பும் குமுகாய மதிப்பும் உடைய பெரியவர்களும் கூட, அரசியல் உயர் அலுவலாளரிடம் நலம் நாடிச் சென்றால் பணிவோடும் குழைவோடும் தம் வேண்டுகோளைத் தெரிவித்தல் உண்டு. ஆனால் நம் பாவேந்தரோ, யார்க்கும், எதற்கும், எச்சூழலிலும் பணியாத பெருமிதம் உடையவர். தம்மை நாடிவரும் யாவருக்கும் தம்மால் இயன்ற உதவியைச் செய்யும் இளகிய மனமுடைய அவர், சில வேளைகளில் அவர்பொருட்டு, புதுவையில் தலைமை அமைச்சராக விருக்கும் திரு. குபேர் அவர்களிடம் கூடச் சென்றதுண்டாம். அக்கால் குபேர் அவர்களைக் கண்டவுடன், தமக்கே உரிய மிடுக்கான குரலில், "இதோ பார், குபேர், இந்தப் பையனை அழைத்து வந்திருக்கிறேன். அவனுக்கு ஏதாவது வேலை கொடு." என்று நிமிர்ந்த பார்வையுடன் கூறுவாராம். என்னே பாவலர் தம் பீடு!

இருபதாம் நூற்றாண்டின் புரட்சிப் பண்! தமிழ் நாட்டின் விடுதலைப் பாவியம்! இவர் அமைத்த தமிழியக்கம் தமிழர்தம் உரிமை எழுச்சிக்குப் போர்ப் பாட்டு! நாம் இங்கு இவர் பற்றிக் கூறியவை அவர் குடும்ப விளக்கில் ஒரு சிறு ஒளிக் கற்றை! இவரின் பாண்டியன் பரிசில் ஒரு சிறு மணி! இவர்தம் அழகின் சிரிப்பில் ஒரு குறு நகை! இவரின் தேனருவியில் ஒரு துளி! இவர்தம் இசையமுதில் ஒரு பண்! தமிழக வரலாற்றில் இது வரை தோன்றிய விடுதலைப் பாவலர் இவர் ஒருவரே!

● ● ●

உப்புமா ஆராய்ச்சி!

ஒரு நாள் பாவேந்தரின் மகன் எங்கிருந்தோ பாக்குத்தூளில் கலக்கும் மணச்சாறு (**essence**) கொஞ்சம் ஒரு கண்ணாடிக் குப்பியில் கொண்டுவந்து சுவர்ப்பேழையில் வைத்திருந்தார். அதைப் பாவலர் பார்த்து விட்டார். அடிக்கடி அதை எடுத்தெடுத்து மோந்து பார்ப்பதும் பிறகு இருந்த இடத்திலேயே வைத்து விடுவதுமாக இருந்தார். அவர் மகன் இதை ஒரு நாள் கண்டுவிட்டார். உடனே பாவலர், "என்ன இது?" என்று கேட்டார். அவர் 'பாக்குத் தூளில் கலக்கும் மணச்சாறு' என்றார். பாவலர்தலையை ஆட்டியபடி ஆழ்ந்து எண்ணியவாறே போய்விட்டார்.

பாவேந்தர் மூளை சுறுசுறுப்புடையதும், உள்ளம் புரட்சி உணர்வு பெற்றதும் ஆகையால், அந்த மணச்சாற்றை எந்த எந்த வகையில் பயன் படுத்தலாம் என்று ஆராயத் தொடங்கின. திடுமென ஒரு நாள் காலையில் 'பழநியம்மா' வுக்கு அழைப்பு வந்தது. அம்மையார் வழக்கம் போல அவர் குழந்தை விருப்பத்தைக் கேட்கப் போனார். "நம்ம வீட்டில் குறுநொய் (ரவை) இருக்கா?" என்று கேட்டார் பாவலர். 'இல்லை; என்ன வேணும்?' என்றார் அம்மையார். 'போய் வாங்கி வரச்சொல்' என்று கட்டளையிட்டுவிட்டார் பாவலர். அவர் விருப்பப்படி நெய், முந்திரிப் பருப்பு, சருக்கரை, முதலிய எல்லாப் பொருள்களும் அவர் முன்னிலையில் வைக்கப் பெற்றன. "என்ன வேணும்'னு நானே செய்து தருவேனே" என்றார் அம்மையார் ஒன்றும் புரியாதவராய். 'அதெல்லாம் உனக்குத் தெரியாதடி. வாணலியை அடுப்பில் வை; குறுநொய்யை வறு; நெய்யில் முந்திரிப் பருப்பை வறுத்தெடு; அப்புறம் என்ன செய்வையோ? . . . தெரியாது . . . ! எனக்கு . . . அந்த இது . . . அதாவது உப்புமா போல இனிப்பு, நெய் போட்டு கிண்டி வைப்பயே . . . அது வேணும்" என்று குழந்தை போல மெல்லத் தம் ஆவலை வெளியிட்டார். அம்மையார் புரிந்துகொண்டு சிரித்தார்கள். சிறிது நேரத்தில் அவர் விரும்பிய பண்டம் செய்யப்பட்டது. பாவலர் மிக உன்னிப்பாக அடுப்பருகிலேயே நின்றுகொண்டிருந்தார். வாணலியை அடுப்பிலிருந்து அம்மையார் இறக்கும் பொழுது, 'இரு இரு' என்று நிறுத்தி விட்டு "டேய் தம்பி, அந்த இதைக் கொண்டுவா!" என்று கட்டளையிட்டார். தம்பி (அதாவது மகன்) ஒன்றும் புரியாது விழித்தார். பாவலர் "அ'தான் . . . . அந்த மணச்சாறு . . . அதை எடுத்துக்கொண்டு வா, என்று விளக்கினார். மகன் புரிந்துகொண்டு தயங்கியவாறு, "அப்...பா...!

(68-ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்ப் பேறு.

பாரதிதாசன்.

ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட;
'என்னை எழு'தென்று சொன்னது வான்!
ஓடையும் தாமரைப் பூக்களும் தங்களின்
ஓவியம் தீட்டுக, என்றுரைக்கும்!
காடும் கழனியும் கார்முகி லும் வந்து
கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும்!
ஆடும் மயில் நிகர் பெண்களெல்லாம் உயர்
அன்பினைச் சித்திரம் செய்க என்றார்!

சோலைக் குளிர்தரு தென்றல் வரும்; பசுந்
தோகை மயில் வரும்; அன்னம் வரும்;
மாலைப் பொழுதினில் மேற்றிசையில் விழும்
மாணிக்கப் பரிதி காட்சி தரும்;
'வேலைச் சுமந்திடும் வீரரின் தோள் உயர்
வெற்பென்று சொல்லி வரைக' எனும்;
கோலங்கள் யாவும் மலை மலையாய் வந்து
கூவின என்னை! - இவற்றிடையே,

இன்னலிலே, தமிழ் நாட்டினிலே யுள்ள
என்தமிழ் மக்கள் துயின்றிருந்தார்.
அன்னதோர் காட்சி இரக்க முண்டாக்கி யென்
ஆவியில் வந்து கலந்ததுவே!
இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக் கும் நிலை எய்திவிட்டால்
துன்பங்கள் நீங்கும்; சுகம் வரும்; நெஞ்சினில்
தூய்மையுண் டாகிடும் வீரம் வரும்.

The Boon Of Tamil.

- BHARATHIDASAN -

A throb I felt to write a verse:
"Write of me!" the Welkin said.
The leaping Stream, and Lotuses
Begged of me to be portrayed.
The Wood, the Field, the Summer Cloud
Tried each one to catch mine eye:
And damsels fair, like peacocks proud
Wished I sang of Love that's high.

The Breeze that coolness brings from glades,
Green-feathered Peacock and the Swan,
That ruby, Sun midst evening shades
In my mental picture ran.
The lancers' Shoulders broad and strong
Said, "we're mountains! sing our praise."
Thus beauteous sights before me throng
And shout at me to sing their grace.

But, ah, my poor Tamil folk
Of this ill-fated Tamil Land
Are asle-p. unmindful of their yoke.
I pity them; I bleed for them.
Oh, for an Education true
To the genius of this Tamil race
To end their woes, their peace renew
Courage and purity to raise.

ஆங்கில ஆக்கம். ம. இலெ. த.

தொடர் கட்டுரை......

'பகுத்தறிவாளன்' என்ற சொல்லுக்கே இறைநம்பிக்கை அற்றவன் என்று பொருள்படும்படி தன்மதிப்பு (சுயமரியாதை)க் கொள்கை உடையவர் சிலர் எழுதியும் பேசியும் வருகின்றனர். அறிவியலையே தன்மதிப்புக் கொள்கை என்று ஆர்ப்பரிக்கின்றன சில புத்தெழுச்சி ஏடுகள்! இவற்றிற்கெல்லாம் தக்க விடை கூற நம் நாட்டுச் சமயத் தலைவர்களோ, அவரடியார்களோ முன்வரவில்லை. காரணம் அவர்கள் புதைந்துள்ள மடமைச்சேறு! தன்மதிப்புக் கொள்கையாளரின் அறிவியல் வினாக்களையே அவர்கள் புரிந்து கொள்ளுமாறில்லை. இவ்விரு திறத்தார்க்கும் உற்ற மயக்கறுப்பான் வேண்டி,

அறிவு, பகுத்தறிவு, மெய்யறிவு ..?

-என்ற விரிவான மெய்யறிவுக் கட்டுரையொன்று தொடர்ந்து தென்மொழியில் வெளிவர விருக்கின்றது. கட்டுரைக் கருத்தைத் தக்கவாறு மறுப்பாரின் மறுப்பும், கட்டுரையாளர் விளக்கமும் ஒவ்வொரு கட்டுரையின் இறுதியிலும் இடம்பெறும். தென்மொழியன்பர்கள், இம் மெய்யுணர்வுக் கட்டுரையினைத் தவறாது படித்துப் பயன் துய்ப்பார்களாக!

-ஆசிரியர்.

திரைப்படக் கண்ணோட்டம்.

தமிழகத்தில் இன்று சூறைக்குளவிகள்போல் திரைப்படங்கள் புறப்பட்டு மக்களைத் தவறான வழியில் இழுத்துச் சென்று கொண்டிருப்பதனால், திரைப்படங்களின் உண்மை நிறை சொல்லுமுகத்தான் இப் பகுதி அடுத்த இதழிலிருந்து தொடங்கப் பெறும். (ஆர்.)

(65-ஆம் பக்கத்தொடர்ச்சி)

அது பா . . . . க்..கு...'' என்று கூறுதற்குள், ''எல்லாம் எனக்குத் தெரியும்; போய்க் கொண்டுவா . . .'' என்றார் பாவேந்தர். மகன் கொண்டுவந்து கொடுத்துவிட்டு நடப்பதை வேடிக்கை பார்த்தார். பாவேந்தர் குப்பியிலிருந்த மணச்சாறு முழுவதையும் வாணலியில் கொட்டி, அங்காந்து நின்ற அம்மையாரை, ''உம். . . இப்பொழுது கிளறு . . .'' என்று ஊக்கப்படுத்தினார். எல்லா வேலையும் முடிந்தது. பாவேந்தரைச் சுற்றி வளைத்து எல்லாப் பிள்ளைகளும் உட்கார்ந்தனர். பாவேந்தரே சிறுகரண்டியில் பண்டத்தை எடுத்து எல்லாருடைய இலைகளிலும் சிறிது சிறிது வைத்துத் தாமும் சிறிது வைத்துக்கொண்டார். ''உம் . . . நல்லாயிருக்கும் . . . தின்னுங்கோ!'' என்று ஆணையிட்டார். பிள்ளைகள் தயங்கின. பாவலரோ இரண்டு மூன்று வாய் எடுத்துப் போட்டு, ''மிக நல்லாயிருக்கே . . . '' என்று கூறிவிட்டு, மேலும் எடுத்து உண்ணத் தொடங்கினார். அவர் முகம் மாறிவிட்டது . . . . தொண்டை கரகரத்தது . . . தாம் செய்த பிழையை உணர்ந்து, 'நீங்க'ல்லாம் சாப்பிடுங்கோ; நான் ஆறினப்புறம் சாப்பிடுகிறேன். . . . அப்பத்தான் நல்லா'ருக்கும்' என்று கூறி எடுத்துக்கொண்டு அவர் அறைக்குப் போனார். மகன் பின்னாலேயே போனார். பாவலர், ''நன்றாய்த்தான் இருந்திருக்கும். ஆனா . . . இது பழசுபோல இருக்கு . . .'' என்று அழாக்குறையாகக் கூறினார். பிறகு ஒரு வாணலி பண்டமும் வீணில் கீழே கொட்டப்பட்டது.

பெயர்ப்பட்டியல் 5.

பாவாணர் பொருட் கொடைத் திட்டம்.

(6—4—64 முதல் 5—5—64 வரை
அலுவலகத்திற்குப் பணம் விடுத்த அன்பர்கள்)

இளஞ்சித்திரன் வழி. (இரண்டாம் முறை)

தஞ்சை அரசினர் அடிப்படை ஆசிரியப் பயிற்சிப்பள்ளி மாணவர்கள்: தலைக்கு ஓர் உருபா ஒரு காசு மேனி வழங்கியவர்கள்:

திருவாளர்கள்: இரா. இராமமூர்த்தி, பழனிவேலன், சீ. வீரையன், இரா. சோமசுந்தரம். 4 04

திரு. ப. அடைக்கலம். 1 05

தலைக்கு 51 காசு மேனி கொடுத்த மாணவர்கள்:

திருவாளர்கள்: கு. அரங்கராசன், மா. பாலையா, மு. வீரு, மா. கோவிந்தசாமி, அ. நாகூரான், சி. கணேசன். 3 06

தலைக்கு 50 காசு மேனி கொடுத்த மாணவர்கள்:

திருவாளர்கள்: ச. துரைஅரசன், கோ. உலகநாதன், மா. கண்ணப்பன், கோ. சந்தானகிருட்டிணன், சி. செல்லப்பன், வி. சின்னப்பன். து. கிருட்டிணமூர்த்தி, சு. பலராமன், சா வெள்ளைச்சாமி, சி. சருக்கரை, கு. குருசாமி, மு. நாகராசன், வை. நி. கோவிந்தராசன். இரே. குஞ்சப்பன், ப. நாராயணன். 7 50

திரு. நா. கோபாலன். 0 55

தலைக்கு 25 காசு மேனி கொடுத்த மாணவர்கள்:

திருவாளர்கள்: ச. ஃகென்ரிதாசன், செ. துரை அரசன், பா. தாவுசா, கோ. பொன்னையா. பி ஆரோக்கியசாமி. 1 25

சரபோசி மன்னர் கல்லூரி விடுதி மாணவர்கள்:

திரு. வ. அர. இராதாகிருட்டிணன். 5 00

திரு. சி. சந்திரபோசு. 2 01

தலைக்கு உருபா. 2 மேனி கொடுத்த மாணவர்கள்:

திருவாளர்கள்: சோ. சுயம்பிரகாசம், வே. சிதம்பரம், வீ. தங்கராசு, கி. சுப்பிரமணியன். 8 00

தலைக்கு ஓர் உருபா ஒருகாசுமேனி கொடுத்த மாணவர்கள்: திருவாளர்கள்: மு சிவஞானம், சிவ. அழகப்பன், மு. நடேசன், ம. மார்க்கம், நா. மருதமுத்து, கோ. வீராசாமி, சிவ. புண்ணியம். 7 07

தலைக்கு உருபா 1 மேனி கொடுத்தமாணவர்கள்:

திருவாளர்கள் ப. கந்தசாமி, ப. அங்குஅரசன், வ. கிருபாநந்தம், செ. சாரநாதன், இலக்குமிநாராயணன், அ. அருணாசலம், அன்வர்பாட்சா, பி. தியாகராசன், த. நாகராசன், பெ நடராசன், இரெ. சுப்பிரமணியன், மு. அரிதாசு, இரா. கலியமூர்த்தி, சோ. கண்ணையா ந. அரசமாணிக்கம், கு. போசு இரா. இராதாகிருட்டிணன், வை. திருஞானசம்பந்தம். கோ. அண்ணாதுரை, த. அடைக்கலம், மா. இலக்குவன், சு. பாலகிருட்டிணன், இளங்கோவன், ந. இராமலிங்கம். மு தியாகராசன், சா. கார்த்திகேயன், மு. அப்துல் சாதிக், சி. அரசரத்தினம், வீ. அய்யாத்துரை, கோ. அர்ச்சுனன், இரா. சுவாமிநாதான், த வேலாயுதம், அ. கணபதி, சி.சு அரசன், இரே. செயராமன், கோ. கணேசன் மு. தமிழ்மணி, சி. துரை–அரசன், ஆ. பெ. சண்முகம், வி. இரத்தினபாண்டியன், ஆ. துரை அரசன், உ. இராமசாமி, சு. செல்லதுரை, ச. சௌந்தரராசு, ந சின்னச்சாமி. 46 00

தலைக்கு 50 காசு மேனி கொடுத்த மாணவர்கள்:

திருவாளர்கள்: இரா. வைத்தியலிங்கம், அ. ஞானசிகாமணி, க. கோவிந்தராசு, ப. சண்முகம், இரே. சகநாதன், மு. குருமூர்த்தி, ப நாராயணசாமி, க. அரங்கசாமி, ச. மாசிலாமணி, க. கலியராசு, த. சின்னதுரை, ந இராசன், சுபாசுசந்திரபோசு, கி. மருதமுத்து, இரா. மகாலிங்கம், கு. சச்சிதாநந்தம், அ. இரா. சௌந்திரராசன், க.சீவானந்தம், கோ. செங்குட்டுவன், சௌ. தினகரன், சு. இரத்தினசாமி, கா. வே. முனிசாமி 11—00

திரு. வெ. துரையரசு, விரிவுரையாளர், கிறித்துவக் கல்லூரி, தாம்பரம் 10—00

திருவாடனை க. உ. பள்ளித் தமிழாசிரியர் திரு. நா. சுப்பிரமணியன் வழி 10, 11-ஆம் வகுப்பு மாணவர் விடுத்த தொகை. 35—00

நாகரசம்பட்டி க. உயர்பள்ளி எட்டாம் வகுப்பு – 'ஆ' பிரிவு மாணவ, மாணவியர் விடுத்தது 4—00

ஈரோடு கூட்டுறவுத் துணைப்பதிவாளர் அலுவலகம் திரு. பெ. இராமசாமி அவர்கள் கைவழி அத்துறையன்பர்கள் தலைக்கு 1 உருபா கொடுத்தது

திருவாளர்கள்: இரா. கந்தசாமி, ஏ. இரா. கந்தசாமி, கு. கு. சுப்பிரமணியன், ப. சொ. சென்னியப்பன், அ. அர்த்தனாரிசுவரன் 5 00

சென்னை மாநிலக் கல்லூரி மாணவர், பட்டாளம். ப. சிவ குமரன் வழி நண்பர்கள்: தலைக்கு உருபா 2 தந்தவர்கள்.

திருவாளர்கள்: ப. சிவகுமரன், கு. வி இரவீந்திர நாதன், ஆ. சு. கண்ணையன், அப்பாத்துரை. 8—00

தலைக்கு 1 உருபா தந்தவர்கள்:

திருவாளர்கள்: சு. பாலசுந்தரம், ச. நா. சுப்பிர மணியன், க சிவகுமார், இலக்குவன், வெங்கடேசன். எபிநேசர் தானியேல், சாகுல்அமீது, இர. செல்வ ராசன், செ. இர. தனசேகரன். மணி. மனோகரன், மல்லிகார்ச்சுனன், செயதேவன், பட்டப்பா, இரவி, வ. பா. இளங்கோவன், ச. அழகிரிசாமி, ம. பு. அனந்தபத்மநாபன், க. கிருட்டிணமூர்த்தி. 18—00

தலைக்கு 50 காசு கொடுத்தவர்கள்:

திருவாளர்கள்: கலியாணசுந்தரம், க. ப. பிச்சுமணி வீ. சண்முகம், சி. பழனி, கோ. தி. முருகப்பன், ந. வரதராசன், சி. இராசசேகரன், அர. சந்தானம், வாசுதேவன், பூவராகன், கபாலீசுவரன், வீ. இராம கிருட்டிணன், வ சேசாத்திரி, சு. மனோகரன் 7—00

புத்தகரம் ஊ. ஒ. தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. இரா. முத்துராமன் 2—00

திரு. சே. க. முருகன் சங்கரன்கோயில் 2—50

தலைக்கு 2 உருபா கொடுத்தவர்கள்:

திருவாளர்கள்: இரா. கு. இராமசாமி, இராவத்தூர், கோவை, மு. மகிழரசன், நுங்கம்பாக்கம், கரு. இராசு, பணிக்கோட்டை, மூகவை, சே. அர. எழிலன் (சி.என். நடராசன் கை வழி) 8—00

தலைக்கு 1 உருபா விடுத்தவர்கள்:

திருவாளர்கள்: கவி. முத்தம், சங்கரன்கோவில், 2—00

சி. என். நடராசன் கோயம்புத்தூர்	0—50
திரு. இரா. கிள்ளிவளவன், சென்னை-5	0—55
,, இன்பன் ஆடுதுறை	1—05
,, இரா. கிள்ளிவளவன் இரும்புதலை	1—05
,, ஏ வி. பி. இளங்கீரன் திருச்சி	1—01
,, இரங்க. வரதராசன்	
மொத்தம்:	202—19
முன் மொத்தம்:	1499—52
தொகு மொத்தம்:	1701—71

எவர்கொல் துணையே!

—o—

எவர்கொல் துணையே! கவர்புற் றனையே!
குவடுபட நடந்த சுவடும் மாறுது,
வான்பட் டதிருங் குரலுந் தேயாது,
வல்லுயிர் செகுக்க மாற்றலர் வெரூஉம்
கொல்லயில் விழியின் இமையுங் குவியாது,
முன்னைப் பெருமையின் முங்குபே ருணர்வால்
அன்னைத் தமிழ்க்கே அலங்கல் சார்த்தித்
தீச்சுடர் எழுத்தால் பாச்சுடர் கொளுத்தி,
ஓச்சிய தடங்கை வீச்சும் ஓயாது
உயிருணர் வூரப் பொழிந்துயர் வாழ்க்கைப்
பயிர்செழிப் பூரப் பாடினை கொல்லோ!
இனியே,
துவரிதழ்த் தாமரை கவர்துளி மாந்தி
உவப்புற முரலும் கருவண் டொப்ப
இயற்கை தூங்கும் புலவரும் இல்லர்!
மயற்கை அகற்றும் மறவரும் இல்லர்!
மருட்சி யகற்றிடு புரட்சியும் இல்லை!
இருளொடு துஞ்சும் தமிழகம் எழவே
அருள்பொழி நெஞ்சத் தறமும் மடிந்தது!
தயிர்கடை மத்தம் ஆகித் தமிழர்
உயிர்கடைந் தெடுக்கும் நின்பெரும் பிரிவால்
உள்ளமும் அறிவும் ஓய்ந்த
கள்ளமில் உணர்வின் கனியுநர் தமக்கே!

— துரை. மாணிக்கம்.